தட்சிணாமூர்த்தி

ஜால சூத்திரத்திரட்டு-500

தாமரை நூலகம், சென்னை - 26.

தட்சிணாமூர்த்தி

ஜால சூத்திரத் திரட்டு - 500

பதிப்பாசிரியர்
எஸ். பி. இராமச்சந்திரன்

தொலைபேசி எண் : 23620249

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ .காலனி
வடபழனி, சென்னை - 600 026,

தாமரை வெளியீடு எண்	:	256
இரண்டாம் பதிப்பு	:	டிசம்பர் 2013
மூன்றாம் பதிப்பு	:	மார்ச் 2019

உரிமை பெற்றது.

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	தட்சிணாமூர்த்தி ஜால சூத்திரத்திரட்டு- 500
பதிப்பாசிரியர்	:	R.C. மோகன்
நூலின் தன்மை	:	சித்த மருத்துவம்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ.காலனி, வடபழனி, சென்னை - 600 026.
இரண்டாம் பதிப்பு	:	மார்ச் 2019
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத் தாள்
எழுத்தின் அளவு	:	11 புள்ளி,
மொத்த பக்கங்கள்	:	116 + VIII
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. 60/-
கணிப்பொறி	:	கார்த்தி கிராபிக்ஸ், சென்னை- 26
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட், சென்னை- 34.

தொலைபேசி எண் : 23620249

91/4

பதிப்புரை

தட்சிணாமூர்த்தியின் பெயரால் வெளியிடப் பட்டிருந்த போதிலும் இந்நூல் அகத்தியராலேயே அருளப் பட்ட தென்பது நூலைப் படிக்கும் போது நன்கு விளங்குகிறது.

87 வது பாடலில்

எத்திசைக்கும் என்பேர் சித்தரெல்லாஞ் சொல்வார்
எனக்குப் பேர் அகத்தீசர் என்பது வாமே

என்று கூறுகிறோர்.

அகத்தியர் மேல் அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டவர்கள், சிவபெருமானின் ஞான மூர்த்தமாகிய தட்சிணாமூர்த்தி யாகவே பாவித்து அவரை வணங்கி உபதேசம் பெற்று வந்தார்கள் என்ற உண்மையையே அது விளக்குகிறது.

இந்த நூலில் மருத்துவம் சிறிதும் மாந்திரிகம் அதிகமாகவும். கூறப்பட்டுள்ளது. அதர்வண வேதத்திற்குரிய மாந்திரிக வித்தைகள் மைவித்தைகள் போன்றவை பெரும்பாலும் பரிபாஷை (மறைப்பு மொழியால்) கூறப்பட்டவை ஆகும். அவற்றை அப்படியே எடுத்துக் கொண்டு செயலில் ஈடுபட்டால் மாபாவத்திற்கு ஆளாக நேரும்.

மாந்திரிகத்தில் ஈடுபடுமுன் நல்லாசானை அடையவேண்டும். ஆசான் தொட்டுக் காட்டினாலே எது எப்பொருளைக் குறிக்கிறது என்பது விளங்கும். அப்படியில்லாமல் தானாகச் செய்யத் தொடங்கினால் தவறாகவே முடியும் கோரிய பலன் கிடைக்காமல் போவது மன்றி கொடிய பாவங்களுக்கு ஆளாகவும் நேரிடும்.

அதனாலேயே இந்த நூல்களை வெளியிடக் கூடாதென்று கொடிய சாபங்களையும் சித்தர்கள் கூறியுள்ளனர்.

மாந்திரிகமும் ஒருவகை அறிவியல் என்பதால் அது அழிந்து போகக் கூடாதென்ற எண்ணத்தினாலேயே இந்தநூலை வெளியிடுகிறோம். நல்லவர்கள் நல்லாசானைக் கொண்டு நன்று தீதறிந்து செயல்பட்டால் எல்லாம் நன்மையாகவே முடியும்.

வணக்கம்

எஸ்.பி.இராமச்சந்திரன்

பொருளடக்கம்

முற்றும்

சிவமயம்

தட்சிணாமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பெருநூல் சௌமியசாகர மாயிரத்தைந்நூறுக்கு திறவுகோலாகிய ஜாலசூத்திரத் திரட்டு 500

காப்பு

ஆதியந்தம் பூரணமாய் நின்றிலங்கும்
அகண்ட குண்டலித் தாயருளே போற்றி
சோதியந்த மெங்கும் நிராமயமாய் நின்ற
சொர்ண பரிபூரணத் தினருளே போற்றி
வேதியந்தஞ் சுழினை பிராணாய மேவும்
வெகு கோடி ரவியொளியின் விசுவன்போற்றி
பாதிமதி சடையணிந்தோன் கமலமேவும்
பகிரண்ட கணேசனருள் காப்பதாமே. 1

அருள்தருகுஞ் சின்மயத்தின் ஆயிபாதம்
அன்பாகப் பூசித்து மனந்தாண்டி
அருள்தருகும் நேமிபதம் வாமங்கொண்டு
வஸ்துவைத்தான் தினந்தோறும் அடிபணிந்து
நருள்தருகுஞ் சுவாதிஷ்டானம் பிரமன்பாதம்
நங்கென்று நாள்தோறும் நமஸ்கரித்து
பொருள்தருகுஞ் சரஸ்வதித் தாய் கமலபாதம்
பூசித்துச் சுழிமுனையிற் பூண்டோங்காப்பே. 2

காப்பாருங் கரிமுகன் வல்லபையுங்காப்பு
கர்த்தனுமை நந்திபதங் கமலங் காப்பு
காப்பாருந் தன்வந்திரிபாதம் காப்பு
தழைத்தவென் குருவாமசுவினியே காப்பு
சீப்பாகும் பூரணமே மனமேகாப்பு
தேவியுமை செகஜால வாணிகாப்பு
மூப்பாகுஞ் சிதம்பரத்தின் வாலைகாப்பு
மூதண்டவாத காவியங் காப்பாமே. 3

மதிக்கருவதனால் சகலசித்தி

மூதண்ட மாதி யுப்பு வழலையாதி
முனையான பனங்குலைதான் முளையாகில்
மூதண்டமான தலை ஓங்காரமாகில்
முந்தி சவர்க்காரமதாய்ச் செல்பவராகில்
மூதண்ட வாதமெல்லா மதிலேசித்தி
முப்பூவு முக்கருவு மதிலேயாகும்
மூதண்டவரை பன்னிரண்டு மாடு
முடித்தகுரு வதிதமெல்லா முடிக்கலாமே. 4

உலகத்தோர் தேறுதலறிய

முடிக்கலாஞ் சௌமியந்தா னாயிரத்தைந்நூறு
மூதண்ட பெருநூலு மதிதபீடம்
முடிக்கலாமதைக் குறுக்கிவெண்ணூற் சொன்னோ
முறுதிபெறுஞ் சித்தருக்கு ஐந்நூறிந்நூல்
முடிக்கலாந்திரட்டி யிந்நூல் கருக்கடையாய் சொல்வோ
முலகமதில் மானிடர்கள் தேறுதற்கு
முடிக்கலாங்கைக் கருணை திரட்டைந்நூறு
முலகமெல்லாம் வெளியாக வுரைப்போநாமே. 5

அஷ்ட யோகத் தொகுப்பு

முறையான விந்நூல் செகத்தோர் கண்டோரானால்
உறுதிபெறுஞ் சித்ததிகமாகிப் போவார்
வறையான அரையாருங் காண்பாரையா
வாசியிட நிலையறிந்து வமிர்தமுண்பார்
குறையாத முப்பூவை முடித்துக் கொள்வார்
குவலயத்தோ ராசைவிட்டுக் கற்பமுண்பார்
நிறையான சமாதியிலேயிருந்து வாழ்வார்
நிலைதவறார் குருவினடி நிரஞ்சனமாவாரே. 6

குருபுத்தியறியவும்

நிரஞ்சனமாஞ் சிவயோகஞ் சத்தியோகம்
நிலையான வாசியோகஞ் சமாதியோகம்
வரஞ்சனமாங் கற்பயோகம் நிராதாரயோகம்
வளமான கவுனயோகம் குளிகை யோகம்
அரஞ்சனமா மட்டயோகம் பெற்று வாழ்வார்
அருளினார் திரட்டு ஐந்நூறு அறிந் தோராகில்
குரஞ்சனந்தான் வாராது உலகத்தோர்க்கு
குருபுத்தி வந்திடினுங் குறையா தென்றே. 7

நூல் சும்மா அகப்படாது

என்றான நூல்சும்மா அகப்படாது
எள்ளளவுப் பிரமாணம் ராசிகூட்டி
நன்றான நூல்சேரும் பேதை மனமாகா
நலமான ராசியுள்ளோர் நண்பாய்க்கேளும்
அன்றான நூல்சேர்ந்தாலுடனே ஐயா
ஆசையென்ற பெண்டுபிள்ளை பாசம்வைக்கா
வன்றான நூலெல்லாம் இராப்பகலும் ஆய்ந்து
மனதில் பலபுத்தி யெண்ணி வழலைபாரே. 8

இராசியுள்ளவர்க்குச் சேரும் பதினாறு லட்சம் காப்பு

வழலையென்ற பொடிஅறிவாய் அகத்தியன் நான்சொன்ன
வசனித்தோம் பதினாறு லட்சங்காப்பு
மழலையென்ற பேய்மக்காள் மலைக்கப்போறீர்
மகத்தான நூற்பெருமையார் அறியப் போறார்
பழலையென்ற பஞ்சகாவியம் எண்ணூறு
பார்த்திடினும் சௌமியத்தோடு ஏழுநூறு
குவலயத்தோர் எழுநூல் சூத்திரமும் கண்டு
குருமுடித்தால் அவன்ஞானி வாதியாமே. 9

பெண்டுபிள்ளைக்கு ஆசான் வைக்கவும்

வாதியென்றால் இவ்வளவும் பார்த்தாராகில்
வசனித்தோம் ஆயுசுதான் இருக்க வேண்டும்
சேதியென்றால் இதுசேதி பெண்டுபிள்ளை
சிதறாமல் வாக்குஒரு ஆசான்வைத்து
சாதிஒரு நிலையாக நின்றுகொண்டு
சமத்தான முப்பூவை முடித்துக் கொண்டு
வேதியெனு மதன்பிறகு கற்பங்கொள்ளு
விளங்கவே கற்பதேக மானவாறே. 10

தேகத்திற் குறுதிபெறுந் தொகுப்பறிய

வாறான தேகம் கற்போல் ஆச்சுதானால்
வளம்பெறவே கண்ணோட்டம் தளமாய்ப்பாரு
தேறான அதன்பிறகு சிவயோகந்தான்
தெளிவதற்கு அட்ட யோகத் திறத்தைக்காணு
மாறான அதன் பிறகுவாசி நிலைகாணு
வாய்வுபத்துஞ் செனித்துநின்று ஒடுக்கங்காணும்
ஆரான ஐயப்பா பாசநிலை கண்டு
அதன்பிறகு அட்டமா சித்துமாடே. 11

அட்டமாசித்து விளையாடவும்

அட்டமாசித்து விளையாடுதற்கு அறைகிறோம்
திரட்டு ஐந்நூறு கொடுக்கப் போறார்
முட்டியெடுத் துண்டாலும் கொடுக்கார் இந்நூல்
மோட்சமிந்த திரட்டைந்நூறு கொடுத்தாரானால்
துட்டருக்குஞ் சித்தியில்லை அனுபோகிக்காமல்
துன்மார்க்கர்க்கு அடுக்காது தொட்டகுறையிருந்தால்
திட்டமென்ற அறுபத்துநான்கு சித்துஞ்
செணத்திலே தெளியலாம் தேறலாமே. 12

தெளிவோர்க்கு இந்நூலில் திறந்து சொல்வோம்
சித்தரிட ஆட்டமெல்லாம் வெளியாய்த்தானும்
அறிவதற்கு இந்நூலைப்பாடிப் போட்டோம்
அறிவில்லாச் சுணங்கருக்கு வாராதையா
வெளிவதற்கு வேதாந்தி நீயேயானால்
விள்ளாதே கருவதனை வெளியிற்போடா
மளிவதற்குப் புலத்தியனே மகராசயோகி
மகிழ்ந்திடினு மிந்நூலை மறைத்துவையே. 13

மகராசயோக கருவறியவும்

மறைத்த பொருளடக்க மெல்லாம் புலத்தியாகேள்
மகராச யோகமதன் கருவைச் சொல்வோம்
வறைத்த மகாராசயோகஞ் செய்யவென்றால்
வசனிப்போம் கருக்குருவாய்த் திரட்டு ஐநூறில்
செரைத்த செகமனிதரிலே புலத்தியாகேள்
செனித்ததடா பிரமகுலஞ் செனித்தவாறு
நரைத்தகிழமாகாது பிராமண ஸ்திரீயாகில்
நல்ல பத்துவயதாகும் பனிரண்டாமே. 14

பிராமணஸ்திரீ நாதங்கழட்டுகிற விதமறிய

ஆமென்ற பதின்மூன்றில் அதீதமாகும்
அடுத்த பதினாறில் பதினெட்டுமாகும்
ஏமென்ற எட்டும் ஒன்பதுக் குள்ளாகும்
இவ்வளவும் மெத்தநன்று இயம்பக்கேளு
நாமென்ற நாதமதைக் கழட்டலாகும்
நாயகியாள் பிராமணப் பெண்ணடத்தை யாகில்
வாமென்ற மகராசயோகத் துக்கு வஞ்சி
ஈன்ற தலைப்பிள்ளை பெண்ஆணாமே. 15

விந்திளகுதல்

ஆணென்றால் பெண்ணிலையு மதிகம்நன்று
அடுத்த பெண் ஆணிலையுமதிகம் நன்று
கோனென்றால் மகாராச யோகத்திற்குக்
கூறினோம் பிரமகுல மாண்பிள்ளையாகில்
வேனென்றால் விந்தினிட பலத்தைக்கேளு
விளங்குவோம் பதினாறில் மெத்தநன்று
வானென்றால் இருபத்து ரண்டில் நன்று
அதீதம் நன்று இருபத்தைந் தில்நன்றே. 16

பெண்நாதங் கழட்டுகிற நாளறிய

நன்றான விருபத்தெட்டில் நன்று
நலத்த முப்பதுக்குள்ளே மெத்த நன்று
வென்றான இவ்விரண்டில் ஆயு சுதானாகில்
விந்துவதைக் கழட்டநன்று நரைக்கலாகா
அன்றான நரைத்த கிழமானாலையா
அவ்விந்து தான் இளநீராகுமாகில்
மன்றான விந்து பலனாகாதையா
மாணாக்காள் அறிந்திடினும் மகிமைதானே. 17

ஆண்விந்து கழட்டு நாளறிய

தானென்ற மகராச யோகத்துக்குத்
தைமாதம் ரோகிணி நாள் குருவாரமாகில்
ஆனென்ற நாயகிதானவள் தன்நாதம்
அருளினோம் கழட்ட நன்று ஆணைகேளும்
கோனென்ற வைகாசி பூசமாகில் செனித்த
சுக்கிரவார நாளக்காள் தன்னில்
மானென்ற ஆண்பிள்ளை விந்துபலநன்று
மப்பலத்தில் கழட்ட நன்று மதிதமாமே. 18

மதிதமாய்ச் சொல்லுகிறோம் புலத்தியாகேள்
மகராச யோகத்திற்குத் தலைச்சன்பிள்ளை
அதிதமதா யுரைக்கக்கேள் பத்துத் திங்களாகில்
அருளினோம் மெத்தநன்று பிரமகுலமாகில்
வதிதமது அக்குலத்தில் ஆண்பிள்ளை உதித்தால்
வசனித்தோம் உதித்த ஐந்தாநாள் தன்னில்
உதிதமென்ற வந்நாள் நடுப்பாதிநேரம்
ஒருவருக்குந் தெரியாமல் உரைக்கக்கேளே. 19

வானல மூலத்தியானம் உருநூற்றெட்டு

உரைக்கக்கேள் சடலமெங்குங் கரித்தூளிடித்து
ஒருமைபெற ஏரண்டத் தெண்ணெயதிற் குழைத்து
வரைக்கக்கேள் தேகமெங்கும் பூசியதைத்தானும்
வஸ்துவைநீ பானமதாய் உட்கொண்டையா
நரைக்கக் கேள் வாலையிட மூலமதைக்கேள்
நவிலுவோம் ஓம்கிறாங் கிறியுங்கிலியுந் தான்
முரைக்கக்கேள் மூன்றெழுத்தைச் செபித்து நூற்றெட்டு
முடலெங்குந் திக்குபந்தனஞ் செய்வாயே. 20

திராபந்தனம்

செய்து பந்தனஞ் செய்தா லொருவனைக் காணும்மகிமை
சௌயாதே சுடுகாட்டு எலும்புக்கரிகா
நெய்து பிராமணஸ்திரீ தான்வயது முதலாகா
நீரதனி லிறந்தவளைக் கொளுத்தினாக்கால்
உய்துநீ யாற்றியது மார்க்கண்டம் வேகும்போது
ஒன்றாக எழுகின்ற கரண்டியது நன்றாய்
சொய்தியந்தக் கரண்டியதாற் சொருகுநெய்யைப்பிடித்து
ஒகோகோ நன்று சீசா நெய்யைவாறே. 21

பிரம்மாண ஸ்திரீ நீரிலிறந்தவள்
கொளுத்து நெய்

வார்த்திடீரந் நெய்யிற் பலதரந்தானும் கொண்டு
வஞ்சிமார் முதுகெலும்பை வளமாய்க் கொண்டு
ஆர்த்திடீரவ் வெலும்பை இடித்துத் தூள்செய்து
வடிகட்டித் தூளெடுத்துப் பீங்கானிலிட்டு
சேர்த்திடீர் மத்தித்து வுண்டையாய்ச் செய்து
செயமான ரவிதனிலே செணப்போது வைத்தால்
நாற்றிசையு மயக்கும் பொடிபொரி போல் பொரியும்
நவிலுவோம் பொடியிற் சூடன் அரைப்பலமே. 22

வஞ்சி முதுகெலும்பு
வாசனைப்பொடி முதலையோட்டுப் பாண்டில் வைக்கவும்

அரையாமலப் பொடியிற்சூடன் பொடிசேர்த்து
அன்பான கஸ்தூரிகொச்சி மஞ்சள்கழஞ்சு
வரையாத வெட்டிவேர் மருவுமருக் கொழுந்து
மைந்தனே காற்பலந்தான் தூளிடித்து
முறையான முன்சொன்ன பொடிதனிற்கலந்து
முதலையோ டதுபரண்டில் பொடியதனையிட்டு
துறையான புவனையிட மூலமதைக்கேளு சொல்லுவோம்
ஓம்கிலியும் சிறியும் வவ்வென்கோ. 23

புவனை மூலத்தியானம் நடுப்பாதிநேரம்

என்னவே ஒருநூற்றெட்டு செபிப்பீர்
இயம்பினோம் செகச்சாலப்பொடி சித்தியாகும்
பன்னவே பொடியதனிற் பணவிடைதான் எடுத்துப்
பன்மைபெற நீரிலிறந், தவள் நெய்விட்டு
அன்னவே பணவெடையிற் பாதியிட்டுக் குழைத்து
அணிந்திடுவாயதில் தமர்தாய் நெட்டிதனிலையா
பொன்னவே பொடியதனிற் பணவிடைதான் கொண்டு
புனிதமுடனடுப்பாதி நேரஞ் செல்லென்றே. 24

வயிரவர் தியானம்

செல்லுநீ தலைச்சன்பிள்ளை யீன்றவிடமேகிச்
சுவரேறிக் குதித்துநீவாசல் தனில்வந்து
பல்லுநீ வாய்திறக்கா வயிரவத்தின்மூலம்
பன்மை பெறச்சொல்லுகிறோம் ஓம்சவ்வும்கிறியும்
அல்லுநீ அரிஙூயும்சிங் அங்குசாயா
அருளுவாய் நூற்றெட்டுவுருச் செபிப்பீராகில்
நல்லுவாய் வயிரவனும் பாதை பழிகொண்டு
நடத்திவைப்பார் புலத்தியனே நலமாய்ச் செல்லே. 25

செகசாலப் பொடி

செல்லவே செகசாலப் பொடியதனைக் கொண்டு
சீராகத்தூவி விட்டுச்சணப் போதிலையா
முல்லுவே மனிதரவர் முழித்திருந்தாலும்
முதண்டவாடை பொடிவாசம் பட்டபோதே
தெல்லுவே திகைப்பூண்டை மிதித்தபாவனை போல்
திசைகலங்கி மதிமயங்கிக் கனித் திரையாகில்
முல்லவே மூதேவி பிடித்தவரை மயக்கும்
மூவுலகு மயக்குமே செகசாலப் பொடியிதுவே. 26

காளபயிரவர் மூலம்

இதுவான பொடி ஒன்று செகத்தோர் செய்தாக்கா
லியம்பினோ மவர்க்கீடு எவருமுண்டாமோ
இதுவான பொடியீச னெந்தனுக்கே சொன்னா
ரியம்பினதோர் பொடிதூவியில்லம் நுழைந்ததையா
வதுவான வயிரவர் தியான மூலம்
வசனித்தோ மக்கதவு தாப்பாள் போட்டிருந்தால்
அதுவான காளபைரவர் தன்மூலம்
அறைகிறோம் புலத்தியனே யன்பாய்க்கேளே. 27

கதவின்றாள் திறக்கும்விபரம்

அன்பாக நாம்சொல்வோ மூலமதைக் கேளும்
அருளான சிறிம்சிங்கு அவ்வும் அறிம்ஸ்ரீயும்
மன்பாக நூற்றெட்டு உருச்செபிப்பீராகில்
மகத்தான கதவினிட தாப்பாள் திறக்கும்பாரு
தெம்பாக இல்லமதில் நுழைந்து நீயப்பா
திருவான மகிபாலுனுருவதனை யெடுத்து
வெம்பாக வெகுசெனங்கள் பார்க்கப் பொடிதூவி
விறேலென் றெழும்பீநீ வீசிதமதாய் வரவே. 28

விட்டகுறை

விசிதமதாய் நீயிருக்கு மில்லமதி லேகி
விளங்கவே வந்துநீ பணவிடைதான் றூளில்
தசிதமதாய்த் தலைப்பிள்ளைவாயிற் பொடியிட்டுத்
தருவாக அரைக்கை சென்றதேயாகில்
உசிதமதாய் வாயிற்காவென்று போகும்
உனக்குக் கொலைப்பாத கங்களொரு நாளுமில்லை
வெசிதவிட்ட குறையது தான்விதிப் பயனதாகில்
வேதாந்த முன்னோர்கள் விளங்கும் வாக்கே. 29

முன்னோர்கள் வாக்கு

அவர்வாக்கால் நேமிந்தவடை ஆறுதான்பாரு
அடைவான சிசுபாலன் முடியதனைவாங்கி
மவரான மயிர்ச்சவ்வு கோரையதைப் போக்கி
மண்டைமூடி தலையண்டம் பேரண்டம்வாங்கி
வ ரான முடிபிளந்து மூளையதைஐயா
வசனித்தோ மாககானில் மூளையதையிட்டு
கவரான தலையண்ட வோடுகளைக் கொண்டு
கருணை பெறக் கல்லுரலிலிட்டு தாக்கே. 30

பேரண்டச் சுன்னம்

தாக்குவாய் பேரண்டச்சுன்னஞ் செய்யும் வகைகேள்
தலைப்பிள்ளை யண்டோட்டில் நாதமரைசேரு
வேக்குவாய் விட்டதிலேயரைச் சாமஞ்சாடி
விளங்கவேசாடையிலே மெழுகது போலாகும்
ஆக்குவாய் மெழுகைத் தோண்டிக் குகைசெய்து
அடைவான ரவிதனிலேயக் குகையை யுலர்த்தி
பாக்குவாய் வைத்ததனை மூளையதைக் கொண்டு
பரிவான கல்வமதி லிட்டு நீபாரே. 31

எண்ணெய்க் கசிவிறங்கும் விதமறிய

இட்டு ஆண்விந்து சேர்கல்வ மதிற்றாக்கி
யிணைவிடா திருசாமம் சாடிவிடும்போது
நட்டு நவநீதமதுபோ லருவிபாயும்
நவிலு மப்பாகமது கண்டு அதை வழித்து
பெட்டு பெறப்பீங்கானி லிட்டித்னைஐயா
பேராக விருசாமமா முகம்வைத்தால்
நெட்டுவது நல்லெண்ணய் நிறமது போலிறங்கும்
நிமிஷத்தில் வெண்ணெய் கழட்டிவிடு மென்றே. 32

பழம்புளி

என்றான அக்கசி விறங்கிடும் போது
என்ன சொல்வேன் பிட்டதுபோ லதுவுமாகும்
நன்றான அப்பிட்டை யெடுத்து நீஐயா
நலமான கல்வமதில் நண்பாயதையிட்டு
வென்றான விந்துசேர் விட்டதிலே தாக்கி
விசிதமதா யிருசாமம் சாடிடும்போது
பன்றான பழம்புளிபோ லாகுமிது பாரு
பண்மை பெறு மப்பாகம்வரு தலதைக்காணே. 33

வயது பதினாறுகளை

காணிடு மறுபடியும் நாதஞ் சேர்விட்டுக்
கணக்காக விரு சாமமாட்டியிடும் போது
வாணிடுமதி னுடையவாணி பதமெத்த
வயதுபதி னாறுகளை வசனிக்கப் போகா
காணிடு மஞ்சளதுபோ லதுமெழுகாகும்
நன்றாக வதையிழுத்தால் நாரதுபோலாகும்
தோணிடுமப் பாகும்கண் டதைவழித்துச்
செயல்பெற வேயுண்டை செய்திருகைய தனில்வையே. 34

சிலைபாகம் ரவிபாகம் கெசபுடம்

வைத்து அதன்மேல் மெழுகு கவசமதுசெய்து
வளமாக வெண்சீலை ஏழு மதுசெய்து
நைந்துரவி முகந்தனிலே யுலரவதை செய்து
நல்லவொரு சாமமதுகாய்ந்தா லதையெடுத்து
சித்துவறு பத்து நால்சரக் கதனையெல்லாம்
கெஷணப்போதில் செந்தூரம் சுன்னமதுவாக
பைத்துறவே பருங்கூடை முட்டைகெசபுடத்திதில்
பன்மை பெறப்புடம் போட்டுப்பரி வாகவாங்கே. 35

துல்லியமதீத வெள்ளை

பரிவாகக் கவசமதின்சீலை தனைவாங்கிப்
பாங்கானகுகை யுடைத்துப் பீங்கானிலையா
வரிவானசுன்ன மதைப்பார்த் திடும்போது மதனுதைய
வாணிபமென் னாற்சொல்ல வெளிதோ
நரிவானதுல் லியமாமதித சுத்தவெள்ளை
நாதாக்கள் பணிந்திடுவார் நண்புள்ளசுன்னம்
தெரிவானசுன் னமதைச்சீசா விலிட்டுச்
செபிப்பாய்சொர்ண வயிரவனையும் நீநன்றே. 36

சொர்ண வயிரவர் தியானம் சித்தியாகுதல்

நன்றானசொர் ணவயிரவரிட தியானம்
நவிலுவோம் புலத்தியனே நன்றாய்க்கேளு
வன்றானஓம் நங்சிறியும் அரியும் வாவாசொர்ண
வயிரவனை யங்குசாய
உன்றானவுரு நூற்றெட்டு செபிப்பீரால்
ஓகோகோ பேரண்டசுன்னஞ் சித்தியாகும்
அன்றானபகி ரண்டவண்ட சராசரமு
மளவற்றசித்தி பெறலாகு மிதுதானே. 37

மகாராச யோகஞ் செய்கிற சூரியவாலைகற்பம்

மிதுவான சுன்ன மிதைப்பதன மதாய்வைத்து
மிகுத்தமகாராச மதின்யோகஞ் செய்வோர்கள்
வதுவான மகராச யோகநிலை பெறவே
வசனிப்போஞ் சூரியவாலை கற்பமதைச் சொல்வோம்
அதுவான ஆரைசிவனார்மூலி விஷ்ணுமூலி
அன்பான சூரியகாந்தி சந்திரகாந்தி செம்முள்ளி
நதுவான நன்னாரிநத்தைச் சூரிசிறுகுறிஞ்சா
நாயுருவி கண்டங்கத்திரியும் நன்றே. 38

மூலிகைத் தொகுப்பறியவும்

நன்றிடினும் நாய்ப்பாலை முசுமுசுக்கை முடக்கொத்தான்
நரிமிரட்டி தூதுவளை மூலியாகும்
வன்றிடினுங்கீழா நெல்லிகவிழ் தும்பைவல்லாரை
வளமான நெருஞ்சி கருந்துளசி பத்திராட்சி
அண்டிடினும் வெள்ளறுகு புளியாறையா தண்டைதான்
அதீந்தப்பை மேனியேயச்சுரைதையன் பொடுதலைதான்
கெண்டிடினுநி கெஞ்சாமூலிய வுரிபிரமியந்தான்
செந்நா யுருவிசிவ கரந்தை செவ்வல்லியாமே. 39

இடைபாகம ரவிபாகம்

ஆமென்ற ஆகவகை முப்பத்தஞ் சாகும்
அருமுவேர் மூலிசமூலம துவாகும்
ஓமென்ற வொவ்வொருமூலி யிருபலந்தான்
ஓமகாரச பூபதியேநீ கேளு
நாமென்ற வகையெல்லாஞ்ச மூலமதுகொண்டு
நாள்சித்திரை ரவிதனிலே சுக்கிரவாரங் கொண்டு
வாமென்ற வாரமதுரவி யுலரச் செய்து
வசனித்தோயெல் லாங்கல்லு ரலிற்றாக்கே. 40

தாக்கினால் சாமமதையிடித்துத் தூளாக்கித்
தருவான தூளதனைத் தோண்டி நீஜயா
வாக்கினால் சொன்னதென்று மலையாதேமக்காள்
மாணாக்காள் தூளதனைவடி கட்டிக்கொள்வீ:
தூக்கியேயித் தூளையொரு கலசமதிலிட்டுத்
துதிபெறவே மேற்சீலைவேடு நீகட்டி
பாக்கிநீதூள தனைப்பதனமதாய் வைத்துப்
பரிவாகயின்ன மொருகடை விதங்கேளே. 41

கடைச்சரக்கு- தொகுப்பறியவும்

விதமான வால்மிளகு மலைமிளகு திப்பிலிதான்
விளங்கும் நல்லமிளகு கடுக்காயின் பிஞ்சாகில்
சதமான சாதிக்காய் கடுக்காய்ப் பூயேலம்
சார்வான லவங்கப்பூ லவங்கப் பட்டையாகில்
சுதமான சுக்குநல்ல சீரகமு மாகில்
சூரைவிரை காரைவிரை வெட்பாலரிசி
கதமான கார்கோலங் கண்டு பறங்கிதான்
கருஞ்சீரக மாகில் தான்றிக் காயாமே. 42

ஆமென்ற தாளிசபத்திரி யுமாகிலரத்தை
குரோசானி கண்டு திப்பிலியுமாகில்
நாமென்ற துமராஷ்டம் சாதிப்பத்திரி
நல்லகடை சரக்குயிருபத் தைந்து வகைதான்
வாமென்ற வகையொன்றுக் கிருபலமு மாகில்
வசனித்தோம் விதமெல்லாம் வாரங்கொண்டுலர்த்தி
ஏமென்றெ டுத்ததனைக் கல்லுரலிலிட்டு
யிருசாமம் வீதமதைத் தூளிடித்துக் கொள்ளே. 43

காட்டுக்கிழங்கு வகையறிய

இடித்ததனைத் தோண்டித் தூள்வடி கட்டியெடுத்து
யியலாக முன்சொன்ன தூளிலொக்கச் சேர்த்து
கடித்ததனைக் கலசமதைப் பதனமதாய் வைத்துக்
கருவான காட்டுவெ௱கைக் கிழங்குத் தூள்கேளு

தடித்ததனை நிலப்பனைவே ரமுக்குறாக் கிழங்கு
நல்லசிவனார் கிழங்கு மெருகங் கிழங்கும்
வடித்ததனை மிளகூரணை வெட்பாலை வேரும்
வளமான வாகாச கெருடன் கிழங்கே. 44

கிழங்கான முக்கத்தாரிப் பட்டை யதுவாருங்கேள்
மகனே பூதவிருட்ச மதின்பட்டை
வழங்கான சித்திரமூலஞ் செம்பருத்தி வேரும்
வளமான துத்திவேர் பூவரசம் பட்டை
அழங்கான அத்திவேர்ப் பட்டை யாலம்பட்டை
அசோக விருட்சமதின் வேர்ப்பட்டையாகும்
துழங்கான மாதளைவேர் விலாமிச்சம்வேரு
குருவான வில்வவேர் சரக்கொன்றை வேரே. 45

இடைபாகம் ரவிபாகமறிய

வேரான வகையெல்லாம் மொவ்வொரு பலந்தான்
விசிதமென்ற கிழங்கு களொவ்வொருபலந்தான்
ஏரான விருபதுவகை விதமும் வாங்கி
யென்ன வொண்ணா ரவிமுகந்தனி லேவாரம்
பேரான கிழங்கெல்லாம் வில்லை வில்லையாகப்
பேராக அறுத்ததனை ரவியில் நன்றாயுலர்த்தி
கூராக வுலர்ந்ததுவுஞ் சருகது போலானால்
கொண்டுகல் லுரலிலே யிட்டுத் தூளாக்கே. 46

பிரமகுலம்பனிநீர்

ஆக்கியே யத்தூளைத் தோண்டி வடிகட்டி
அருளினதோர் முன்தூளி லொக்கநீ சேர்த்து
வாக்கியே பிரமகுலந் தலைப்பிள்ளை பனிக்குடம்
வசனித்தோ மஞ்சுபடி பனிநீரை வாங்கு
தூக்கியே பேரண்ட சுன்ன மரைப்பலந்தான்
துருவான நீரிலிட்டு ஒருநாழி சென்றால்
பாக்கியே சுத்தசல மாகுமது பாரு
பண்மைபெறச் சலமதனைப் பெருஞ்சட்டி தனில்வாரே. 47

ஒருமரத்தின் விறகு

வார்த்தனைச் சீனிசர்க்கரை யிலிருசேரு
வசனித்தோம் சலமதனி லிட்டு நீஜயா
ஆர்த்ததனை யடுப்பின்மேல் சட்டி தனையேற்றி
அடவான வொருமரத்தின் விறகதனாலையா
நார்த்தனை யேயிருசாம மெரித்தீரே யாதில்
நல்லபாகது போல் வருதலது வாகும்
தூர்த்ததன மாயிருககாதே தூள் நாலுசேரு
துதிபெறவே பாருதனி லிட்டுநீதாக்கே. 48

கற்பம் நிறமறியவும்

தாக்கியே கிண்டியதைப் பேரண்ட சுன்னந்
தருவான பாகதிலே யரைப்பலந்தானிட்டு
வாக்கியே மறுபடியுங் கிளறியதைக் கிண்டி
வஸ்துநிறஞ் சிவப்புமாய் வருதலது கண்டு
தூக்கியே சட்டியதை யிறக்கிக்கீழ்வைத்து
துரைராச பூபதியே சொல்லக் கேளையா
சோக்கியே திரியாதே சூரியவாலை கற்பம்
துடியான கற்பமிது ஆறவைப்பாயே. 49

கற்பத்துக்குத் திரிபுரை மூலமந்திரம்

வைத்ததனைச் சீசாவி லேகியத்தை யிட்டு
வசனித்தோந் திரிபுரையின் றியானமதைக்கேளு
செத்ததனை ஓம்ஸ்ரீரிம் சிரியும் சிங்கய்யும் சிறாம்
சிறியும் கிலியும் சவ்வும் ஊம்ஆம் மென்றிடாய்நீ
ஐத்ததனை ஆயி மாயிதிரி புரையேராவென்
றருளுவாய் நூற்றெட்டு வுருசெபிப் பீராகில்
சுத்ததனைச் சூரியவாலை கற்பஞ் சித்தியாகும்
சொல்லிவிட்டோந் திரிபுரையின் சூட்ச மிதுதானே. 50

சௌமிய சாகரமாயிரத்தைஞ் ஞூரறியவும்

சூட்சமிந்த சூரியவாலைக் கற்பமிது போல
சொல்லவில்லை முன்னோர்கள் சொர்னமிந்த நூலில்
வாச்சுதிந்த சௌமிய சாகரத்தின் பீடம்
வசனித்தோ மாயிரத்தைந்நூற் மகத்தான நூலு
ஆச்சுதிந்த திரட் டைஞ்ஞூற்றைக் குறுக்கிச் சொன்னோம்
ஆருந்தான் சொல்லார்க ளஞ்ஞூறிந் நூலாதி
காச்சுமுப்புக் கனியதுபோல் மவுனமதில் கொண்டோர்
கைலாச முத்தி பெற்றுக் கடத் தேறுவாரே. 51

கற்பமுண்ண வசந்தகால மாசம்நாலு

கடத்தேறு மாணாக்கா வின்னமொரு சேதி
கருவாகச் சொல்லுகிறோம் கருணைபெற நாமும்
அடத்தேறு மகாராச யோகமது செய்வோர்
அமுசைவான் றாரணியி லொருவனுண்டுபாகர்
வடத்தேறு வசந்தகாலங் களைக்கேளும்
வசனிப்போந் தைமாசி பங்குனி சித்திரையாகில்
எடத்தேறு மிம்மாச காலங்கள் தனிலே
யினியமகா ராசயோகஞ் செய்யு மதுடாரே. 52

உடல்சேதி

செய்யும்வகை செப்புகிறோம் புலத்தியனே கேளும்
சீரான அதிகால முதல்நாள் பூரம்
கொய்யுறோங் குருவாரம் குகையில்ல மாகில்
கூராக யேகியே குகையில்நீ சென்று
கையுமுகந் தந்தசுத்தி சார்வாகச் செய்து
சப்பிரமமாய் ஞானகாவிய பூசைநேமம்
முயமாக ராசயோக நிஷ்டையது செய்து
முடல்சித்தி யாகுதற் கருளுவோம் பாரே. 53

சிவயோக மேடை

சித்திபெறச் சிவயோக மேடையதைக் கேளும்
செயலாகச் சாண்பத்து மேடை யகலந்தான்
நித்திபெற நிகளமது சாண்பத்து மாகும்
நேராகச் சிவயோக மேடையது செய்து
அத்திபெறச் சடலமெங்கும் விபூதி யுத்தளமா
யருளினோ மெண்சாணுடம் பெங்கு மணிந்து
முத்திபெற யெண்ணூறில் யோகத்துக் கெல்லா
முடித்தோமே தீட்சையது செபித்துதான் 54

யோகத்துக்கெல்லா மெண்ணூறில் தீட்சையறியவும்

செபித்துநீ மவுனமதி லறிவதனை யொட்டி
செயலான கற்பூர வாலத்தீபம்
துபித்துநீ தூப நைவேத்தியஞ் செய்துதுதிபெறவே
சூரியவாலை கற்ப லேகியத்தை
உபித்துநீ குன்றிமணிப் பிரமாணங் கொண்டு
வுறுதிபெற வதன்பிறகு பசும்பாலரைதான்
மபித்துநீ யிந்தபடி காலைமாலை
மண்டலமு மிருபோது கொள்வீராமே. 55

கற்பங் கோழை வாங்குதலறியவும்

ஆமென்ற கற்பமதைக் கொண்டு யிருநாழி
யருள்பெறவே சுழிமுனையில் ணோட்டம் பார்க்கில்
வாமென்று பார்த்துநீ பெருவிரல் நடுவில்
வாங்கிவிடு வுண்ணாவில் புரளவே தேய்த்தால்
காமென்ற கபமெல்லாம் வந்துவிடும் பாரு
கபமான கோழையது கும்பஸ் தனம்போல
மாமென்ற ஆறதுபோல் பெருகுமது பாரு
மகத்தான சிலேட்டுமம முமற்றுப்போம் நன்றே. 56

கற்ப மண்டல முண்ண

நன்றான வொருபோது நடுமத்தியானம்
நலமான பொச்சாலி மங்கரிசியன்னம்
உன்றான வுண்டுவிடு மண்டலமு மாகில்
ஓகோகோ வொருமண்டலஞ் சென்றால் புலத்தியனே
வன்றான மகராச யோகநிலை யாச்சு
மகத்தான பிராணாய வாசி யுறுதிநன்று
அன்றான ஓங்காரக் கம்பநிலையாச்சு
அரகரா சூரியவாலைக் கற்பமுண்ட போதே. 57

நரைதிரை அகற்ற விபரம்

உண்டுவிட்டுக் கற்பமதை மண்டலந்தானையா
உண்டபோது கபமெல்லா மோடிப்போச்சு
தெண்டனிடு வாரையா கேளுங் கைலாசம்
தேகமடா கபங்கள் கழன்ற போது
தெண்டனுனை மண்டலத்தோ ரிடுவாரையா
திரையென்ற நரைதிரையு மண்டலத்துக் குள்ளே
மண்டலத்தோர்க் கதிகமடா வுனைப் போலுண்டோ
மன்மதனைப் போலொளிவு மாகுந்தானே. 58

பிராணாய யோக காயாதிக் கற்பமறிய

தானென்ற மகராச யோகவானாச்சு
தனமாச்சு பதினாறு வயதுபிள்ளை போவாய்
வானென்ற பதினாறு வயதுபிள்ளை போவாய்
வசனித்தோ மப்பவல்லோ புளியாசை போச்சு
ஊனென்ற நீவேணு மென்றாலையா
வொட்டாது புளியுப்பு ஓட்டுங் கசப்பாகும்
வேனென்ற பெண்டுபிள்ளை யாசையதுபோக
விழலாச்சு பாசமெல்லா முலகாசை போச்சே. 59

காராவின் பசும் பால்

போச்சென்ற மகராச யோகமுறுதி படவே
புனிதமதாய்க் காயகற்பம் பொட்டெனவே சொல்லும்
போச்சுதே பிராணாய யோககற்பங் கேளு
பெலமான பெண்ணடிதா னாதமொரு சேரு
வாச்சுதே வஸ்துவைதான் கிண்ணமதி லிட்டு
வளமான நீரிலிதந் தலனெய்தான்
ஆச்சுதே யாறுபல மக் கிண்ணமதி லிட்டு
அருளான சூரியவாலைக் கற்பமிரு சேரே. 60

சேருங் காராவின் பசுவின் பாலரைபடி தான்
செயமான நிம்பப்பழச் சாறுபடி யரைதான்
வாகும்பனி நீரெட்டுத் திங்கள் சுத்தசலந்தான்
மதுவு மரைப்படி விட்டுக் கரமதனாற் கூட்டி
பேரும் பேரண்டத்தின் சுன்னமரைப் பலமிட்டு
பெலமான முன்னேழு ரவியிலிரு நாழி
கோருமதை வைத்தீரே யாமாகி லையா
கூறினோம் பிராணாய கற்பமாமே. 61

கருநாகப்பழ நிறம் வராகி மூலமந்திரம்

ஆகுமேகேள் கருநாகப் பழமது போல்கற்பம்
ஆகுமது லேகியம் போலப் பாகங்கண்டு
வாமேகேள் வராகியுட மூலமதைக் கேளும்
வசனித்தோம் கற்பத்துக்குச் சித்திபெறத் தானும்
தேமேகேள் ஓம்ஸ்ரீம் கிறியும் உவ்வும் அவ்வும்
தேவிரா ராவராகிங் ஙவறிம் சவ்வும் ஐயும்
நாமேதான் சொல்லிவிட்டோ மித்தியான மூலம்
நாட்டுவா யுருநூற்றெட்டுச் செபிப்பராமே. 62

மனதுக்குப் புத்தி மவுனமறிதல்

செவிக்கவே பிராணாய யோகநிலை யாச்சு
சித்திபெறுங் கருமமெல்லாஞ் செயசித்தி யாச்சு
கவிக்கவே காயகற்ப மதிச் சித்தியாச்சு
கருவான கற்பமதை யெடுத்துக் கொண்டு
கவிக்கவே வஸ்துவைத்தான் மனதிலெண்ணி
மகத்தான யில்லமதின் குகைதானேகி
நவிக்கவே மேடைமீதிற் புவியரசன்
மேயிட்டு ஞானபர தேசிகனை மவுனத்தூடே. 63

கற்பமுண்ணும்போது கன்னியர் மேலாசையது

மவுனமென்ன பூரணமே மவுனமாகு
மனமென்ன நிராமயமே மதிதானாகும்
மவுமென்ன பூரணத்தை விட்டா லொன்று
மாகாது நிராமயத்தைப் பூசிப்பாய்நீ
ம்வுனமென்ற மவுனமதா லெல்லாமாச்சு
மற்றதெல்லாம் சுத்தப்பாழ் வென்றும் பாழாச்சு
கவுனமென்ற கனவுதனில் மவுனம் விடப்போகா
கன்னியர்மே லஃாசை மவுனம் பாழாச்சே. 64

பாழான சடலமிது வலுப்பாழாச்சு
பரிவான விந்தைவிட்டால் தேகம்புண்ணாச்சு
வாழான வாழ்வெல்லா விந்தழிந்தாற் போச்சு
மகத்தான விந்ததனாற் பூரணமு மாச்சு
மாழான பெரும்வாழ்வு விந்ததனா லாச்சு
வசனித்தோம் விந்தை விட்டால் மாண்டுநீ போவாய்
தாழ்வொரு நாளுமில்லை பெண்ணாசை நினைக்காதே
தானினைந்தாற் கெவுன யோகந் தவறிப்போமென்றே. 65

பித்தத்தின் கோழை போகுமென்றறிய

தவறாது பிராணாய யோகஞ் செய்யும் வகை
தருவான பித்தமதின் கோழை யெல்லாம் போக
அவறாத வாசனத்தின் மேலிருந்தையா
அருளான மூலாதார பூசையது செய்து
உவறாத விபூதி யுத்தளமா யெங்கும்பூசி
யூட்டுவா யுண்ணாவு புரளக் கற்பந்தன்னை
நவறாத நடுவிரலு முன்விர லிரண்டும்
நன்றாக வொன்றாய்ச் சேர்த்துக் காயகற்பந்தன்னை. 66

பிராணாய யோகந்தேசிப் பாலுண்ண

தன்னையென்ற கற்பமதில் குன்றிமணிப் பிரமாணந்
தனையெடுத்து வுண்ணாவில் புரளநீயேற்று
என்னையென்று யெத்தினதோர் சென்றுயிருநாழி
யியலான தேசிப்பா லரைப்படி தானுண்ணு
உன்னைவிட்டு வோடிப்போ மண்டலமிரு போது
உண்டிடவே யந்திசந்தி யுண்பீராகில்
பெண்ணையாற் பரவிவரும் பவனைபோலையா
பித்தத்தா லெடுத்ததொரு கபமெல்லாம் போமே. 67

பித்தத்தின் கபம்போக பொச்சாலியரிசியன்ன மொரு போதுண்ண பத்தியமறியவும்

போமென்று மிந்தப்படி மண்டலந்தானையா
பொச்சாலி யரிசி பச்சைப்பயறு மொன்றாய்ச்சேர்த்து
வாமென்றும் பொங்கி தேக்கிலையி லிதைக்கொட்டி
வாவின்பசும் பால்படிதா னுண்பீராகில்
போமென்றும் புளியாரை முப்பூவி னுப்பும்
பேராக வதைக்கடைந்து வுண்ணலா மைந்தா
நாமென்று மலைமிளகு காரமது வாகும்
நண்பான பச்சைப்பயறு குழம்பதுவுமாமே. 68

பித்த நீரெல்லாம் போம்

ஆமென்று யிம்முறையாய் மண்டலங் கொள்வீர்
யன்பான பித்தநீர் கும்பஸ்தனம் போல
வேமேதான் சலமெல்லாம் விழுந்தங்கே போகும்
விடுபட்டால் பித்தநீர் விந்து கல்லாகும்
நாமேதா னிந்தபடி ஞாயமதாய்ச் சொன்னோம்
நரைதிரையு மற்றுப்போ மண்டலத்துக் குள்ளே
ஏமேதா மெழுகுவச் சிரக் காயமாகு
மியம்பினதோர் பிராணாய யோகநிலையாச்சே. 69

காயத்தினோய் வருகாது நிராமயபெண்மாய்கை நீக்குதல்

நிலையான காயமதில் நோய்வருகாதையா
நிராமயத்தைத் தினந்தோறும் நின்றுகளி கூர்வாய்
அலையாதே யொருமனதாய் மண்டலங் கொள்வீரால்
ஆயுசுக்குத் தினந்தேர்றும் பயமில்லை வயது பதினாறாம்
குலையாதே நாய்போலே வாழ்வைச் சேதமாக்கா
கூடுவா றோடே கூடாதே குறிப்பாகநில்லு
துலையாத பெண்மாய்கை விட்டபோதையா
சொன்னதெல்லா மாடுமடா துதிபெறுவாய் நீயே. 70

வாசி யொடுக்கமறிய

நீயான மனமாலே வாசியதை யிழுத்து
நேர்பெறவே யங்கென்று நிறுத்தினாலையா
அலைவதறு மோதினாப்போல் வாய்வுபத்துங் கூடி
ஆக்கினையி லொடுங்கிக் கல்லாகு மதுபாரு
பெலமான வாசியது பெலப்பட்டுப் போச்சு
பிராணாய சித்திசெய்தும் பேணிப் பாரிற்று
நாயான குக்கலைப்போ லலைய வேண்டாமக்காள்
நாடதிலே யொருவருக்கு நல்லசித்தியாமே. 71

சிவராசயோகம் சந்திர வாலை கற்பம்

நல்லசித்தி பெறுவதற்கு ராசயோகஞ் சொல்வோம்
நலமான சந்திரவாலை நல்லகற்பங் கேளு
வல்லமையால் பதினெண்பேர் சித்தரேநீர் கேளும்
மகத்தான ராசயோக மானிலத்தோர் செய்ய
சொல்ல முன்னோர் களதீதப் பொடியை நாமுங்கண்டு
சொல்லுகிறோந் திரட்டைந்நூற் கருக்கிடையாய் நாமும்
கல்போலாந் தேகமது கற்பமதாலையா
கற்பமுண்ணாச் சித்தரு முண்டோ காசினியில்பாரே 72

பெண்ணாசை யொழித்தவர்ககுக் கற்பசித்தியாம்

பாருமிது கற்பமிதை யாருமுண்ணா ரையா
பைங்கிளியா ளாசையது வொழிந்து போச்சுதானால்
ஆருமிந்தக் கற்பமிதை யனைவோரு முண்பார்
ஆரிழையாள் வலைக்குள்ளே யகப்பட்டாற் கூடாது
பேறுமிது பெண்ணாசை யதித மிருப்போர்க்கு
பெலமான கற்புமுண்டால் தேகம் வெடித்தேபோம்
சேருமிது சாயுச்சியஞ் சித்தி பெறுவோர்க்குச்
செயச்ந்திர வாலைகற்டம் செப்புவோம் நாமே. 73

க்ஷத்திரியகுலத்தில் பனிநீர் வாங்கவும்

செப்புவோம் புலத்தியனே க்ஷத்திரியர் குலத்தில்
சேயிழையாள் பனிக்குடத்தைச் சிந்தாமல் வாங்கி
நட்புவோ மவளுடைய நாதமதை வாங்கி
நல்லசீசா தனிற் பதனம் நண்பா யதைச்செய்து
அப்புவோ மடவான பனிநீரிற் கேளு
அரைப்பலந்தான் பேரண்டச்சுன்னமதி லிட்டால்
தெப்புவோந் தெளிந்த சுத்தசலமா யதுபோகுஞ்
சேரிரண்டு அச்சலத்தில் கிண்ணமதில்வாரே. 74

வைசிய குல மாணவிந்துமாக்கரு

வாரான நாதமடா சேரொன்று வாரு
வைசியகுல மானவிந்து சேரொன்று வாரு
மாராண யக்குலத்தில் மாதமாறிற் பிறந்த
மாக்கரு தானஞ்சு பலம் வளமாயதிற் போட்டு
சேரான செவ்விளநீர் படியொன்று வாரு
செங்கழுநீ ரிலைச்சாறு சேரொன்று வாரு
பாரான பால்பசளைச் சாறுபடிநாழி
பன்மைபெறுஞ் செந்துளசிச் சாறுநாழியாமே. 75

சாறுவகை

நாழியென்ற செந்தாமரைப் பூவினிடச் சாறு
நவிலுமதில் நாழிகொண்டு நளினமதாய் வாரு
வாழிபெறச் செங்கற்றாழைச்சாறு னாழிவாரு
வளமான கருநீலிச்சாறு நாழிவாரு
தாழிபெறும் வெண்தாழை மலைச் சறுவாரு
தளை யுண்டு வதில் நாழிச்சா றதுவும்வாரு
ஆழிபெறத் தில்லைப்பா லரைச்சேர் வாருவாரு
அத்திப்பா லரைச்சேரு அதில்வாரு நன்றே 76

சூரியவாலைத்தூள்

நன்றான சூரியவாலைத் தூளினாற் சேரு
நண்பாகக் கொண்டுநீ கிண்ணமதிலிட்டு
குன்றாம லதனையே கூட்டிப் பிசைந்து
கூரான சித்திரை நாளந்நாள் பனிராவில்
ஒன்றான வோரிரவு முழுதுமதை வைத்து
ஒகோகோ மறுநாள் காலமதைக் கொண்டு
துன்றான சுத்தசலம் பெருஞ் சட்டிதனிலே
துதிபெறவே யஞ்சுபடி நீரதனைவாரே. 77

பனவெட்டு கற்பம்

வாரது அன்னீரில் பனவெட் டிருசேர்
வளமாகச் சேர்த்து நீயடுப்பின்மே லேற்றி
ஓரது வோர்மரத்தி னுடவிறக தனாலே
யொருமை பெற வொன்றரைச் சாமமெரித்திட்டால்
பாரதுவும் பாகதுபோல் வருதலது வாகும்
பன்மை பெறு மப்பாகங் கண்டீரே யானால்
ஏறது முன் சொன்னதொரு பாகமதைக் கொண்டு
யெடுத்துப்பார் கதிர்போட்டுக் கிளறியிடு வாயே. 78

சிவப்புநிறம் வெண்ணிறம் கற்பலேகியம்

இடுவாய்நீ கிளறயிலே சிவப்புநிறங் காணு
மியலான பேரண்டச் சுன்னமதைப் பலந்தான்
போடுவாய் பாகதிலே போட்டுக் கிண்டிடுவாய்
புகழாகக் கிளறயிலே வெளுமைநி றங்காணும்
வாடுவா ரில்லைஐயா சந்திரவாலை கற்ப
மகத்தான லேகியந்தா னாருஞ் செய்யா ரருமை
ஆடுவாய் லேகியத்தை யிறக்கி யாறவைத்து
அருளான சீசாவில் கற்பமிதை வையே. 79

மயேந்திரை மூலம்குகைக்குச் செல்ல உரு நூறறெட்டு

வைத்துநீ சந்திரவாலை கற்பஞ் சித்திபெறவே
வசனிப்பாய் மயேந்திரையின் மூலமதைக்கேளும்
நைத்துஓம் அறீம்சிறீம் நவ்வும் சவ்வும் உவ்வும்
ஸ்ரீநாயகி மயேந்திரையே ராராஅம்மாதாயி
உற்றுகற்ப லேகியத்தை வைத்துநீ தான்கேளு
வுறுதிபெற வுருநூற்றெட்டு செபிக்கவராய்
சற்று சந்திரவாலை கற்பமதித சித்தியாகும்
சார்வான கற்பமதை யெடுத்துக்கு கைபோவே. 80

மிளகினிடை

போவெனவே சொல்லுகிறோம் புலத்தியனே கேளும்
புனிதவுரு வானபின்பு சந்திரவாலை கற்பம்
தாவெனவே மிளகினிடைப் பிரமாணமதைக் கொண்டு
தருவான நடுவிரலு முன்விரலுஞ் சேர்த்து
காவெனவே கற்பமதைக் கொண்டுநீதான் கேளு
கருத்துறவே யுள்நாவில்நீ புரளயேற்று
ஆவெனவே யேற்றிவிட்டுப் பசும்பா லரைப்படிதான்
அருளுவோ மிருநாழி சென்றபின்புதானே. 81

வாதத்தா லெடுத்த கபம் போக

தானெனவே கொண்டுவிடு மண்டலமிரு போது
தனதாகக் கொண்டாக்கால் அந்திசந்தி தானும்
வானெனவே வாதமதா லெடுத்த கபமெல்லாம்
வாங்கிவிடுங் கும்பஸ்தலம் போலாய்ப் பெருகும்
நானெனவே மண்டலத்தில் கோழையெல்லாம் போகும்
நளினமென்ற கோழை போனால் நரைதிரையும் போச்சு
கானெனவே விந்து கல்லாகிவிடும் பாரு
காயமதி னோயுமில்லாக் களங்கமில் லாதாமே. 82

தேகம் பனிக்கு நிறம் சந்திரன் போல் வாழல்

களங்கமில்லாத தேகவச்சிரம் பளிங்குநிறம் போலாங்
காயசித்தி மண்டலத்திற் காணுமதுபாரு
வளங்கமுமாங் கற்பத்தால் வாலை பதினாறாம்
வசனித்தோம் சந்திரன்போல் வாழுஞ் சதாகாலம்
முளங்குவாய் முன்சொன்ன பத்தியமாய் கொண்டால்
மூலவரையாறு பனிரண்டு பனியது தள்ளும்
அளங்குவாய் பத்து மண்டலமிதனைக் கொண்டால்
ஆயிசுக்கோ பயமில்லை யடவிது தானாமே 83

மண்டலத்துக்கோர் சட்டையுரிதல்

நாமேதான் கொண்டுவிட்டோம் புலத்தியனே ஐயா
நளினமென்ற மண்டலத்துக் கோர் சட்டையுரியும்
தோமேதான் றொண்ணூற்றாற் மண்டலமுங் கொண்டால்
தொண்ணூற்றாற் சட்டையது வுரிந்ததுவும் போகும்
வாமேதான் சந்திரவாலை கற்பமதை யுண்டு
வாசி சிவயோகமது செய்வீராகில்
ஆமேதான் வங்கென்று விசுத்திதனிலையா
அருளினோம் தம்பித்தால் ராசயோகமாமே. 84

வாசியோகம் பத்துவாய்வு வொடுக்கம் வாய்வு சித்தியறிய

ஆமென்ற வாய்வுபத்து விசுத்தி தனி லொடுங்கும்
அவ்வாய்வு வொடுங்கிநின்றால் ராசயோகஞ் சித்தி
நாமென்ற வாசம்பத்துங் கற்பத்தாலடையும்
நல்லயெலிப் புழுக்கையது போலே யெருதள்ளும்
வாமென்ற கற்பத்தால் வாசிசித்தியாகும்
வஞ்சியர் மேலாசை வைத்தா கற்பமுண்ணும் போது
தேமென்ற சொர்பனத்தில் வாசியதை யிழுத்துத்
தெளிவான ராசயோகஞ் சித்திக்கப்பாரே. 85

மனஞ் சகியாதிருக்கச் சடமழியாதிருக்க

பார்க்கையிலே மனஞ்சகியாய் புலத்தியனே ஐயா
பரிவான வின்பசுக பைங்கிளியா ளாசை
ஏர்க்கையிலே யெண்ணும்பத நினைவதனைத் தள்ளு
யெண்ணினால் விந்தழிந்து யிளகிவிழும் பாரு
வேர்க்கையிலே யுனதுசடம் வெடித்துப் புண்ணாகும்
விழலாகுஞ் சித்தியெல்லாம் விழுந்தழுந் தாலையா
சேர்க்கையிலே யென்றும் சட மிருந்தாலது நன்று
செடமழிந்தா லென்னபலன் சித்தனாகார் பாரே. 86

அகத்தீசர்க்குக் கந்தன் சொன்ன உபதேசம்

சித்தனாயாவதற்குச் செடமிருக்க வேணுஞ்
செடமிருக்கச் சித்தியெல்லாம் க்ஷணத்திலெய்தும்பாரு
அத்தனா முமைதேவி கந்தனருளாலே
யகத்தியனுக் குபதேச மனுக்கிரகஞ் செய்தார்
முத்தனா முன்னோர்களென் போலார் தேர்ந்தார்
மூவுலகு மகத்தியனுட மூர்த்திபமாகும்
எத்திசைக்கு மென்பேர் சித்தரெல்லாஞ் சொல்வா
ரெனக்குப் பேர்கத்தீச ரென்பதுவாமே. 87

நவராச யோக கற்பம்

என்றான சந்திரவாலைக் கற்பமதைச் சொன்னோ
மியலான ராசயோக மியம்பினோம் பாரு
அன்றான திரட்டைஞ் நூற்கருக்கிடைதா னாகும்
ஆயிரத்தைந் நூற்றின் பெருமையெல்லாஞ் சொல்வோம்
தொன்றான துதிபெறுவோர் தொழிலானால்
சூட்சாதி சூட்சமெல்லாஞ் சொல்லுங்குருவறிவார்
நன்றான கருவறிவோர் ஞாயமா மொன்றுண்டு
நாடதிலே வெகு அருள் ஞானி யறிவாரே. 88

இந்நூலடக்கம் பண்ண

வாரான யின்னமொரு யோகமதைக் கேளும்
வசனிப்போம் நவராச யோகமதைச் சொல்வோம்
தேராத பேர்களெல்லாந் தேறுந் திரட்டைந் நூற்
றேறலாஞ் சடமழியாச் சித்தர்களே கேளும்
பேரான நூலிது பாரார்க்குங் கிடையாது
பேரின்ப சாஸ்திரந்தான் பிழைவராதுண்மை
வாரான நூலிதனைச் சித்தர்களே கேளும்
வெளிவிட்டா லண்டயிடி விழுந்துதலை போமே. 89

கசடர்க்கு ஈயாதே

போமென்ற சூதருக்கும் பசங்களுக்கும் ஈயாப்
புலத்தியனே யீந்தாயென்றால் பிழைமோசமாகும்
நாமென்ற இந்நூலைக் காமுகர்க்கும் ஈயாய்
நரசென்மப் பிசாசருட நடத்தையது மெத்த
கோமென்ற யிந்நூலை யொருவருக் கீய்ந்தால்
குலநாச மாயிடுவார் குருவின் பகையெய்தும்
ஆமென்ற வறிவுடையோர் மானிடரி லொருவன்
அவர்க்கு யிந்நூலீந்தா யென்றால் வர்த்திப்பாய்நீயே. 90

நவபூபதி கற்பம் வன்மூலிப்படை

நீயான புலத்தியனே நவபூபதி கற்பம்
நிலையான கற்பமதைச் சொல்லக் கேளையா
வாயான வன்மூலி கருங்காலிப்பட்டை
வாயான வல்லாரை வேர்ப் பட்டையாகும்
ஊரான வுதிர வேங்கை மரப்பட்டை யாகும்
உறுதிபெறும் வெட்பாலை வேர்ப் பட்டையாகும்
வேயான வெள்வேலன் வேர்ப்பட்டையாகும்
விதமான கடுக்காய் மரவேர்ப் பட்டையாமே. 91

ஆகவேர் வகைப்பட்டை பதினேழு

ஆமென்ற யோரழிஞ்சி வேர்ப்பட்டை யாகும்
அடவான சந்தனமர வேரு பட்டை
நாமென்ற பவளமல்லி வேர்ப்பட்டை
நாவல்வே ரத்தியுட வேர்ப்பட்டையாகும்
போமென்ற பொன்னாவரை வேரு
பொன்னகத்தி வேரு புங்கம் வேர்ப்பட்டை
மாமென்ற மருதை வேர்ப்பட்டை
மணித்தக்காளி வேர் மல்லிகையின் வேரே. 92

மாத்தூள் வடிகட்டி யெடுக்கவும்

வேரான வகை பதினேழுமே கொண்டு
விளங்கவே முப்பலம் வீதமதாய் வாங்கி
நாரான ரவிமுகம் வாரமுணத்தி
நன்றான கல்லுரலில் நளினமதாய் தாக்கி
தூரான விருப்புலக்கை யதனாலே தூளாக
விருசாமந் துதிபெறவே யிடித்தால்
மாரான மாவதுபோ லதுவேயாகு
மப்பாகங் கண்டுநீ மாத்தூளைத் தோண்டே. 93

சாறுவகையறிய

தோண்டி மாத்தூளை யதைவடிகட்டி யெடுத்துச்
சூரியவாலைத் தூளதிலே சேர்மூன்று வாங்கி
வாண்டிபெற யித்தூளில் தூளைமிகக் கலந்து
வடிவான கல்சமதில் வைத்துநீ யப்பா
சாண்டிபெறப் பெனஞ்சட்டி தனைக்கொண்டையா
சார்வான சுத்தசலம் படியஞ்சிட்டு
பாண்டியே காராவின் பசும்பாற் படிநாலு
பாகமென்ற நிம்பச்சாறு படிநாலே. 94

நாலான சாற்றுலே நல்லயிள நீரு
நாலு படிவிட்டு அதில் நளினமதாய்க் கேளும்
பாலான பனங்கற்கண்டு சேர்நாலு
பரிவான சட்டிதனில் பன்மை பெறவிட்டு
வாலான சட்டியதை யடுப்பின்மே லேற்றி
வசனித்தோ மொருமரத்தின் விறகாலே
ஆலான வக்கினியைக் காலாக்கினிபோல
அன்பாக வொருசாம மெரித்திடுவீர் தானே. 95

மஞ்சள் நிறம் மண்டை சுன்னம் பசுமைநிறம்

எரித்திடவே பாகதுபோ லாகுமது பாரு
யென்னசொல்வே னிறமஞ்ச ளதுவாகும்
மரித்திடவே மப்பாகங் கண்டீரே யாகில்
மகத்தான தலைப்பிள்ளை மண்டை சுன்னந்தான்
அரைத்திடவே சுன்னமதி லரைப்பலந்தான் வாங்கி
யருளான பாகுதனி லிட்டீரே யாகில்
பரித்திடவே பசுமைநிற மதுபாகு காணும்
பரிவான தூளதனைப் பாகதனிற் போடே. 96

கற்ப லேகியம

போடுநீ யத்தூளைப் போட்டுநீ மைந்தா
புனிதமதாய்க் கிண்டியே கிளறியிடு வாய்நீ
வாட்டுநீ கிளறியதை யிருநாழி சென்றால்
வசனித்தோம் நீலம்போல் வருதலதுவாகும்
ஆட்டுநீ யச்சட்டி யிறக்கிவைத் தையா
ஆறினதோர் பிறகதனை லேகியத்தைத்தானும்
சேட்டுநீ போகாமலதைச் சீசாவிலிட்டுச்
செயம்பெறவே நாராயணி தியான மோதே. 97

நாராயணிமூலம் உருநூற்றெட்டு

ஓதவே நாராயணி மூலங்கேளு
ஓகோகோ குகைதனிலே யாசனமே லிருந்து
நேகவே நேமநிஷ்டை தனைமுடித்து
நிராமயமாய்ப் பூரணமே நினைவுதனி லோட்டி
வேதவே விபூதி யுத்தளமா யணிந்து
விளங்கவே ஓம்ஐயும் நவ்வும் மவ்வுமரா
ஆதவே அரிம் ஸ்ரீரிம் வவ்வும் சிங்கிலியும்
ஆயிநாராயணி மனோன்மணி ராராவென் றோதே. 98

கற்ப மிளகிடை கொள்ளவும்

ஓதவே செகத்திரட்சகி சித்தியானந்தி யுறுதிபெற
வுரு நூற்றெட்டு செபிப்பீராய்
சோதவே சொன்னதெல்லாஞ் சித்தியாகுஞ்
சூட்சமடா தாரபீடம் ------ யேகி
சேதவே சிங்கென்று வாய்வு பத்துந் தான்
சிதறாம லொருமித்து வொன்றாகக் கூட்டி
வாதவே வாசியதை இழுத்துத் தம்பித்து
வருஷிப்பாய் கற்பமதை மிளகிடை தான்கொள்ளே. 99

அறுசுவையிலுள்ள கபம் போகுதல்

கொண்டிரு நாழியது சென்றபிறகையா
கோதையிள வாழ் மயிலாள் முலைப்பால் நாழி
உண்டுவிடு அப்பாலே யுறுதிபெறத் தானும்
ஓர்மண்டல மிருபோது முண்பீராகில்
அண்டுஅறு சுவையிலுள்ள கபமெல்லாமைந்தா
அற்றுப்போம் கும்பஸ்தன மதுவும் போல
நண்டு நாற்பது நாளு கற்பம் பாலுண்டு
நடுவிரல் முன்விர லொண்றாகச் சேரே. 100

வேதாந்திகட்கு குருநீ யென்றறிய

சேர்த்து நீ யதிகால முண்ணாவி லொட்டித்
திரளவே கழட்டிவிடு கபந்தானையா
ஏர்த்துநீர் யிந்தபடி மண்டலஞ் செய்வீர்
யெழுகு வச்சிரக் காயமது போலேயாகும்
நாற்றிசையி லுள்ள சித்தர்க் கதிகம் நீதான்
நவரசம் பொழியுமது வுன்வாயிற்றானும்.
வேற்றுமைகள் சொல்லவில்லை விந்துவிடலாகா
வேதாந்திகட் குருநீ யாவாய்பாரே. 101

பத்தியம் பாலை பதினாறு

பாரப்பா முன்சொன்ன பத்தியமாய்க் கொள்ளு
பத்தியத்திற் றாழ்வு பழுதுவரப் போகா
ஊரப்பா யிடங் கொள்ளாக் கற்பமதைச் சொன்னோம்
உறுதிபடு முன்தேகம் பதினாறாம் வேலை
வேரப்பா விந்தைவிட் டலையாதேபாரு
வேரற்ற மரமது போலாம் வியாதி வந்தணுகும்
ஆரப்பா மன்மதனைப் பேயாக்காதையா
அறிவெல்லாஞ் சுத்தப் பாழாகி விடுந்தானே. 102

அறிவுபுத்தி

அறிவான மானிடரே சொல்லக்கேள் மைந்தா
அரிதப்பா பிறக்கிறது ஆண்சிங்க மாகில்
அறிவான மானிடராய்ப் பிறக்கிறதே யரிது
அரகரா பிறந்துமே யிறக்கிறது பெரிதோ
அறிவான வாண்பிள்ளை யானதினாலே
யதீத கோடாகோடி கெர்ப்பவரை யிருந்தோம்
அறிவான பிராணனதைக் கற்பத்தாற் கட்டி
அறுசுவையும் பரிசுத்த மாக்கினோ நாமே. 103

ஆண்பிறக்கிறது அரிது விந்தைப் பாழாக்காதே
மாயாசத்தி ஆசை தீருதல்

நாமென்ற விந்துதனை வெறுஞ் செல்லாக்கா
நடத்துவாய் விந்ததுவை வளத்தினாலையா
ஆமென்ற வாயுசுநூறு கூடவளரும்
அடவான மாயாசத்தி யாசையதைத் தள்ளு
வாமென்ற திரோதாயைக் கிட்டச் சேரொட்டாதே
மனதிலுங் கிரியாசத்தி மையலதைத் தள்ளு
மாமென்ற மண்ணாசை பெண்ணாசை பொருளாசை
மகிழ்வாக வாசையைநீ தள்ளுவாயே. 104

சகலசித்தி

தள்ளுவோர்க் கெய்துமது காயசித்தி யாகுந்
 தருவானக் கனயோக வாசி சித்தியாகும்
கள்ளுவாய் கற்பமது சித்தியது வாகுங்
 கருவான மகராச யோகமது சித்தி
பெள்ளுவாய் பிராணாய யோகமது சித்தி
 பெரிதான ராசயோகஞ் சித்தியது வாகும்
நள்ளுவாய் நவராச யோகமது சித்தி
 நவபூபதி கற்பம் நல்லசித்தி யாமே. 105

சட்டையுரியு நாளறிய

ஆமேதா னவராச யோகஞ் செய்யும்வகைகேள்
 அருளுகிறோம் புலத்தியனே தொண்ணூற்றாறு மண்டலம்
காமேதான் கற்பமதை மண்டலந் தொண்ணூற்றாறு
 கருத்வே யுண்டு நவராச யோகஞ் செய்தால்
மாமேததான் மண்டலத்துக் கோர்சட்டை யுரியும்
 மகத்தான தொண்ணூற்றாறு மண்டலமு முண்டால்
வாமேதான் தொண்ணூற்றாறு சட்டையது போகும்
 வசனித்தோ மண்டலத்தில் யோகவான்றானே. 106

வாதகாவியத்தில் முதற்காண்டம் அயப்பாசமறியவும்

தானான வாத காவியத்தைப் பாரு
 தருவான முதற்காண்ட வாசியோகம்
ஆனான மானிடர்க்கு அயப்பாசஞ் சொன்னோ
 மதையறிந்து யின்னூலிற் கற்பஞ் சொன்னோம்
வானான பஞ்சகாவியத் துக்குத்தான்
 வாதகாவியம் வேணு மகிழ்ந்துபாரு
மானான வயித்தியத்தைப் பாரு
 மாந்தரிக மாயிரத்தின் மகிமைபாரே. 107

கோர்வைநூல் தொகுப்பறியவும்

மகிமையென்ற ஞான காவியத்தைப் பாரு
 மகத்தான லெட்சணத்தை வகுத்துப் பாரு
கொகிமையென்ற சௌமிய சாகரமும் பாரு
 குறையாம லிதற்கெல்லாம் நிகண்டுபாரு
வகிமையென்ற யெழுநூல் சூஸ்திரத்தைப் பாரு
 வசனித்தோம் நூலினுட சூட்சம்பாரு
எகிமையென்ற யெழுநூலின் கோர்வைபார்த்து
 யிதனுடைய பொடியறிந்து யிறவாய் வாழே. 108

லெட்சியத்தை யறியாதவர்கள் குறியறியவும்

வாழ்பவர்க ளித்தனையும் பார்க்கவேணும்
வளமாகப் பார்த்ததனால் சித்தனாவார்
ஆழ்பவர்க்கு யித்தனைதான் சொல்லிப் போட்டோம்
அகத்தியன்மே லாணைபடி யுண்மை யுண்மை
மாழ்பவர்க்கு யின்னூலு திரட்டைந்நூறு
மகத்தான யிதற்குமுன்னூ லெண்ணூறுபாரு
கோழ்பவர்க்குக் குறையேது வறுமைதானேது
குருநூலு பதினாறு லட்சத்துக்கே. 109

லட்சமென்ற லெட்சயத்தை யறியாமூடர்
நிலையான நூலினுட நெறியுங்காணார்
பட்சமென்ற பசுபதியை யறியாமாண்பர்
பரிசுத்தப் பொருளறியார் பாசந்தள்ளார்
அட்சயத்தை யறியா மாண்பர்
அன்னூற்றின் பயனறியார் அலையுமாண்பர்
பிட்ச்சையெடுத் துண்பார்கள் வேடம்பூண்டு
பிசாசரோ டிணங்காதே பிரித்துத் தள்ளே. 110

மவுனி குறிப்பறிய

தள்ளுவதோ ராரையென்றால் புலத்தியாகேள்
தன்னைத் தானறியா சண்டிமாடை
மெள்ளுவதோர் வெறும் பேச்சால் மவுனி யென்பான்
வாய்திறக்கா னுலகோரை மயக்குவான்பார்
அள்ளுவதோ ரையப்பா சஞ்செய்தே னென்பா
னருளான வாசி யிலே யிருந்தே னென்பான்
வள்ளுவதோ நிராமயத்தைக் கண்டே னென்பான்
மவுனியென்ற பிசாசரை நீமாட்டு மாட்டே. 111

ஞானிகள் குறிப்பறிய

மாட்டுவார் யிந்தபடி திரிவோரைத் தான்
மண்போடு அவர்வாயி லுலுத்தரேதான்
நாட்டுவா யுலகமதில் ஞானியென்றும்
நாடதிலே வெகுபேரு பிசாசுமாண்பர்
தேட்டுற வில்லாமல் திரிவாரையா
செகத்தாசை விட்டே னென்பான் யோகஞ் செய்தே னென்பான்
வாட்டுவாய் பெண்ணாசை விட்டே னென்பான்
மதிகெட்ட ஞானியடா மாடுதானே. 112

மதியில்லாதவர்கள

தானென்ற மண்ணாசை விட்டே னென்பான்
தருவான பொருளாசை விட்டே னென்பான்
மேனென்ற மூன்றாசை துலைத்தே னென்பான்
மூர்க்கமென்ற கோயில் குளம் போகே னென்பான்
தேனென்ற தெய்வமது நானே யென்பான்
தேவாலயங் களென்னுக்கு ளிருக்கு தென்பான்
மானென்ற ஞானத்தில் கடந்தே னென்பான்
மதிகெட்ட கெஞ்சாவில் மயங்குவானே. 113

உலகத்தோரை மயக்குதல்

மயங்குவான் பேய்போலே திரிவான் மட்டை
மதிகெட்டு ஞானமதை வாயாற் சொல்வான்
சொயங்குவான் சுணங்களைப் போலலைவானையா
சொகுசெல்லாம் விட்டே னென்பான் பரதேசியென்பான்
பயங்குவான் பகலெல்லாம் ஞானியன்றே திரிவான்
பரிசுத்த மென்போலார் பாடுபட்டே னென்பான்
நயங்குவா னிரவதனில் பெண்ணோடு கூடி
நலத்த சுகபோகமதில் நல்குவானே. 114

நல்குவா னிந்தப்படி யுலகத்தோரை மயக்க
நாடதிலே ஞானியென்று ந்திரிவோரைத்தான்
பல்குவா யின்வேடங் கொண்டுதிரி வோரைப்
பல் பிடிங்கித் தெண்டினா லடித்துத் தள்ளு
அல்குவாய் பாரினி லிருக்கொட்டாது
ஆரணிய வனாந்தரமே போகவிட்டு
வல்குவா ஞானியென்ற குறியேசொன்னோம்
வளகத்தான சிவயோகி வரலாறுகேளே. 115

சிவயோகிகள் குறிப்பறிய

வரலான சிவவேடக் காரர் செய்தி
வசனிப்போம் வளமாக வணங்கிக்கேளு
சிறமான தீட்சையிலே யதிதம் பெற்றேனென்பான்
சிவபூசை யென்னைப்போல் செய்வாரில்லை யென்பான்
கறலான பூங்காவி வேட்டி கட்டித் திரிவான்
காதிலிருங் கவசமதைக் கனமாய்ப்பூண்டு கொள்வான்
அறவான கையில் குண்டலங் கொண்டுதிரிவான்
அதீத ருத்திராட்ச மாலையணி வான்தானே 116

வீணர் மூன்று காலமறியவும்

தானென்ற சால்மூன்றும் ஸ்நானஞ் செய்வான்
சந்திசெபம் நேமநிஷ்டை க்ஷணத்தில் செய்வேனென்பான்
கானென்ற காலதனிலே பாதக்குறடிட்டுக்
காசினியோர் மகிழக் குருவென்று திரிவான்பார்
மானென்ற மார்பதனில் பூண்நூலிடுவான்
மாத்திரைக் கோல் விபூதிப்பையு மடியில் வைத்திருப்பான்
தேனென்ற செபமாலை யென்னாளு மதை மறக்கான்
சிரசினிற் பட்டுல்லா தரிப்பா னவன்றானே. 117

பொய்வேடம் பூண்டு சாஸ்திரநூல் பேசுவார்கள்

தானான நாள்தோறும் சாஸ்திரநூல் சொல்வான்
சகலகலைக் கியானமென்போ லாருஞ் சொல்லா ரென்பான்
தேனான சிவபூசை சத்திபூசை தானுந்
தெளிவாக யென்போலே யாருஞ் செய்யாரென்பான்
வானான வாயால் பினத்தி மதமழிவான் மட்டை
வையகத்தி லனேகருண்டு சிவவேடக்காரர்
கோனான குருநான் தானென்று திரிவார்கள்
குவலயத்து மனிதருக்குத் தீட்சை யோதுவானே. 118

பெண்டு பிள்ளை பிழைக்கப் பணம் பறிப்போர்

ஓதுவான் பெண்டுபிள்ளை பிழைக்கப் பணம் பறிப்பான்
உலகுக்குகுரு நானென்று வீண்பேசித் திரிவான்
வாது பேசுவான் பாரு வீண்வேடம் பூண்டு
வாயாலழிந்தே போவான் மதிகெட்ட மாண்பர்
நாதுவா னுலகமதில் புலத்தியனே கேளு
நல்லசித்தி யறுபத்துநாலும் பெற்றே னென்பான்
ஆதுவா னவ்வேடக் காரரைநீ கண்டால்
அவர்வாயில் மண்போட்டு அடிகுறட்டாலே. 119

பொய்வாதிகள் குறிப்பறிய

நாலான சிவயோகி பொய்வேடக்காரன்
நரசென்மப் பிசாசர் மெத்த நண்பாகச் சொன்னோம்
வாலான வையகத்தில் பொய்புளுகு சொல்லி
வாதியென்றும் பேர் பெறுவோர் வார்த்தைதனைக்கேளு
காலான நாளறிந்து சாஸ்திரத்தைப் பாரான்
கருவறியார் குருவறியார் கற்பமதை யுண்ணான்
மாலான வாசியோகஞ் செய்ய வகையறியான்
வாலை பிரசன்னமென்று மயங்குவான் பாரே. 120

வீண் பரசித்தியறியவும்

மயங்குவான் அட்டமாசித்தும் பெற்றே னென்பான்
மந்திரத்தி லனேகம்சித்தி வசியம் பெற்றே னென்பான்
தெயங்குவான் சிதம்பரத்தின் சித்தி பெற்றே னென்பான்
தேவியுட கிருபையினால் தெளிந்தே னென்பான்
சயம்புவான் சமாதியிலே யோகஞ் செய்தே னென்பான்
சமர்த்த னாறுவரை சாதித்தே னென்பான்
முயம்புவான் முப்பறிந்தேன் குருசெய்தேன்
மூவுலகு மயக்குகிற பொடியிதோ வென்பானே. 121

வழலைமுறை யறிந்தோனென்பர் தொகுப்பறிய

வென்பானே வழலைமுறை விசிதஞ் செய்தே னென்பான்
விளங்குவான் வஸ்துவைத்தான் பானங்கொண்டே னென்பான்
பண்பானேன் பைங்கிளியா ளாசைவிட்டே னென்பான்
பாடுபட்டேன் வேதையிலே யதீதஞ் செய்தேனென்பான்
அன்பான சூதமதைக் கட்டினே னென்பான்
அருளான துருசதுவைச் சுன்னஞ் செய்தே னென்பான்
வையகத்தோரை மயக்க வசனிப்பான் பாரே. 122

சூதங்கட்டினே னென்பர் தொகுப்பறிய

வசனிப்பான் தாளகத்தைச் சுண்ணஞ் செய்தே னென்பான்
மகத்தான செந்தூர மதில்செய்தே னென்பான்
புசனிப்பான் பூரமதைச் சுன்னஞ் செய்தே னென்பான்
பொல்லாத வீரத்தைச் செந்தூரஞ் செய்தே னென்பான்
பசனிப்பான் பாஷாணத்தைச் சுன்னஞ் செய்தே னென்பான்
பாரிலுள்ளோரை மயக்கிப் பசப்புவானையா
அசனிப்பா னயமதனைச் செம்பாக்கினே னென்பா
னடைவான லிங்கசுன்னஞ் செய்தே னென்பான்றானே. 123

கடைச்சரக்கைச் சுன்னஞ் செய்தோ மென்பர் குறிப்பறிய

தானான கடைச்சரக்கால் வேதை செய்தே னென்பான்
சைதன்யப் பொருளெல்லா மதிலாடு மென்பான்
வானான வாதமது கடைச்சரக்கி லென்பான்
மகத்தான வாலை ரசமணி செய்தே னென்பான்
கோனான குருவென்று கடைச்சரக்கைச் சுட்டுக்
குவலயத்தோர்க் காசை சொல்லிப் பணம் பறிப்பான் பாவி
ஆனான மானிடர்க்கு வானமிதோ வென்று
அடிபட்டுக் குண்டுணியா யலைவர்பாரே. 124

பாருமது இவ்வேடக் காரர் மெத்தவுண்டு
பார்தனிலே வாதியென்றும் பசப்புவார்களையா
ஆருமறியார் களிவர் நால்வரிட. செய்தி
ஆரணியில் அரிதப்பா கோடியி லொருவர்

தேறும்பண்போர் வெகுஎளிமை பெரியோரரிதாகில்
செகத்திலே காணரிது சித்தரவராகும்
பேறுபெறும் ராசியுள்ளோர்க் கருகே யெதிர்நிற்பார்
பேதைமனமாகநின்று பேசுவார் தானே. 125

பெரியோர்கள் மனிதர்கண்ணி லகப்படார்கள்

பேசுவார் மனிதர் கண்ணி லகப்பட்டார் களையா
பெரிதான விட்டகுறை தொட்டகுறை யிருந்தால்
ஆசுவார் தாரணியில் கோடி மானிடர்
அகப்படுவார் பெரியோர் களகப்பட்டதே யாகில்
பாசுவார் பகலையும்வாத வயித்தியமும்
பரிவான ஞானயோக மந்திரசித்தி சொல்வார்
கூசுவாரவர் கையால் மண்ணை தொட்டாலுங்
குறித்ததெல்லாம் பொன்னாகிப் போகுமது பாரே. 126

பரிபாஷைகளறிய

பாரேநீ வீண்பரானால் வருடசேதி
பாடினோ மைந்நூரில் திரட்டுப்பாஷை யெல்லாம் விண்டோம்
பேரேநீ பெரியேர்கள் பிரபல்லியத்தைச் சொன்னோம்
பெரிதான மர்மமெல்லாம் பேசினோம் பாரு
ஆரேநீ யைந்நூற்றிரட்டு ஆர்கொடுக்கப் போறார்
அறிந்தவர்கள் கொடாரையா அரிது மெத்த
கோரேநீ யிந்நூலைக் கொடுத்தீரே யாகில்
குஷ்ட காமாலை பாண்டு குலையெய்து மென்றே. 127

சகலசத்துக்கும் தொழில்களிட பேரறியவும்

என்றான வாதமொடு வயித்தியத்தின் கூறு
மியல்பான மாந்தரிடு மெண்ண வொண்ணாக் கூறும்
நன்றான ஞானமொடு மவுனமதின் கூறும்
நல்லட்ட மாசித்து மாரணத்தின் கூறும்
வன்றான வசியமதின் திட்டையது கூறும்
வளமான சரமொடுங்கும் வாசியதின் கூறும்
அன்றான பொடியெல்லாம் இந்நூலிற் சொல்வோ
மரகரா திரட்டைந்நூ றதிசயத்தை காணே. 128

வாதத்துக்குப் பத்துத்திங்கள் பிண்டம்

காணவென்றால் வாதமது செய்யும் வகைகேளு
கலங்காத புலத்தியனே வெகுகூட மிதுதான்
வாணவென்றால் வாதத்துக்குப் பத்துத்திங்கள் பிண்டம்
வஸ்துவைநீ கொண்டுவந்து மூலசுத்தி செய்து
தாணவென்றால் தலைமயிரு சவ்வு கோரை போக்கித்
தனதாக வாழ பந்தனைமிகவே யுலர்த்தி
சாணவென்றால் சரகது போல் ரவியுலரச் செய்து
சரக்கதனக் கல்லுரலில் தாக்கிடுவீர் காணே. 129

கன்னிமுலைப்பால் தெளிவு

தானான தலைச்ச னுண்ணும் கன்னிமுலைப்பாலு
தருவான பாலிருநாழி கொண்டுவிட்டு
ஏனான ஏழுகுலக்கை யினாலிரு சாம
மியலாக விடித்து மாத்தூளது போலாகில்
பானான பாண்டமதில் தோண்டி மாத்தூளிட்டுப்
பனிநீரு அஞ்சுபடி பாண்டத் திட்டுக் கரைத்து
மானான மந்நாள் முழுதும் தெளிய வைத்து
மத்தெளிவை மறுபாண்ட மறுநாள் தனில்வாரே. 130

தலைச்சன்பிள்ளை பூநீர்க்குழம்பு

வார்த்து அப்பா பாண்டமதை யடுப்பின் மேலேற்றி
வளமான வொருமரத்தின் விறகாற் றீயெரிக்க
சேர்த்த தலைப்பிண்டப் பூநீர் கொதிக்கும் பாரு
செயபாக மக்கொதிதான் கண்டவுட னையா
ஊர்த்த பூநீர் குழம்பு படியொன்றரை யாகில்
உறுதிபெறு மக்குழம்பின் பாண்டமதை யிறக்கி
ஆர்த்ததனை யாறவைத்துப் பெரும்பீங்கான் றன்னில்
அதையிறுத்து அதற்கடியின் புளிபதனஞ் செய்யே. 131

பேதனஞ் செய்யப் பத்துநாள் சித்திரை ரவியில் வைக்க

செய்துநீ பீங்கானதை யெடுத்துரவி முகத்தில்
செயம்பெறவே பத்துநாள் சித்திரைதன் ரவியில்
நைதுநீ வைத்தீரா மாகிலையா
நல்லெண்ணை அதுபோலக் கசிவிறங்கும் பாரு
ஐதுநீ அண்ணாடம் பத்துமுறை ஐயா
அக்கசிவை யிறுத்தாக்கா லதிரட்டு முப்பு
வைதுநீ யிராதே யிவ்வுப்பின் பேரு
வாயதனாற் சொல்லவு நாவுண்டோ விதுபாரே. 132

கசிவிறுத்துப் போட வுப்பின்பெயர்

பாருமிதற் கனேகம் பேர் பாடினார் நாலு
பருங்கப்பிக் கல்லுப்புப் பாறையுப் பாகில்
ஏருநீ யனேகம்பே ரென்னாற் சொல்ல வெளிதோ
வெழுதவென்றால் வெள்ளேடு இல்லைஐயா கேளு
ஆருநீ ஐஞ்ஞூறு திரட்டு விதுவாகு
மடைவான விதுசுருக்க மருளொண்ணாது
மூருநீ மூன்றுப்பு மொன்றாகச் சேர்த்து
முக்கியமுள்ள பீங்கானில் முனையாகப் போடே. 133

விந்துதெளிவு

முனையான வாணவிந்து சேர்கொண் டைய்யா
மூதண்ட மாகில் பேரண்டச் சுன்னந்தான்
அனையாக வதிலிட்டு வொருசாமந் தீயில்
அன்பாக வைத்தீராம் மாகிலையா
வினையான விந்ததுவும் தெளிந்து நீராகும்
விளங்கவே யிந்நீரும் பனநீரொரு சேரு
குனையாம லிருநீருங் கூடசேர்த்துக்
குருவான வுப்பதனி லிட்டுமத்தியே. 134

ஆள் புழுங்காவிடத்தில் பந்தலிட்டு மேடை போடவும்

மத்தித்து வாள்புழுங்கா விடத்தில் பந்தலிட்டு
மகத்தான மேடையது வளமாநீ செய்து
அத்தித்து அம்மேடை யதனிலையா
அருளான வுப்பதனை யதன்மேல் வைத்து
நத்தித்து மண்டலம் நாளதிகாலம்
நண்பாக மத்தித்து நீரதனைத் தெளித்து
வத்தித்து மான்தோ லாசன மீதிலிருந்து
வாலைமூலத் தியான மண்டல மோதே. 135

வாலை மூலத்தியான மண்டலமோதவும் நீரிலிறந்தவள் சாம்பல்

ஓதவே ஓம்சவ்வும் கிலியும் ஐயும் ராரா
ஒகோகோ கிறியும் ஘ரீரியும் அறிம் வாலை ராரா
ஆதவே யவசிமந அம்அங்கு சாயா
அருளுவாய் மம்மாதா யிராராநீ
மாதவே யறுகோணம் நீரிலிறந்தவள் தன்
மகத்தாவி சுடுகாட்டுச் சாம்பலதின் மேல்
வாதவே யறுகோண மிட்டு "ரில்வெட்சரம்
வசனிப்போ மீராறு மிதிலடையாமே. 136

அறுகோணத்தில் முக்கோண மடைக்கவும்

அடைத்து இருகோண மதில்ரேகையாறு
அதன்மேலே மாடவாசலது நாலு
எடைத்திட்டுச் சக்கர மெழுதியே ஐயா
இயலான வறுகோண பீடமது நடுவில்
முடைத்துநீ முக்கோண மிட்டுதீரு
முனையான பிரணவம் இறிம்மம் சீறியும் மென்று
வடைத்துநீ முக்கோண மிம்மெழுத் திட்டுவசனிப்போம் கோணம்
வாசல் வறீம் மென்று சுட்டே. 137

சுட்டியே யிவ்வட்சரங் கொண்டு மொன்றுக் கேட்டு
கனத்த வாசலுக்கு நால்பனி ரண்டுமடைத்து
அட்டியே வாராமல் பானம் வஸ்து சுத்தி
யன்னமுட னறுசுவையு மமிர்தப்பால் கனியும்
தெட்டியே தேன்கனி கஸ்தூரி சந்தனம்
திருமஞ்சனம் புட்ப தாம்பூல மாகில்
வட்டியே தூபதீப முங் கொண்டு
வாலை மண்டல முருலட்சம் செபிப்பீரே. 138

செபிப்பீரே புலத்தியனே மகராச யோகி
செபித்தாக்கால் மண்டலமதித சித்தியாகும்
முபிப்பீரே முப்பூவும் பூர்க்கு மதினேர்மை
மூவுலகும் வாசமென்னால் முணர்வ தெளிதோதான்
மபிப்பீரே மல்லிகையின் வாசமது போலா
மகத்தான புட்டது போல மார்க்கமது வாகும்
அபிப்பீரேயதைக் கொண்டு சீசாவி லிட்டு
அருளான பேரண்ட மெழுகதனைக் கேளே. 139

பேரண்ட மெழுகு

மெழுகான வகைகேளு சமாதியில் புதைக்க
மேலான முழுஅண்டத் தலையோட்டைக் கொண்டு
நழுகாமல் நறுக்கியதைக் கிளியாகக் கட்டி
நல்ல பூநீர் கரைத்து அதிலிட்டு நீதான்
மழுகாம லடுப்பேற்றி யெரித்திருநாழி
மகத்தான கிளியதனை வளமாக வெடுத்து
தழுகாமற் கிளியவிழ்த்துக் கல்வமதி லிட்டுச்
சார்வான பனிநீரு இட்டுநீ தாக்கே. 140

மெழுக்கவிழ்தம் கெசபுடம்

தாக்கி மெழுகுப் போலதை யாட்டி நீஐயா
தருவான மெழுகதனை வழித்துக் குகைசெய்து
ஆக்கியே ரவியுலர வதனைவைத் தெடுத்து
அருளான முப்பூவை யதனுள்ளே யிட்டு
வாக்கியே மெழுசலை யேழுமது செய்து
வசனித்தோ மெழுக்கவிழ்தம் வளமாகச் செய்து
நாக்கியே ரவிசாம முலரவதை வைத்து
நல்லகாட்டெரு முட்டை கசபுடத்திற் போடே. 141

புடமாறி யெடுக்க யானைக்கொம்புப் பரண்டி

போட்டதைப் புடமாறி யெடுத்தீராகில்
புட்பம்போல் நீறியது புனிதமதுவாகும்
நாட்டு குகை யுடைத்ததனை வழலைச் சுன்னத்தை
நல்ல வானைக்கொம்பும் பரண்டி தனி லைடத்து

வாட்டுபெற முன்சொன்ன வாலைமூலத்தை
மருவியே சுக்கிர வாரம் தனிலையா
ஆட்டுநீ யன்னமறு சுவையும்பால் பழமு
மன்பான வஸ்து சுத்தி திருமரு மஞ்சன மாமே. 142

பூசையுரு பதினெண் வாத்தியம்

திருவான மஞ்சளதி னாலே யுருச்செய்து
செயலான வஸ்திர மாபரண மணிந்து
புருவான புட்ப தாம்பூலம் தேன் கனியும்
புகழான வடை தோசை கனிபழ முமாகில்
அருவான கஸ்தூரி புனுகு சவ்வாது
அருளான குங்கும மனுக்கணிந்து
பருவான பதினெட்டு வாத்திய முழங்க
பன்மைபெறப் பெரும்பூசை பாலிப்பாய் நீயே. 143

சகலசித்தி

பாலிப்பாய் முன்சொன்ன வாலை மூலத்தைப்
பரிவான நூற்றெட்டு வுருச் செபிப்பீராகில்
ஆலிப்பா லாயி மனோன்மணி வாலை
யருகு நின்று பூசைபோ லெதிரே நிற்பாள்
வாலிப்பாள் கன்னிசிறு பத்துவயதாகில்
வசனிப்பாள் சகலகலைக் கியான மூலந்தான்
நாலிப்பாய் நாயகியைக் கண்டபோதையா
நல்வினை யுனக்கெய்து மதீதவினைகள் போச்சே. 144

போச்சென்ற பூசையது செய்துநீ யையா
புகழான சுன்னமதைப் பதனமதாய்ச் செய்து
லாச்சென்ற திரட்டைஞ்நூற் சூட்சாதி சூட்சம்
வசனித்தோம் கருக்கடையாய்க் குருவதனைச் சொன்னோம்
காச்சென்ற விந்நூலைக் கண்டவர்கள் கைவிட்டார்
கருவாகச் சொல்லிவிட்டோ மிந்நூலாதி
மாச்சென்ற வழலைமுப்புச் சுன்னந்தன்னை
வசனித்தோ மின்னமொரு வாதஞ் சொல்வோமே. 145

காலாக்கினித் தயிலம் எட்டுத் திங்கள் பிண்டம்

சொல்வோ நாம் வாதமென்ற தொழிலுக் கெல்லாஞ்
சூட்சமென்ற தயிலமொன்று சொல்லுவோநாம்
சல்வோநாம் சண்டை மாருதங்க ளெல்லாஞ்
சணத்திலே காலாக்னி யின்றயிலத் தாலே
மல்வோமே மலைகுகைகள் நீறிப்போகு
மண்ணெல்லாம் பொன்னாகு மகிமைமெத்த
பெல்வோமே யெட்டுதிங்கள் பிண்டம் வாங்கிப்
பெலத்த தலை மயிர்சவ்வு கோறை போக்கே. 146

உள்மூலசுத்தி மழைக்காற்று ரவியாகாது

போக்கியே யுள்மூலஞ் சுத்திசெய்து
புகழாக வாள் புழுங்கா விடத்திலேகி
ஆக்கியே யரைச்சுவர் செய்து முடிப்பித்து
அவ்விடத் திப்பிலிப்பிண்ட மடைவாய் வைத்து
நாக்கியே சுவர்மேற் பலகைமூடி
நலமாகச் சந்துகட்குச் சாந்துசெய்து
வாக்கியே மழைக்காற்று ரவிபடாமல்
மண்டலந்தான் சென்றபின்பு பலகை வாங்கே. 147

வாங்கியே சுவரேறிக் குதித்துப் பார்த்தாற் பிண்டம்
வளமான விறைச்சி யெல்லாம் புழுக்களாய்ப் போகும்
ஏங்கியே திரியாதே யெலும்பெல்லா மெடுத்து
இயலான புழுகதனை யெடுத்து நீதான்
நாங்கியே புழுகதனை ரவிசரக்கா யுலர்த்தி
நல்லவெலும் பத்தனையும் பொடி பொடியாய்ச் செய்து
ஆங்கியே யந்திடைக்கு கரூமத்தம் பட்டை
அத்திப்பட்டை நெல்லிப்பட்டை யழிஞ்சிப் பட்டை யாமே.148

சந்தனமரச்சேவு

ஆமென்ற சந்தனத்தின் மரத்தில் சேவு கொண்டு
அடைவாக வதைச்செருக்கி யருளும் வகையெல்லாம்
போமென்ற பெரும்பாண்ட மதிலிட் டிதனைப்
பரிவாகப் பூமிதனிற் சாண்குழி தான் வெட்டி
வேமென்றும் வெட்டியதுக் குள்ளிருசாண்
விதமான குழியொன்று விளங்கவே செய்து
காமென்றுங் குழிதனிலே கலசமதை வைத்துக்
கருவான சாணக்கை கொண்டு சில்லு போக்குவாயே. 149

இத்தயிலத்திற் சரக்கெல்லாம் மாளும்

போக்கியே சாணக்கை கலசமேல் வைத்துப்
புனிதமென்ற பாண்டம் நடுச்சில்லுப் போக்கிஐயா
மைக்கியே மையமதாய்ப் பாண்டமதைவைத்து
மகத்தான பாண்டமதின் வாய்சட்டி மூடி
வாக்கியே சட்டநடுத் தமருந்து செய்து
வளமாகச் சந்துவாய் சீலையது செய்து
சாக்கியே சமாதியிலே வைத்த தவனெருவு
சார்வாகக் கொண்டு குழிதான் மூடுவாயே. 150

மூடியதின்மேல் புளிமரத்தின் விறகால்
முச்சாமந் தீயெரிப்பாய் விறகால் மைந்தா
ஆடியேநீ யெரித்தா லவ்வனல் தான் பட்டு
அகோர காலாக்கினியின் றயில மதிறங்கும்

தேடியே குழிதிறந்து கலசமதை யெடுத்துத்
தெளிவாகப் பார்த்தை யென்றால் திறமென்னாற் சொல்ல
காடியே யித்தயில மொருவருக்கும் காட்ட
கருவான சித்தர் கண்டாற் கனமோசந் தானே. 151

தானான தயிலமதைச் சீசாவி லிட்டுத்
தருவாக முன்சொன் வாலையிட மூலம்
தேனான வுருநூற்றெட்டுச் செபிப்பீராகில்
சித்திபெறு மறுபத்து நான்கு சித்துமாடும்
பாறான தயிலம்தைப் பதனமதாய் வைத்துப்
பலதொழிலு மாடுதற்குத் தயிலமதிற்சேரு
வானான வழலைசுன்னமை விராக னிடையிட்டு
மறுசீலைதனிற் மார்க்க மதாய் வையே. 152

மார்க்க மெனுந் தயிலமதிற் சரக்கெல்லாமாளு
மகத்தான சரக்கெல்லாஞ் சுன்னஞ் செய்யலாகும்
வார்க்க மென்ற தயிலமிதால் சரக்கெல்லா மெழுகா
மகத்தான செந்தூர மாகு மிதனாலே
ஆர்க்கமென்ற நவரத்தினம் நவநீத மாளும்
அரகரா மித்துருவுஞ் சத்துருவு மாளும்
சாக்கமென்ற சதகோடி தொழிலாடு மிதனால்
சச்சிதாநந்த வெளி சார்பு பெறலாமே. 153

அயச்செம்பு

ஏறலா மயச்செம்பு ஆகும் வகைகேளு
இயலாகச் சொல்லுகிறோ மிதனுடைய மார்க்கம்
வாறலா மயமதுவிற் சேரொன்று வாங்கி
வளமாக முப்புசேர்ந்த தயிலமதிற் றாக்கி
ஆறலா மயமதுவு மரைநாழி யிருந்தால்
அயமதுவின் களங்க மெல்லா மற்றுப்போமைந்தா
தேறலா மயமது வையெடுத்துநீ பார்த்தால்
தெளிவாக முன்தெரியு மயமது செம்பாமே. 154

அயச் செம்புத் தங்கம்

ஆமேதானிச் செம்பில் மாற்றதிகம் பாரு
ஆகுமே யயச்செம்பு தங்கமதைக் கேளு
சேமேதானிச் செம்பின் மேலே முப்புச் சுன்ன
செயலான விராகனிடை யெடுத்தெச்ச மிட்டு
கோமேதான் குழைத்ததனைச் செம்புமேற் பூசி
கோழியென்ற முட்டை புடமதனிற் போட்டால்
ஓமேதா னுருகியது பதினாறு மாற்றா
முண்மையிது புடமாறி யெடுத்து மாற்றுரையே. 155

உரைத்திதைப் பார்த்திடவே சூரியகாந்தி ஒளிவதுபோ
லாகுமென்றா லுரைக்க வெளிதாமோ
செரைத்துநீ வறுமைவருங் காலத்திலையா
செலவுசெய்து சிவயோகஞ் செயதிடீர்தானும்
அரைத்துநீ அயச்செம்பது வின்தங்கமதைச் சொன்னோ
மாருக்கும் வெளிவிடாதே யரனாணைபதனம்
தரைத்தான தருமமு முலகமதிற் செய்து
தனிப்படவே யெளியோர் போல் தழைத்திருப்பாயே. 156

தாம்பிரத்தில் தங்கவேதை யறியவும்

தழைத்ததொரு தாம்பிரத்தைத் தங்கமதாய்ச் செய்யத்
தருவாகச் சொல்லுகிறோம் தாம்பிரத்தின் வேதை
செழைத்ததொரு தாம்பிரஞ்சேர் கொண்டுநீதான்
செயலாக முப்புச் சுன்னமிட்ட தயிலத்தில்
அழைத்த தாம்பிரமிட்டு அரைநாழி சென்றா
லதின்களங்கம் போய்விடு மாறுமாற்றாகும்
விழைத்துநீ யதையெடுத்து வழலைசுன்னம்
விராகனிடை கொண்டு எச்சமதால் குழைத்திடு வீர்தானே.157

தானென்றுந் தாம்பிரத்தின் மேலே பூசித்
தருவான மயிற்புடந் தருவிப்பீராகில்
ஆனென்று முருகியது பதினாறு மாற்றா
மடைவான புடமாறி யத்தங்க மெடுத்து
வானென்றும் வாசியோகஞ் செய்யும்போது
வறுமை வந்தால் தங்கமாறிநீ கொள்ளு
மானென்று மிப்பொருளை ஒருவர்க்குஞ் சொல்லா
மரனாணை யுண்மையிது வெளிவிடா தானோ. 158

வங்கத்தில் தங்கவேதை யறியவும்

வெளிவிடா திருப்பொருளை வேதாந்தி யானால்
விடுபட்டுத் தனியநீர் வீறிவாழ்வீர் காண்
தளிவிடத் தாம்பிரத் தங்கமதைச் சொன்னோம்
தண்மைபெறு வங்கத்தின் தங்கவேதை கேளு
வளிவிடா வெள்ளீய வங்கஞ்சேர் கொண்டு
வஸ்துசுன்ன மிட்டதயிலத் திற்றாக்கி
அளிவிடா அரைநாழி யிருந்ததே யாகி
லடைவான வங்கமதின் களங்கமற்றுப் போச்சே. 159

வங்க வெள்ளி முசற்புடமறிய

ஐத்துப்போ மதுசொக்க வெள்ளியதாகு
மருளான விராகனிடை வழலைசுன்னந்தான்
ஏத்துப்போ மெச்சமதாற் குழைத்ததனை ஐயா
யிவ்வெள்ளி மேபூசி முசற்புடந் தன்னில்

பொத்துப்போம் புடமதுதான் போடுவீராகில்
புகழாக வுருகுமது மாற்றுப் பதினாறாம்
வைத்துப்போ மாறிபுட மெடுத்ததனைக் கொண்டு
வளமாசை மாதியோகஞ் செய்யும் போதென்றே. 160

இரசத்தங்க வேதை

என்றான வறுமைவருங் காலத்தி லெடுத்து
யாபித்தங்க மிதைச்செலவு செய்வாய்நீ
மன்றான யித்தங்கம் வெளிவிடா தொருவர்க்கு
மகத்தான சாபமெய்து மகபூதி யன்மேலாணை
குன்றாமற் சொல்லிவிட்டோங் குருவின் முறையிதுதான்
குவலயத்திற் றனியவே கொண்டுவாழ் வீர்காண்
நன்றான வங்கமதில் தங்கவேதை சொன்னோம்
நல்லரச வேதையுட நடத்தைதனைப் பாரே. 161

வாலை ரசமறிய

நடத்தையென்ற ரசவேதை கருக்கடையாய்ச் சொல்வோம்
நண்பான ரசமதனில் சேர்கொண்டுநீயும்
அடத்தையென்ற வழலைசுன்ன மிட்டதயிலத்தில்
அடவான ரசமதனை யிட்டரைதான் நாழி
கடைத்தது போகாமல் சென்றதே யாகில்
கூரான ரசக்களங்க மடியில் நிற்மொகில்
பெடத்தையென்ற வீயமெல்லாம் பிறந்தங்கே போகும்
பேரான வாலைரச மணி போலாமே. 162

மணியான வாலையடா ரசமணியைக் கொண்டு
வழலைசுன்னம் விராகனெடை யெச்சமதாற் குழைத்து
அணியான ரசமணி மேலேபூசி
யடவாக வறுபதெரு மூட்டைபுடம் போட்டால்
உணியான வுருகு பதினாறு மாற்று காணும்
ஓகோநீ புடமாறி யெடுத்தீராகில்
வணியான வதினொளிவு யென்னாற்சொல்ல வெளிதோ
வசனிக்க நாவுண்டோ வாலையது வாமே. 163

வாலையென்ற சூரியன்போ லதிற்சாந்தி யொளி வீசு
மகராச யோகஞ்செய்ய வறுமைவருங்காலம்
செலையான தங்கமிதைச் செலவுசெய்து கொள்வாய்
செகத்திலே யிப்பொருளை யொருவர்க்குஞ் சொல்லா
வலையான கருவதனைச் சொன்னதே யாகில்
விழுகுமண்ட யிடியிடித்துத் தலைதெறித்துப் போகும்
குலையாலே நாய்போலே குவலயத்தில் தனியே
கூராகத் திரிந்துவாழ் குணமுள்ள வாரே. 164

ஐங்காயத் தயிலம்

குணமுள்ள ரசவேதை தங்கமிதைச் சொன்னோ
குருவான வைங்கோலத் தயிலமதைக் கேளும்
கனமுள்ள கன்னியடா சமாதியிலே வைத்தால்
கருணைபெறு மிருமண்டலஞ் சென்றதேயாகில்
நலமுள்ள ராக்காமை நடுப்பாதி நேரம்
நல்லசுடுகாடு சென்று சமாதியதை வெட்டி
அனமுள்ள வவளுடைய வெலும் பெல்லாங் கொண்டு
அட்சணமே வந்ததைப் பொடியாகச் செய்யே. 165

உப்பு வகையறிய

செய்யப்பா வழலையுப்பு சேரரை தாளுனாகுஞ்
செயலான கல்லுப்பு சேரரை தானாகும்
மெய்யப்பா வைங்கோல வுப்பு சேரரை தானாகு
மேலான அழிஞ்சி மரக்கொட்டை யரைசேரு
பொய்யப்பா சொல்லவில்லை பேய்ப்பீர்க்கன் விரைதான்
போடு அரைசேரு புங்கங்கொட்டை யரைசேரு
எய்யப்பா நாக்குபூசி யியலாரை சேரு
யிதையுலர்த்தி வீதமெல்லா மிகழாதைக் கேளே. 166

சுத்த சலமறிய

கேளப்பா யஞ்சுபடி சுத்தசலந் தன்னில்
கிருபையென்ற வகையெல்லா மதிலூறப் போட்டு
ஆளப்பா நாற்சாம மதையுலர வைத்து
அடவாக யெடுத்ததை ரவியுலரச் செய்து
நாளப்பா கல்லுரலிலோ ரிடியாயிடித்து
நல்லபெரும் பாண்டமதில் வகையெல்லா மிட்டு
வாளப்பா பாண்டமே சட்டிதனை மூடி
வளமாக நடுத்தமறு வசனிப்பாய் நீயே. 167

எருவுலகை யறிய

நீயான புலத்தியனே சொல்லக்கே ளையா
நிலையாகச் சந்துவாய் சீலையது செய்து
நலையான நாலுமுழக் குழியதுதான் தோண்டி
நளினமென்ற சமாதியெரு யிருமுழந்தான்போட்டு
இலையான யிருசாணு யொரு விற்கு ழிதோண்டி
யியலான கலசமது அக்குழியில் வைத்து
சலையான சாணக்கை நடுத்துவாரம் போக்கிச்
சார்வான கலசமதின் மேலதை வையே. 168

வைத்து யிசைவாக நடுமேலே யதைப்பாண்டம்
வளமாக வைத்துநீ குதிரை யெருவையா
மைத்து மாட்டெருவு ஆட்டெருவு முலைப்புழுக்கை
மகத்தான சுடுகாட்டுச் சாம்பல் கரிகலந்து
ஐத்துநீ யக்குழியை மூடியதின் மேலே
யத்திவிற கதனாலே முச்சாம மெரித்தால்
முத்து முப்புறமதனை யெரித்த காலாக்கினி போல்
மூதண்ட வைங்கோலத் தயிலமது வாமே. 169

இந்நூல் வெகுபதனம்

ஆமென்ற திரட்டைந்நூற் கருக்கிடையாய்ச் சொன்னோம்
அவனியில் மனிதரெல்லாருஞ் செய்வார்கள்
வேமென்ற வெகுபதன மறிவுள்ளோர்க் கெய்தும்
வெளிவிட்டால் விழுகுந்தலை தெறித்துப் போமையா
மாமென்ற குழியைத் தோண்டிக் கலசத்தை
மகிழ்வாக யெடுத்துநீ மார்க்கமதாய்ப் பார்த்தால்
நாமென்றுஞ் சொன்னமிது ஐங்கோலத் தயிலம்
நல்லதயில மிதனைப் பதனஞ் செய்வாயே. 170

இத்தயிலமொருவர்க்கு விண்டால் தலைதெறித்து வெடித்துப் போம்

செய்யுந் தயிலத்தினில் வெகுகோடி தொழில்கள்
செய்யலாம் புலத்தியனே க்ஷணப் போதிலையா
மெய்யான தயிலமிது ஆர்க்கும் விள்ளாதே
விண்டீரே யாமாகில் வெடித்துத் தலைபோகும்
பொய்யாது ஐங்கோலத் தயிலமிது பாரு
புதுமைபா ரித்தயில மீதத சித்தியாடும்
ஐயாகேள் புலத்தியனே ஐங்கோலஞ் சொன்னோ
மாருமறியார்க ளிதினாட்டமதைக் கேளே. 171

இத்தயில மறுதயிலங்கூட்டிக் கொள்ளவும்

கேளப்பா தயிலமிதி லிருசேரு வாங்கிக்
கெடியான பீங்கானி லித்தயிலமிட்டு
வாளப்பா வழலைசுன்ன மரைப்பலந்தான் போட்டு
வடிவான காலாக்கினி யின்றயிலமது பலந்தான்
பேளப்பா பீங்கானி லிட்டுமிதை ஐயா
பேரான விதிற்கூறும் வீதவகை கேளு
வேளப்பா பூரமது பலமரை தானாகும்
மேலான பச்சையது பலமரை யாமே. 172

அறையான கெளித்தி பச்சை யரைப்பல மாகும்
அடவான சாதிக்கா யேலமரைப் பலந்தான்
குறையாம லவங்கப்பூ அரைப்பல முமாகுங்
கூரான மிளகரை கிராம் பரைப் பலந்தான்
வரையான சுக்கதுவும் அரைப்பலமுமாகும்
வளமான கோரோசினை யரைப்பலமு மாகும்
திறையான திப்பிலி யரைப்பலமு மாகுஞ்
செயமான வகையெல்லாங் கல்வமதிற் றாக்கே. 173

பூமியில் மண்டலம் புதைக்கவும்

தாக்கியே பொடித்ததனைத் தூளதனைக் கொண்டு
தருவான வைங்கோலத் தயிலமதி லிட்டு
மாக்கியே மண்டலம் பூமிதனிற் புதைத்து
மகத்தான தயிலமதை யெடுத்துநீ ஐயா
தேக்கியே தேவியின்றன் பூசைதனைச் செய்து
தெளிவான யித்தயிலம் விராகனெடை கொண்டு
வாக்கியே மண்டலங் கொள்வீரே யாகில்
வசனித்தோ மெமன் மாண்டான் வாலையாவாயே. 174

வாலை பதினாறு வயது சந்திரகலை

வாலையென்ற பதினாறு வயது மாவாய்
மன்மதன்போ லொளிவு வடிவமது வாகும்
மாலையென்ற சந்திரகலை பதினாறாகும்
மானிலந் தன்னிலே வெகுகோடி காலம்
ஓலையென்ற யுகாயுகந்திர மிருப்பாய் நீயும்
ஓர்மண்டலங் கொண்டால் கெவனமது பாய்வாய்
ஆலையென்ற தயிலமொரு வருஷங் கொண்டால்
ஆதிசிவனைப் போலவர சாளுவாயே. 175

ஆறுவரை யதிசயம்

அரசாளுவா யாறுவர யதிசயமுங் காண்பாய்
அகமிருக்கும் பொதியை யடவெல்லாங் காண்பாய்
சரவான சூரியனுஞ் சந்திரனுங் காண்பாய்
சாயலவர் போகிறதும் வருகிறதுங் காண்பாய்
நரசான வாய்தந்தி யிருப்பிடமுங் காண்பாய்
நவகோடி சித்தருட நடத்தைதனைக் காண்பாய்
பரசாள் வாய் சிதம்பரத்தின் பாசப்பையுங் காண்பாய்
பலகோடி ரவிமதியும் பார்க்கலா மென்றே. 176

இரண்டு மண்டலங் கொள்ளவும்

என்றான யித்தயில மண்டல மிரண்டு
யியலாகக் கொள்வீராய் கொண்டீராகில்
நென்றான நிலைக்கண்ணாடி பார்ப்பது போல்
நீரிலுள்ள பொரு ளதிசயமுங் காண்பாய்
உன்றாக வுன்கண்ணா லூடுருவப்பார்த்தா
லுறுதிபெறு மூவுலகு முண்மையாய்க் காண்பாய்
பொன்றான பூமி பாதாளமுங் காண்பாய்
புவனசாகர மகிமை புதுமை காண்பாயே. 177

உலகத்தில் வேதாந்திகள் தேறுவோர்

காணுவோ ருலகமதில் வேதாந்தி யாய்த் தேறுவார்
கருவான தயிலமதில் விராகனெடை கொண்டு
மாணுவோர் மானிடவர் மண்டலங் கொண்டால்
வயதவர்க்கு நூறு பிறவி யொருநூறு
ஏணுமிரு மண்டலமித் தயிலங் கொண்டா
லிருநூறு வொருநூறு முன்னூறு மாகும்
மூணு மும்மண்டல மித்தயிலங் கொண்டால்
முன்னூறு வொருநூறு நானூறுவாமே. 178

தயிலங் கொள்ளும் விபரம்

வாமென்ற யித்தயில மண்டலம் நாலு
வளமாகக் கொண்டிடவே வயதைந்நூறு
மாமென்ற யித்தயில மண்டலமஞ்சு
மருள்பெறுக்க கொண்டிடவே வயதெழுநூறு
ஏமென்ற யித்தயில மண்டலமேழு
யியலாகக் கொண்டிடவே வயதெழுநூறே
....
.... 179

ஆயிரத்தொரு நூறுவயது

நூறான யித்தயில மண்டலமெட்டு
நுண்மைபெறக் கொண்டிடவே வயது தொளாயின்
வாறான யித்தயில மண்டல மொன்பது
வசனித்தோங் கொண்டிடவே வயதாயிரந்தான்
மாறான யித்தயில மண்டலம் பத்தும்
மகிழ்பெறவே கொள்வோர் கள்பத்துநூறொரு நூறு
ஆறான பத்து மண்டலம் தனி கொண்டால்
ஆயிரத் தொரு நூறு வயது வாழ்வாரே. 180

வாழ்வாறே யாயிரத் தொருநூறு வயது
மகத்தான வைங்கோலத் தயிலமிதைக் கொள்வோர்
வாழ்வாரே யுகாயுகம் வரை கோடாகோடி
மைந்தனே யவர்க்கு செட்டை வளருமது பாரீர்
வாழ்வாரே க்ஷணப்போதில் புவன சாகரமும்
வரைநொடியில் சுத்திவர லாகுமிது பாரீர்
வாழ்வாரே குளிகைக்கு யிதுரெட்டிப் பாரு
மகாகோடி சித்தருக்க திகமென்னலாமே. 181

அஷ்டமாத்தயிலம் எழுவரிறந்தவர்கள் உள் மூலசுத்தி

எண்ணலா மின்னமொரு தயிலமதைக் கேளு
யெடுத்துரைப்போ மஷ்டமா சித்துவிளையாட
அண்ணலா மந்நூற் றிரட்டு கருக்கிடையாய்ச் சொல்வோம்
ஆடலாங் கோடாகோடி யதிசயங்கள் மெத்த
வண்ணலா மித்தயில மாருஞ் சொல்லாரையா
வசனிப்போங் கழுவதனி லிறந்தவரைக் கொண்டு
மண்ணலா மாள்புழுங்கா விடந்தனியாய்ப் பார்த்து
மாரைச்சுவர் சுற்றிலுந்தான் வலுவாய்ச்செய்யே. 182

பிச்சுவகை

வலுவான கருவதனை பதினொரு மண்டலந்தான்
வளமான வுள்மூலஞ் சுத்திசெய்து மைந்தா
சலுவான சரகதுவா யுருவதனை யுலர்த்திச்
சார்வாக வதையெடுத்துப் பதனமதாய் வைத்து
அலுவான வதிற்சேரும் பிச்சு வகைகேளு
அந்தணனாங் கருங்காக்கையது சமூலம் வாங்கி
மலுவான வாந்தை மயில் கருங்கோழி தானும்
மகத்தான செம்பருந்து மதுவோ டஞ்சாமே. 183

பட்சியிறகு போக்கவும் நாலுகால் சீவ பட்சி பிச்சு வகைகள்

அஞ்சான பட்சியுட மயிரதனைப் போக்கி
அன்பான வாள்புழுங்கா விடத்தி சரகுலர்த்தி
பஞ்சான பட்சியிதைப் பதனமதாய்ச் செய்து
பண்மைபெறு மின்னமொரு பட்சி பிச்சுவகை கேளும்
நஞ்சான தேவாங்கு கருநாய் தானாகில்
நல்ல கரும்பூனை நுழைநரி கருங்குரங்கு
வஞ்சான யிவ்வஞ்சின் பிச்சுவகை வாங்கி
வளமான கச்சமதிற் பதனஞ் செய்வாயே. 184

உரல்பாகம் பூமியிற்குழி வெட்ட

செய்வாயே புலத்தியனே வகையெல்லாங் கொண்டு
சீரான கல்லுரலிலிட்டு வோரிடிப்பாய்
சைவாயே சதைத்து வொருபாண்ட மதிலிட்டுச்
சைதன்னிய மாகவு நீசட்டியதன் மேற்கவிழ்த்து
நைவாயே நடுத்த மறுநன்றாகச் செய்து
நன்மையாய்ச் சந்துவாய் சீலையது செய்
வைவா்யே யிருமுழந்தான் குழியது வெட்டி
மக்குழியி லிருசாணு குழி வெட்டிடாயே. 185

மண்டலமொன்று

வெட்டியக் குழிதனிலே கலசமது வைத்து
விதமான சாணக்கை கொண்டு சில்லுபோக்கி
அட்டியொன்றும் வாராமற் கலசமேல் வைத்து
அக்கலச மதன்மேல் பாண்டமதை யிட்டு
சட்டியே சமாதியெரு மாட்டெருவு ஆட்டெருவு
சார்வான சுடுகாட்டுச் சாம்பலதின் மூன்றும்
கொட்டியெரு போடதிலே மூடிப் போட்டே தான்
குழிமூடி மண்டலந்தான் குமுற வைப்பாயே. 186

மறுமண்டலந் தீயெரிக்கவும் தயிலம்

வைத்துமே யோர்மண்டலஞ் சென்றபிறகையா
மக்குழிமேலொரு மரத்தின் விறகா லெரிந்தான்
முத்துநீ முச்சாம மெரித்தீராகில்
மூதண்ட தயிலமது யிறங்கும் பாரு
ஐத்துஅக் குழிதோண்டீக் கலசமதை யெடுத்து
அருள்பெறவே பார்த்தை யென்றாலட்டமாகத் தயிலம்
செத்தபிண யெழுந்திருக்கு மித்தயிலம் பட்டால்
செகசால சஞ்சீவி தானித்தயிலமாமே. 187

கருநாகப் பழம்போற் காணும்

ஆமென்ற தயிலமிதில் வழலைசுன்ன மையா
அரைப்பலந்தா னிட்டு அதை மத்தித்தாயானால்
காமென்ற கருநாகப் பழமதுபோற் காணும்
காலபைரவ னுடைய பூசையது செய்து
வேமென்ற வாலை பூசை விளங்கநீ செய்து
வெகுபதன மாகவல்லோ சீசாவிலிட்டு
நாமென்ற பொட்டகத்தி லித்தயிலம் வைத்து
நவகோடி சித்து விளையாடவுந்தா னன்றே. 188

ஆகாசமோடி வித்தை பந்தலமேடை ஆசனம்பிள்ளையார்

ஆடவே வெகுசனங்க ளனந்தம் பேர்பார்க்க
ஆகாச மோடிவித்தை யருளக் கேளையா
பாடவே கடை பசார்தனிலே சென்று
பந்தலிட்டு மேடை யொன்று பண்டிபெறச் செய்து
மாடவே பூரணத்தின் மனதை நாட்டி
மாந்தோ லாசனமீதில் மைந்தா நீயிருந்து
சாடவே சாண்கலஞ் சாண மிட்டு மெழுகி
சார்வான மஞ்சளினாற் பிள்ளையார் வையே. 189

புளியிலை சேஷரிசி

வைத்தறுகு சூடி சாம்பிராணி வத்தி நட்டு
வஸ்து சுத்தி தாம்பூலந் தேன்கனி படைத்து
சித்திபெறக் காளபைரவ ருடைய தியானஞ்
செப்புவாய் முன்சொன்ன மூலமதைத் தானும்
உந்துநீ யுருநூறுயெட்டு சிப்பிநீராம்
ஓகோகோ அண்டரண்டந் திக்குபந்தனந்தான்
ஐத்துநீ மொருதட்டில் சேஷரிசி வைத்து
அரகராவொரு தட்டில் புளியிலை வையே. 190

அறுகோணச் சக்கரம் சத்தியுலக்கை நடவும்

வையப்பா சேஷரிசி வைத்திருக்குந் தட்டில்
வளமாக வொருதேங்காய் வைத்துநீ தானும்
பொய்யப்பா சொல்லவில்லை பிள்ளையார் வைத்திருக்கும்
புனிதமதா யதற்கெதிர் முன் சொன்ன வறுகோணம்
எய்யப்பா யிட்டு அதுநடுவில் கேளு
யியலான வேழு யெலுமிச்சம்பழம் வைத்து
ஐயப்பா வதுநடுவில் விராகனொன்று வைத்து
அதற்கப்பா லகத்தி யொன்று வுல்க்கை நடுவாயே. 191

நாலுமாறுக்கப்பால் வறுகோணமிடவும்

நட்டு அதற்கப்புறந்தா னாலுமாறுக் கப்பால்
நலவாறு கோணமிட்டு அறுகோண நடுவில்
வட்டுபெற வொருபையன் கையில் சேவுரிசி
வளமாக மவன்கையில் கொடுத் துட்கார வைத்து
அட்டுபெற விதற்கெல்லா மஷ்டமாத்தயிலம்
அன்பாகத் தொட்டுநீ வரவழைப்பா யெதிரியை
எட்டுதிக்கும் பந்தனஞ் செய்யோங் காளபைரவர்
உந்தனுக்குத் துணைவருவா இறியும் வாவாபொன்றே. 192

எண்ணவே யிந்தவூர் காக்கு மகமாயி
யென்பங்கில் குதிகொள்வாள் ஓம் ஸ்ரீரியும் சவ்வும் வாவா
அன்னவே யஷ்ட வீரசத்தி வாவாதாயி
அவ்வும் எலவும் அஷ்டதிக்கு முன்புதனந்தாயி
வன்னவே வாலைஐயும் வராகி கிரியும் வாவா
வருமான தோரெதிரியைத் தானென்ன வசமாக்கு மப்பா
பொன்னவே புவனை கிரியும் பூமாதே ராரா
போனெவன் வாயில் மண்ணைத்தெள்ளி நீதானென்னே.193

நீயான புலத்தியனே சொல்லக்கே ளையா
நினைத்தபடி யாடுமடா வாகாச மோடி
வாயான ஓம்.நங்.உக் கிரியும் குட்டிச் சாத்தி
பெருகிறதோ ரென்னெதிரி யைத்தான் வாயில்மண்போடு
மாயான மகாசெனந்தன்றி நீ ஐயா
வரவழைப்பா யிம்மோடி யெடுக்கு மந்திரவாளை
ஆயான வலர்வருவார்போட்டிக்குழலூதி
யரைநொடியி லிம்மோடி யெடுத்திடுவே னென்றே. 194

என்றேகேள் சகலமந்திர முச்சாடனமே செம்மண்
யிதையெடுத்துப் போடுவோ மென்றெதிரி வருவார்கள்
மென்றேகேள் பையனை வின்சேஷரிசி கொண்டு
வசிதயிமென்ற மோடி யெடுப்போன் மேலிதைப்போட்டால்
தென்றேகேள் தேகமெல்லா மக்கினிபோ லெரியும்
கேளும் நட்டுவக்காலி கொடுமதுபாரு
உன்றேகேள் ஒமெடிறு சேஷரிசி போட்டால்
ஒருகாதங் கொண்டுபோய் தள்ளும் பாரே. 195

பாருமிது வொருகாதம் போனவன்றான் றிருமா
படபடென்று மோடிக்குழை யூதியவன் வருவான்
ஆருமறியார்க ளிந்தவாகாச திமாடி
யறுகோணச் சக்கரத் தருகில் வருவான்பார்
வாருமிது சேஷரிசி மறுபடியும் போட்டால்
மகுடிக்குழல் தூள்தூளாய்ப் பொடியாய்ப் போகும்
காருமிது கனைத்ததே பூமிதனில் விடுவோன்
கால்கோட்டி விஷங்கடித்த பவனைபோற் றானே. 196

அறுகோணந்தா னடுதலறியவும்

தானான விவன்விழுந்தால் பின்னொருவன் வருவான்
சாடான வுச்சாடனங்கள் சம்பிரமமாய்ச் செய்து
ஏனான யிம்மோடி யிதோ யெடுப் பேனென்று
யெதிறிக் குழையூதி யவனியல்பாக வந்தால்

தேனான சேஷரிசி யவன்தேக மெல்லாம் போட்டா லென்ன
திரும்பி குட்டிச்சாத்தா னிருகாதங் கொண்டுபோகு
மானான மறுபடியும் கடிக்குழை யூதி
மறுகோணந் தாண்டி வருவா னவன்றான் பாரே. 197

உலக்கை தாண்டுதல்

தானென்ற யிம்மோடி வைக்குந் தலைவனையுங் கூட்டித்
தனைக்கொண்டு போவே னென்று வுச்சாடனமே செய்து
மூனென்ற மோடிக்குழை யூதி வருவன் பாரவன்
மோகந்தெறிக்கத் தயிலமதில் கடுறாவீதந் தெறிந்தால்
வானென்ற வேதாள முகதாதங் கொண்டு போய்
வனாந்திரத்தில் போட்டுவரு மறுபடியு மையா
ஊனென்ற குழையூதி யுலக்கை யருகில் வருவான்
உலக்கையிது யெழும்பி ஐயாகோ சாடுத்தானே. 198

சாடுமந்த வுலக்கையது சாடினபோ தையா
தலை சித்திரத்தற் கருஞ்சாரை பிடுங்கும்பார்
சேடுஞ் செய்யான் கருந்தேளுஞ் செங்குளவி கொடுப்பஞ்
செத்திறந்து போய்விடுவார் க்ஷெணப்போதில் தானும்
வேடும்பின்னு மொரு மகடிக்கு ழையூதி ஐயா
விச்சணமே யிம்மோடி யெடுத்திடுவோ மென்று
ஊடுமுச்சாடன பேதன திக்குகளைக் கட்டி
யூதிவருவார் மகடி யுலக்கை யெடுத்திடவே. 199

எடுத்திட வேந்தவர் மேல் தயிலமதைத் தொட்டு
யியலான சேஷரிசி யெடுத்தெறிந்தா யானால்
நடுத்திடவே வேதாள மோடியெடும்பேரை
நாற்காதங் கொண்டுபோய்ப் போடுமதுபாரு
கொடுத்திடவே குழையுடைந்து பொடியாய்ப் போகுங்
கூராக மறுபடியுங் குழையூதிக் கொண்டு
தடுத்திடவே யுலக்கையைத்தான் தாண்டிக் கத்தியருக்கில்
தனைவருவா ரவர்மேலே தயிலம் தொட்டெறியே. 200

கத்தியெகிறுதல்

எரியவே சேஷரிசி யவர்மேற்படப் போட்டால்
எகிருமது கத்தியது யென்சொல்வே னையா
அறியவே ஐங்காதந் தெருத்தி வெட்டும்பாரு
ஆகாசமே யெழும்பி யருக்கடையாய் வெட்டும்
தெறியவே வெகுசனங்க ளிவ்வதிசயம் பார்ப்பார்
தேவனோ யிவன்றானோ தேசிகனோ வென்பார்
கூறியவே கும்பிட்டு யருளேதா வென்றிடுவார்
கோடாகோடி வெகுசனங்கள் கும்பிடுவார் பாரே. 201

வாரான யின்னுமொரு மோடிக்குழை யூதி
வருவார்க ளனேகம்பேர் நான்குதிசைசூழ
வேரோடே யிம்மோடி பிடுங்கிடுவோ மென்று
வித்வேஷணத் தாலுச்சாடன மேவிசிதமதாய்ச் செய்து
மாரான மகடியது வூதி வருவாரை
மகத்தான தலந்தொட்டு சேஷரிசி யள்ளி
ஆரான வவர்மேலே யெரிந்தீராகில்
அட்டை கருங்குளவி செய்யான் பிடுங்குமது பாரே. 202

அதுதான் தேகமெல்லா மக்கினிபோற் பத்தும்
ஆடையெல்லா மெலிந்துபோ மஷ்டமாத் தயிலம்
உதுவான மகடியது வுடைந்து பொடியாகு
முதிரங் கக்குவா ரனந்த முலுத்த ரெல்லாமையா
குதுவான வறுகாதங் குட்டிச் சாத்தானையா
கொண்டுபோய் போட்டுவருங் குருமகிமை யிதுதான்
மதுவான மறுபடியு மனேகம் பேர்மைந்தா
மந்திரவுச் சாடனஞ்செய்து மகடியூது வாரே. 203

பழம்- ஆகாய மெழுப்புதல்

ஊதியே வியசின வெட்டுக் கத்தியதை தாண்டி
ஒகோகோ நீயிருக்கு மிடந் தாப்பில் வருவார்
மாறியே மந்திரவுச் சாடனங்கள் செய்து
மகத்தான யெலுமிச்சம் பழமெடுக்கவே தான்
வாறியே சென்று வார்களையா கேளு
மகத்தான அஷ்ட மாரணத் தயிலந் தொட்டு
பாதியே ஓம்-ஐயும் பகிரதியே யென்று
பழந்தொட்டு ஆகாச மெழுப்புநீ யென்றே. 204

எலுமிச்சம்பழ மேகத்தில் மறைதல்

என்றேகே ளெலுமிச்ச மேழுபழந் தானு
மெழும்புமையா வாகாச மெல்லவரு மறிய
அன்றேகேள் மகடி வூது மந்திரக்காரர்
அதன்கூட வெழும்புவா ரனேகர்தானும்
மென்றேகேள் பழமேக மதில் மறையும்
வெகுதூரந் திரிந்தலைந்து விடாய்ப் படுவார்கள்
கன்றேகே ளதன்பின் புயித்தயிலந் தொட்டு
கத்தியை வுச்சாடனஞ் செய்து அனுப்புவீரே. 205

அனுப்பவே கத்தியது ஆகாய மெழும்பி
யருக்கிடையாய் வெட்டு மந்திரக்கார ரவரைத்தான்
சனுப்பவே சரங்கோர்த்த பாவனைபோ லையா
சமாரி போலல்லோ வவர்சிரசு வீழும்

மெனுப்பவே மேதினியிலுள்ள வெகுசனங்கள்
மெச்சிமகிழ் வாருனையே வேடிக்கை யிதுதான்
எனுப்பவே மகடி யூது மந்திரக்காரர்
இவனமக்கு யெமனென்று யேங்கிவிழுவாரே. 206

விழுவாரே யின்னமொரு மகடிக்குழ லூதி
வெகுசனங்கள் கால்விருது வெண்டைய முமிட்டு
தழுவாரே பலபல விருதுகள் பூண்டு
பட்சிமயிலிறகு கொக்கு காடையிறகிட்டு
தழுவாரே தனித்தனிய வெகுமகடி யூதி
தம்பனத்தா லுச்சாடனமே செய்து
எழுவாரே யிம்மோடி வைத்த யெதிரியைத்தான் கட்டி
யிச்சணமே யெடுத்திடுவோ மென்று வருவாறே. 207

வருவாறே யாகாசம் போன வேழுபழமும்
மைந்தனே ஓம்-கிளியும் கிறாம் கிறியுங் கிலியும்
எருவாரே யெக்கன தேவி கொண்டுவாவா
யென்னவே பழம்வந்து யிருக்குமிடஞ் சேரும்
மருவாரே யிம்மந்திர தியானமுரு நூறு
வசனித்துத் தயிலந்தொட்டு புளியிலையை யெடுத்து
அருவாரே மகடி யூதிவந்தவற்மேற் போட்டால்
அட்டை கருந்தேள் செய்யான் பிடுங்கும் பாரே. 208

பாரப்பா செங்குளவி கருங்குளவி கொட்டும்
பரிவான செந்நாகன் கருநாகன் பிடுங்கும்
வாரப்பா வாயதனா லுதிரங் கக்குவார்கள்
மகடியது வுடைந்து தூள் பொடிபொடியாய்ப் போகும்
ஆரப்பா வறிவார்க ளாகாய மோடி
யடவான சித்தர் செய்யு மடவிது தான்பாரு
மூரப்பா முப்பரிந்தோ ரிம்மோடி செய்வார்
முலகத்தோர் செய்தா ரென்றால் மோசமது வாமே. 209

விராகனெடுக்கும் விவரமறிய

மதுவான வனேகம்பேர் மந்திரக்காரர்
மாண்டிடுவா ரருக்கிடையாய் மகிமையிது பாரும்
வதுவான மறுபடியும் பின்னும னேகம் பேர்
மகடூதி மந்திர வுச்சாடனஞ் செய்து
வெதுவான விராகனைத் தானெடுக்க வருவார்கள்
இறீம்-ஓம் ஸ்ரீயும்-அங்கிறியும் சக்கம்மா
ததுவான வாகாசங் கொண்டுபோ
தாயிதறீம் மென்று தொட்டிடவே யெழும்பு மதுபாரே. 210

எழும்பியே யாகாச மண்ட ரண்டம்
புக்கி யினிய சதாமேக மதிலம றையும்பாரு
அழும்பியே யதனோடு வந்திரக்காரர்
அனேகம் பேர்மகடுதி யெழும்புவார்பாரு
அழும்பியே யாள்காட்டி யோடி மறையும்பாரு
அதன்பெருமை யாராலே காணவரிதாகும்
கழும்பியே யதன்பிறகு தயிலமதைத் தொட்டு
கனத்த வேதாள மந்திரங் கருதக்கேளே. 211

வேதாள மந்திரம்

கேளேநீ ஓம்-சீறிம்-வங்-யம்-கிலியும்
கெணிதமென்ற வேதாள மென்பங்கில் வாவா
தாளேநீ வுருநூறு செபித்துத் தயிலத்தைத்
தான்றொட்டுக் கத்தியைநீ பிரயோகஞ் செய்வாய்
ஆளேநீ கத்தியது ஆகாச மெழும்பிய
மனேகம் பேரை வெட்டு மருக்கடையாய்த் தானும்
வாளேநீ மாண்டிடுவார் மந்திரக்காரர்
மகாமோடி யாயோகிக கார்மாணாக்காள் கேளே. 212

கேளப்பா புலத்தியனே வெகுநூல் சொன்னோங்
கெடியான யிந்நூல்போ லொருநூலும் பேசார்
ஆளப்பா யின்னூலு திரட்டைந் நூறாகும்
ஆத்து மத்தின் கருவறிந்தா லறியலா மிக்கருவை
தேளப்பா கொட்டுதல்போல் தெளிவாச் சொன்னோம்
தேறலா மஷ்டமாத் தயில மிதனாலே
கோளப்பா வாராது குரு வறிந்தா லெய்தும்
குருவறியா வித்தை யொன்றுங் குணமில்லை தானே. 213

தானான நாற்றிசை யிலுள்ள மனிதர்
தரணியெங்குஞ் சூழவவர் வேடிக்கை பார்ப்பார்
மானான மகடியூது மந்திரக் காரர்
வணங்குவா ருனைவந்து மனமிரங்கி ஐயா
கானான நாங்கள் கடைத்தேறக் கிருபைசெய்யும்
கருவுள்ள தேவனேநீ காட்சிதரு வீர்காண்
பேனான யெங்களுட பெண்பிள்ளை பிழைக்கப்
போகவரந் தருவாய் பெரியோ ரைத்தானே. 214

தானென்ற விம்மோடி யெடுக்க யெங்களால்
தரியாது முடியாது தாபரிக் காதையா
ஏனென்று மெங்கள்பேரி லிரக்கம் வைப்பாய்நீ
யிரக்கம் வைத்தால் நாங்கள் கடைத்தேறுவோமையா

மானென்ற மகாகோடி வெகுசனங்கள் பார்க்க
மைந்தனே யுன்காலி லவர்விழு வாரையா
வேனென்ற விருதெல்லாங் கழட்டி யவர்வந்து
விழுந்தாக்கால் மனமிரங்கி விள்ளுவாய் நீயே. 215

விள்ளுவாய் செத்தபிண மெல்லா மொக்கச் சேர்த்து
விளங்கிய தோர் சிவமூர்த் தியானமதைக் கேளு
மள்ளுவாய் ந-ம-ய-வ-சி-ஓம் மறி யுமையு மருளுவாய்
ஸ்ரீரியும்-சவ்வென்று வுருநூறு
செள்ளுவாய் செத்தபிண மெழுந்திருஞ் சிவாயா
செபிப்பாய் நமாவென்று ஐங்கோலத் தயிலம்
வெள்ளுவாய் வெகுசெனங்கள் பார்க்கநீ மைந்தா
விளங்குந் தயிலத் தொட்டுத் தெளித்திடுவீர் மைந்தா. 216

தெளிந்திடவே சஞ்சீவி ஐங்கோலம் பட்டால்
செத்த பிண மெல்லா மெழுந்திருக்கும் பாரு
எளித்திடவே யெல்லோரு மெழுந்திருப்பா ரையா
எனைவிடா ருன்காலில் சரணம் பணிவார்கள்
வளித்திடவே வாழ்த்தி விருதெல்லா மவர்க்கீவாய்
மகராச பூபதியே மைந்தாநீ கேளு
குளிந்ததொரு குவலயம் வாழ் மனிதரெல்லாங்
குனிந்து சரணஞ்செய்து குறைவரா வாழ்த்தே. 217

வாழ்த்தியே மகாகோடி மானிடர்கள் பார்க்க
வாலை ரசகுளிகை யதைவாயிலிட்டு
மாழ்த்தியே மம்மென்று வாசியைத் தம்பித்து
மவுன கேசரம் பாய்ந்து பொதிகைக்கு வாநீ
போத்தியே யுந்தனுக் கனேகஞ்சித்தி
தருவேன் புகழான மகராச பூபதியே கேளு
கீர்த்திபெறு வாயெட்டுத் திக்குபந்தனஞ் செய்வாய்
கெடியான மகராச யோகவானாமே. 218

யோகவா னீயான வுறுதியதனாலே
ஓகோகோ ஆகாச கனமோடி சொன்னோம்
அயோகவா னானாக்கா லகத்தியனான் சொல்வேன்
ஆருஞ் சொல்லார்க ளிம்மோடி யதன்பெருமை
நயோகவவா னானதினா னண்பாகச் சொன்னேன்
நவராச பூபதியே நன்றாய் நீகேளும்
மயோகவா னிகேளு சுன்னஞ் செந்தூர
மகத்தான குளிகை ரசபூபதி நீகேளே. 219

ரசசுன்னம்

நீயான ரசசுன்னஞ் செய்யவகை கேளு
நீயான ரசமதனிற் சேரொன்று வாங்கி
ஆயான னவங்கோதத் தயிலமதிற் றாக்கி
அரைநாழி வீதமது அதுசென்ற தானால்
வாயான யீயமது வங்கக் கசிவிறங்கு
மதுவேற விதுவேறப் பிறந்தங்கே போகும்
தேயான தேன்கனி வழுக்கையது போலாந்
தெளிவான வழுக்கைதனைச் செயலா யெடுத்திடுவீரே. 220

செயலாக வதைக்கொண்டு காலாக்கினி யின்றயிலம்
செயமாகத் தாக்கிடுவாய் வழுக்கைதனை ஐயா
அயலான தயிலமதி லரைநாழி யிருந்தால்
அருளான சங்கட்டி யடவது வாகும்
மயலான அக்கட்டை யெடுத்து அதன்மேல்
வழலைசுன்னங் கொண்டு வராகனெடை யாகில்
வயலான தயிலமதால் குழைத்ததன் மேற்பூசி
வளமாக விந்ததனாற் சீலையேழு செய்யே. 221

செய்துரவி தனில்வைத்து ஐம்பதெரு முட்டையில்
செயலான புடம்போட்டுப் புடமாறி னாக்கால்
எய்துவெடுத் ததனையே சீலைகழற்றெறிந்து
யியலாகப் பார்த்திடு வீரானால்
நெய்து நிராமய சந்திர விலாசமது காணும்
நிராமயம் போலொளிவு நிகருமொவ்வாது
வயதிதற் கதிகமது என்னாற் சொல்லவெளிதோ
வாலையடா பதினாறு மாற்றிதி லாமே. 222

ஆமென்ற சுண்ணமதை யெடுத்துக் கொண்டு
அருளான வாலையடா பூசைசெய்து
தாமென்ற தாம்பரத்தை யுருக்கி மைந்தா
தருவான சுண்ணமதி லுளுந்தி னிடையிட்டால்
பாமென்ற மாற்றதுதான் பத்துகாணும்
பருவான அயச்செம்பை யுருக்கிமைந்தா
ஓமென்ற சுன்னமதை யுளுந்தினிடை யிட்டால்
ஓகோகோ பனிரண்டு மாற்றதாமே. 223

மாத்தான ரசசுன்னம் நன்றாய்ச் சொன்னோ
மகத்தான ரசமெழுகு மாட்டக் கேளும்
ஆத்தான ரசமொன்று சேருவாங்கி
யருளான கிண்ணமதில் ரசத்தைவிட்டு

காத்தான காலாக்கினி யின்றயிலஞ் சேரிட்டுக்
கருணை பெற ரவிமுகத்தி லரைநாழி வைத்தால்
வேத்தான சத்தெல்லாங் கக்கிப்போகும்
விளங்கியதோ ரசமதுவும் மேலேநிற்கும். 224

நிற்குமப்பா ரசமதுவும் விந்துபோல
நிலையான விந்தையெல்லா மெடுத்துநீயும்
கக்குகின்ற பீங்கானில் விந்தையிட்டுக்
கருணைபெறு மைங்கோலத் தயிலம் பலம்விட்டால்
எக்குகின்ற விளநீரின் வழுக்கைபோல
மிவ்விளநீர் வழுக்கையைத்தா னெடுத்துக் கொண்டு
அக்குகின்ற வஷ்டமாத் தயிலந்தன்னி
லாகார சுருக்கிடவே மெழுகாய்ப் போமே. 225

போமென்ற தாம்பரந்தான் சேரொன்றுக்குப்
புகழாக ரசமெழுகு வுளுந்தினிடை யிட்டால்
பாமென்ற பதினாலு மாற்றுகாணும்
பரிவான வயச்செம்பு சேரொன்றுக்கு
ஓமென்ற வுளுந்தினிடை யிட்டாயானால்
ஓகோகோ பதினாறு மாற்றுகாணும்
நாமென்றும் வெகுசூட்சா சூட்சங்கண்டு
நாட்டினோந் திரட்டைந் நூற் நடத்தை காணே. 226

காணப்பா ரசமெழுகை நன்றாய்ச் சொன்னோங்
கலங்காதே யென்மகனே கருத்துள்ளானே
ஒணுமென்று பாடுபட்டா லெல்லா மெய்து
முலுத்தரவா வெறும்பேச்சா லோகோமாண்டார்
காமப்பால் மதமழிவோன் கழுதைமாண்பர்
கண்டாலு மதிமயங்கி காணாதொன்றும்
ஆணப்பா பெண்ணதனா லலைந்து கெட்டு
அழிந்திடுவோர் கென்னவெய்து மாகா தொன்றே. 227

ஒன்றான பூரணத்தைக் காணவேணும்
ஒருபுத்தி மனமிருக்க வொட்டவேணும்
நன்றான கற்பமதை யுண்ணவேணும்
நாளதிலே வாசியைத்தா னடக்கவேணும்
குன்றான மனஞ்சகியா திருக்கவேணுங்
குருவான விந்ததனைக் கழட்டவேணும்
அன்றான சிவயோகஞ் செய்யவேணும்
அப்பவல்லோ பூரணத்தி னருள்பாயே. 228

அருளான பூரணத்தி னாட்டங் கண்டால
அஷ்டமா சித்தும் விளையாடலாம் பார்
அருளான பூரணத்தை யொட்டிப்பாரு
அங்கெனவே திருநடன மாட்டங்காணும்
அருளான பூரணத்தை யொட்டிப்பாரு
அங்கெனவே திருநடன மாட்டங்காணும்
அருளான பூரணத்தா லெல்லாமாச்சு
அப்பும் உப்புஞ் சேர்ந்ததுவு மருளுண்டாச்சே. 229

உண்டான விடங்கண்டு தொட்டுப்பார்த்து
உரைமோரைக் கொண்டுவிட்டு வுருட்டினாக்கால்
தொண்டான கைவசங்காண் சித்தியாகுந்
தெளியலா முப்பூவின் சேதியாலே
கண்டாது மொருவரவர் சொல்லுவாரோ
கைகண்ட வித்தையைத் தான் சொல்லாரையா
விண்டபொருள் நூல்தனிலே யறியவேணும்
வேதாந்தி யானாக்கால் விளங்குந் தானே. 230

காந்தக் கிண்ணம்

விளங்கவே காந்தக் கிண்ணஞ் சொல்லக்கேளு
வீதமொரு சேரதிலே கொண்டுநீயும்
அளங்கவே விந்தும் நாலுபலங் கொண்டு
அந்திடைக்குப் பனிநீரு அடவாய்த் தாக்கி
பொங்கவே பீங்கானி லிரண்டு மிட்டுப்
பேரான காந்தமதை யதினிற்றாக்கி
நளங்கவே ரவிமுகத்தி லொருநாழி வைத்தால்
நலமான காந்தமதின் சத்துபோமே. 231

போமென்ற சத்ததுவு மஞ்சனிறம். போலாம்
புகழான காந்தமது சிவப்பு நிறங்காணும்
ஆமென்ற காந்தமதை யெடுத்துக் கொண்டு
அடவான காலாங்கினியின் றயிலத்திற் றாக்கி
நாமென்று ரவிதனிலே யரைநாழி வைத்தால்
நன்றான பச்சைநிற மெழுகுபோலாகும்
வாமென்றுங் குமுறியது மெழுகுபோலானால்
மைந்தனே யதையெடுத்துச் சட்டிக்குள் வையே. 232

வைத்துநீ யஷ்டமாத் தயிலந்தானும்
வளமாக வதிலேயொரு பலமிட்டு
முத்துநீ முப்பூவின் பணவிடைதா னிட்டு
முன்னவனை தியானித்து வடுப்பின் மேலேற்றி

ஐத்துநீ சுடுகாட்டுக் கொம்பினாலே
யனலெரிப்பா யிருநாழி யெரித்தீரானால்
உத்துநீ நாரதுபோ லுருகும்பாரு
வுருகுபதம் பார்த்துநீ யிறக்கிடாயே. 233

மெழுகுஅச்சு

இறக்கியே மெழுகதனா லச்சுசெய்து
யென்மகனே யச்சதனில் சாய்த்தா யானால்
கசக்கியே பாயுமது கிண்ணமது போலத் தான்
கண்மணியே யரைநாழி சென் றெடுத்தாயானால்
வறக்கியே காந்த கிண்ணமென்ன சொல்வேன்
வளமான யிம்முறைதா னாருஞ்சொல்லார்
அறக்கியே நான்வெளியாய்ச் சொல்லிப் போட்டேன்
அருளான திரட்டைந்நூ றடவதாமே. 234

இரசமணி

அடவான ரசமணிதான் சொல்லக்கேளு
ஆருந்தான் சொல்லார் களருமை மெத்த
திடமான ரசஞ்சேரு வொன்று வாங்கித்
தெளிவான கல்வமதில் தெம்பாயிட்டு
மடமான திருகுகள்ளிப் பாலைவிட்டு
மாட்டுவா யொருசாம மாட்டும்போது
செடமானம் போகாது திரளும்பாரு
திரளினதோர் பதம்பார்த்து வழித்திடீரே. 235

வழித்திட்டுப் பனிநீரில் கரைத்தையானால்
மஞ்சநிறம் போலாகுங் களிம்பெல்லாம் போம்
எழித்திட்டு யிளநீரின் வழுக்கைபோலா
மிவ்வழுக்கை தானெடுத்து யியம்பக்கேளு
வெளித்திட்டு விந்துஅஞ்சு பலந்தான் வாங்கி
விரவியே வழுக்கையிலே மத்தியானால்
சளித்திட்டு சங்குநிறம் போலேயாகுஞ்
சார்வான முப்புசுன்னம் பணவிடைதான் போடே. 236

போட்டுஅரை நாழியது சென்றபின்பு
பூமுலையாள் கன்னிமுப்பால் விட்டு
நாட்டுங்கன்னி யிளநாத மரைசேரிட்டு
நண்பாகக் கல்வமதில் நன்றாய்த்தாக்கி
ஆட்டுநீ யரைசாமம் வீதமாட்ட
அரகரா பசும்வெண்ணை போலதுவாகும்
தேட்டுற வில்லாமல் வழித்தெடுத்துச்
செயலான கானகாலாக்கினியின் றயிலத்திற்றாக்கே. 237

தாக்கிவிரு நாழி சென்றபிறகெடுத்தால்
தற்பாம்போ லொளிவாகும் விலாசமெத்த
சேக்கியே சிட்டமதில் பனிநீர்விட்டுச்
செயலாக வதையரைத்துக் குகைபோலச்செய்து
ஆக்கியே குகையுலர்த்தி ரசவெள்ளை தானும்
யளவாக நீயுமே செய்து வைப்பாய்
தூக்கியே ரவியிலொரு சாமம்வைத்துத்
துதிபெறவே மூன்றெருவிற் புடத்தைப்போடே. 238

போடுநீ யிந்தவிதம் புடம்பத் திட்டால்
புனிதமாய்க் கல்போல விறுகிக் கட்டும்
ஆடுநீ நாரதுபோ லாகுமாகும்
அதையுடைத்து ரசமதனை யெடுத்துக்கொண்டு
சாடவே சவுரிக்கா யதற்கு ளிட்டுச்
சம்பிரமதாய் முன்புடம் போல பத்துபுடம் போட்டு
கூடுநீ குகையுடைத்துப் பார்த்தாயானால்
கூறுமென் னாவதனாற் சொல்லப் போமோ. 239

கூரான மலைகல்லு போலேயாகுங்
குறிப்பான கல்லதனை யுடைத்தாயானால்
ஊரான வுடைக்கல் லுடைந்துபோகும்
ஓகோகோ யிக்கல் லுடையாதையா
ஏரான இக்கல்லை யெடுத்துக்கொண்டு
யெழுகு கரண்டிமதற் குள்ளே யிட்டுதாக்கி
ஊரான துருத்திகொண்டு கரியைக்கொட்டி
ஓகோகோ கரிக்குள்ளே வைத்துருக்கிச் சாடே. 240

சாடினா லுருகியது மணிபோலாகுஞ்
சார்வாக வுருகினதைச் சிலதாக்கி
கூடவே மணி பதினாறாகச் செய்து
துலங்கவொரு மணிநெல்லுப் பருமன்செய்து
பாடியே பதினாறு மணியைத் தானும்
பனிக்குடந்தான் வாங்குமவள் நரம்பில் கோர்த்து
பேடியாய்த் திரியாதே பெருமணிக்குப்
பேயான யிடரிநரம் பெடுத்துக் கோரே. 241

சகலவசியம்

கோரது பதினாறு மணியால் மைந்தா
கூராகச் செபஞ்செய்ய வெட்டுமாகும்
ஆரது வறுபத்து நாலு சித்தாகும்
அருளான வஷ்டமா சித்துமாகும்

பாரதுநீ செபஞ்செய்ய வஷ்ட வசியமாகும்
பஞ்சபூத வசியமது வாடும்
வாரது வாலைவசியஞ் சிதம்பரமும் வசியம்
வசனித்த தொழிலெல்லாம் வசியந்தா எனன்றே. 242

என்றான குளிகையை ஐங்கோலத் திட்டு
யிருநாழி சாரணையி லியல்பாகச் செய்தால்
வன்றான குளிகைச் சாரணைவாயிலிட்டு,
வங்கென்று யெழும்பியே வாசியதைப் பூட்டி
கன்றான நிலைகண்டு கெவனமது பாய்ந்தால்
கைலாச கிரியேறிக் கடந்தேறலாகும்
சன்றான சராசரம் அண்டபுவனந் தாண்டி
சற்குரு நிலைகண்டு சாரலாம் பாரே. 243

சாரலா மாறுவரை காணலாகுஞ்
சமர்த்தான நிராமயத்தில் சாரலாகும்
பூரலா மவுனமதி லிமைப் பாலுண்டு
புக்கலாம் பூரணத்தின் புனிதமாக
பாரலாம் ஞானபர தேசிகனைக் கண்டு
பாலமுர்த முண்டு பசி தீரலாம் பார்
தேரலாம் வரையாதில் தெளியலாம் பார்
தெளிந்தாக்கா லமுர்தமது சிந்துந் தானே. 244

சிந்துகின்ற வமுர்தமது சிந்தினாக்கால்
சித்தனீ மனிதனல்ல தேவனாகும்
முத்தானா யாவதற்கு முப்பூ வேண்டு
முப்பாக சித்தனுண்டோ முலகிலையா
அத்தனரு ளமுதையுண்டா லெல்லாமெய்தும்
அல்லாட்டா லொன்றுமில்லை யறிவிலாற்கு
குத்தம்வரும் சித்தியில்லை குருவில்லார்க்குக்
குறித்ததெல்லாந் தவரிப்போம் கூராய் நில்லே. 245

துருசுசுன்னம்

கூரான துருசுசுன்னஞ் சொல்லக்கேளுங்
கூறிய துருசதிலே பலம்நால்வாங்கி
ஆரான வமுரியிலே கிளியாய்க்கட்டி
அவ்வமுரி தனில்வழித்துக் கிளியேகொண்டு
வேறான கிளியவிழ்த்துத் துரிசே கொண்டு
விகிதமுள்ள கல்வமதி லிட்டுத்தாக்கி
நாரான நாதவிந்து பலம்நால்விட்டு
நளினமதா யொருசாம மாட்டிடீரே. 246

ஆட்டிடீர் வெடியுப்புச் செயநீர் தன்னில்
அடவாக நாலுபலம் விட்டொரு சாமம்
மாட்டிடீர் வெண்கருதா னாலுபலம் விட்டு
மைந்தனே யொருசாம மாட்டிநீர்தான்
சாட்டிடீர் வெண்கரந்தைச் சாறுபலம் நாலு
சம்பிறமதாய் யொருசாம மாட்டுவாய்நீ
நாட்டிடீர் நாகமல்லிச் சாறுபலம் நாலு
நளினமதா யொருசாம மாட்டிடாயே. 247

ஆட்டுவா யாட்டையிலே மெழுகுப்போலாகும்
அம்மெழுகை வழித்து பில்லை செய்துநீயும்
நாட்டுவாய் ரவிதனிலே யொருசாமம் வைத்து
நன்றாக வுலர்ந்தபிற கெடுத்துநீயும்
லாட்டுவாய் வழலைசுன்ன முளுந்திடைதான் கொண்டு
வஞ்சிமுலைப் பால்தனிலே குழைத்துநீயும்
தாட்டிகமாய் வில்லையின்மேல் நன்றாய்ப்பூசித்
தருவான வகலதனிற் றனதாய்வையே. 248

வைத்துமெல்ல மூடியே சந்துவாய் செய்து
வளமாக மண்சீலை யேழுஞ்செய்து
உற்றுவோர் நாள்முழுதும் ரவியில் வைத்தால்
உலக்கடத்தில் காலாக்கினி போலூதுவோர் சாமம்
நீற்றுப்போந் துருசதுவுஞ் சுன்னமாகும்
நீமகனே யகலெடுத்து ஆறவைத்து
மைத்துமண் சீலையது வலுவாய் வாங்கி
மகத்தான வகலெடுத்துப் பாரே. 249

பாரப்பா துருசுசுன்னம் வெளுறிநீரும்
பருவமதில் காய்ந்த சந்திரன் விலாசமேவும்
வாரப்பா சுன்னமதைச் சீசாவிட்டு
வாலையின் பூசைசெய்து மைந்தாநீயும்
காரப்பா தாம்பரஞ்சே ருருக்கு நீயுங்
கருவான துருசுசுன்ன முளுந்திடைதா னிட்டால்
மாரப்பா பழுப்பேறி மணிபோடு
மாற்றதுதான் பத்தரையுந் தப்பா தென்றே. 250

இரசச்சுன்னம்

என்றான ரசச்சுன்ன மியம்பக்கேளு
மியலான ரசஞ்சேரு வாங்கிமைந்தா
நன்றான ரசமதனைக் கல்வமிட்டு
நாதவிந்து நாலுபலம் நண்பாய்த்தூக்கி

ஒன்றான வொருசாமம் நன்றாயாட்டி
ஓகோகோ பொட்டிலுப்பு செயநீர்ப் பலம்நாலு
வென்றான விட்டதிலே யொருசாம மாட்டு
விசிதமுள்ள வூமத்தஞ் சாறுபலம் நாலு. 251

நாலான சாறதனா லொருசாம மட்டி
நளினமதாய் வழித்தன்னைச் சொல்லக்கேளு
ஆலான சுத்தசெலம் படிதான் கொண்டு
அதிலேயிந்த ரசங்கலந் திடையா
வாலான ரவிதனிலே யொருசாமம் வைத்தால்
வண்மைபெறும் வங்கத்தின் களிம்பெல்லாம் போம்
சாலான பசும்வெண்ணை போல் மேலேநிற்கும்
சமர்த்தான ரசவெண்ணை யெடுத்திடாயே. 252

எடுத்துமே ரசவெண்ணை பீங்கானிலிட்டு
என்மகனே குருசெயநீ ரிரண்டு பலம்விட்டு
அடுத்துமே மத்தித்து ரவியிருநாழி
அடவாக வைத்தீரா மாகிலையா
மடுத்து மெழுகாகு மிதுமெழுகே கொண்டு
மகத்தான வில்லையதாய்ச் செய்து நீயும்
நடுத்து மதிரவிதனிலே யிருநாள் வைத்தால்
நல்லரவி கஏந்திபட்டுக் கற்போலாமே. 253

ஆமென்ற வில்லையதை யெடுத்துக் கொண்டு
அருளான வழலைசுன்ன முளுந்திடைதானையா
மூமென்ற வுமிநீராற் குழைத்து மைந்தா
மூர்க்க மென்ற வில்லையின் மேல் நன்றாய்ப்பூசு
மாமென்ற வகல்தனிலே வைத்துநீயும்
அதன்மேலோ ரகல்தான் வளமாய்மூடி
சாமென்ற சந்துவாய் நன்றாய்ச்செய்து
சமர்த்தாக மண்சீலை யேழுஞ்செய்யே. 254

செய்து ரவி முகந்தனிலே யிருசாமம் வைத்துச்
செயலாக வெடுத்ததனை யுலைக்கடத்தி லோர்சாதம்
சைது காலாக்கினி போல சாடிக்கால்
சமர்த்தான ரசம்வெள்ளை சுன்னநீராட்டி
நைது வகலெடுத் ததனைச்சீலை வாங்கி
நலமான ரசச்சுன்னஞ் சீசாவிலிட்டு
பொய்துநீ புவனையுட பூசைசெய்து
புகழான சுன்னமதைப் பதனம் பண்ணே. 255

பண்ணப்பா வெங்கலஞ் சேருருக்கி நீயும்
பரிவான ரசசுன்ன முளுந்திடை த்ரானிட்டால்
வெண்ணப்பா வெள்ளி சொக்க னிடையோ மெத்த
விசிதமுள்ள வெள்ளிவயந் தானுருக்கி நீயும்
குண்ணப்பா கோடிசுன்ன முளுந்திடை தான் கொண்டு
குருவான வழலைசுன்ன முளுந்திடைதான் கொண்டு
உண்ணப்பா விரண்டையுந் தானொக்கச் சேர்த்து
வுருகினதோர் வெள்ளியிலே போட்டுப்பாரே. 256

பாரப்பா பழுப்பேறி மணிபோலாகும்
வண்மைபெறு மாற்றதுதான் பத்தரை தப்பாது
ஆரப்பா வறிவார்கள் ரசச்சுன்னந்தான்
அழிவுள்ளோர் கருவிடை மறுவாரையா
நேரப்பா கருக்கிடை சூத்திர மைந்நூறு
நெறியுள்ள திரட்டிதுதா னேர்மைநேர்மை
தேரப்பா ரிந்நூலி லதிதசித்தி
தேறினால் கருவிடையந் தெளிவதாமே. 257

தாளகசுன்னம்

தெளிவான தாளகத்தின் சுன்னங்கேளு
திருவான தாளகந்தான் பலம்நால் வாங்கி
வளிவான வமுரிதனி லூறப்போட்டு
வளமாக வொருசாம மூறினாக்கால்
தனிவான தாளகத்தைக் கல்வத்திட்டுத்
தருவாக எருக்கம்பால் சேர்தான்கொண்டு
வெளிவாக விட்டதிலே யிருசாமங்கட்டி
விளங்குங் கல்லுப்புச் செயநீர் பலம்நால் சேரே. 258

சேரது யிருசாமஞ் சாடிநீ மைந்தா
செயலான வைங்கோலத் தயிலம் பலம்நாலு
வோதுநீ விட்டதிலே யிருசாமஞ்சாடு
விசிதமுள்ள நாதவிந்து ஆறு பலங்கொண்டு
ஆரதுநீ யாட்டுயிரு சாமமது வாகில்
அதைவவித்துச் சுத்தசலஞ் சேர்தான் கொண்டு
பேரதுபீங் கான்றனிலே சுத்தசலங் கொண்டிட்டு
பெலமாக வழித்ததொரு தாளகத்தைக் கரையே. 259

கரைத்து ரவிமுகந்தனிலே யிருநாழிவைத்தால்
கற்போலக்கட்டி மெழுகாகு மதுபாரு
வரைத்தந்த மெழுகதனை வழித்துவில்லை செய்து
மகத்தான ரவிமுகத்தி லிருசாமம் வைத்தெடுத்து

மறைத்தகுரு பேரண்டச் சுன்னமுளுந் திடைதான்
வழலைசுன்ன முளுந்திடைதா னிரண்டுமொக்கச் சேர்த்து
சறைத்தகுட முலைப்பாலை விட்டுச்
சார்வாய்க் குழைத்து வில்லையதன்மேற் பூசே. 260

பூசியே யகலில் வைத்து மேலகலுமூடிப்
புகழாகச் சந்துவாய் சீலைமண்செய்து
நாசியே ரவிமுகத்தி லிருசாமம் வைத்து
நன்றாக வெடுத்ததனைச் சொல்லக் கேளையா
ஊசியே யுலைக்கடத்தில் வைத்தொரு சாமம்
ஊதினால் தாளகத்தின் சுன்னம் நீராகும்
ஆசியே யதையெடுத்துச் சீலைதனைவாங்கி
யச்சுன்னஞ் சீசாவி லடக்கமது செய்யே. 261

செய்யப்பா திரிபுரையின் பூசையது செய்து
செயலான வெள்ளியிலே சேர்கொண்டுநீயும்
உய்யப்பா திசையிலே வைத்துருக்கச் செய்து
மூர்க்கமுட னுருக்கு முகந்தனிலையா கேளு
தைய்யப்பா தாளகத்தின் சுன்ன முளுந்திடைதான்
தருவான பேரண்டச் சுன்ன முளுந்திடைதான்
ஒய்யப்பா விரண்டுமே யொன்றா யதைச்சேர்த்து
வுருக்குமுகந் தனிலிட்டால் ஓகோபழுப்பாமே. 262

ஆமேதான் பத்தரையுந் தப்பாதிது பாரீர்
அறிவாளி யானாக்கா லாடலர் மனேகம்
நாமேதான் பூரணத்தைக் கண்டுகளி கூர்ந்து
நண்பாகச் சொன்னமுறை நல்லசெயமாகும்
தேமென்ற கருவாளி குருவறிவானையா
தீனியிலே செடமழிவோர் செகமனிதர் காணார்
போமென்ற சித்தருக்குப் புலத்தியனே ஐயா
புகழும் பூபதிமகா புலவனீ தானே. 263

இரசக்கட்டு

தானான ரசக்கட்டு சொல்லக்கேளு
தருவாக முன்சொன்ன ரசம்வெண்ணை பலமஞ்சு
வேனான கல்நாரு துத்திநாமங் கொண்டு
விசிதமுள்ள விரண்டு மொவ்வொன்றுக் கிருபலந்தான்
ஏனாக வெடுத்ததனைக் கல்வமதி லிட்டு
யென்மகனே யண்டவிந்து யிருபலந் தானிட்டு
கோனான தில்லைப்பா லிரண்டு பலம்விட்டுக்
கூராக வகைமெழுகு போற் சாடுவாயே. 264

சாடியதை வழித்துக்குகை செய்து கொண்டு
சார்வாக ரவியுலரச் சாமம்வைத்து
ஆடிநீ குகையதற்குள் ரசவெண்ணையிட்டு
அடவான முப்புச்சுன்னங் கடுகளவிட்டு
நாடிநஞ்சு சுன்னமதில் கடுகளவிட்டு
நல்லபொட்டு லுப்புச் செயநீர் கழஞ்சியிட்டு
காடியே வெண்கருவால் சீலையேழு செய்து
கருணைபெற மண்சீலை யேழுஞ்செய்யே. 265

செய்துரவி யுலரவிரு நாழிவைத்துச்
செயம்பெறவே யெடுத்ததனை யிருபதெரு புடத்தில்
பொய்திகைப் புடம்போட்டு யெடுத்துநீ பார்த்தால்
புனிதமென்ற ரசக்கட்டு புகழோ மெத்த
ஐதுகுகை யுடைத்து ரசக்கட்டை யிதைக்கொண்டு
அப்பனே யுருக்கியே பார்த்தீராகில்
நைதுரசக் கட்டதுவு முருகாதப்பா
நவகோடி சித்தருக்குக் குருக்கட்டாமே. 266

கட்டான கட்டதனை வைரவத்தின் பூசை
கருணைபெறச் செய்திதைப் பதனம்மிகப் பண்ணு
மட்டான கட்டிதால் சகலரோக மாண்டுவிடுங்
கன்ம நோயதை நீபாரு
வட்டான யிக்கட்டை யொளித்தார் முன்னோர்
மயக்கமில்லா நான்வெளியா யின்நூல் சொன்னோம்
அட்டான ரசக்கட்டால் வாய்வுரோகம்
அலறிவிடு மெண்பத்து நூலுமாமே. 267

அலறிவிடுஞ் சீரகக் கியாழஞ் செய்து
அதிலுரைத்துக் கட்டை நோயாளிக்கு
குலறிவிட நாலுநாள் கொடுத்தீராகில்
குஷ்டமொடு குன்மசூலை காசரோகம்
மலறிவிடு மண்டவாத மானைக்கால் முடக்கல்
வலியொடு பாண்டுவெல்லா மலறியோடு
நலருமொரு நாளுமில்லாப் பத்தியமாய்க் கொண்டால்
நமனில்லை நூறாண்டு நோயணுகாதே. 268

ஆகாது பசும்பாலு துவரையாகும்
அரைக்கீரை சிறுகீரை யாகுமாகும்
வாகாது புகையிலை பெண்போக மாகா
மகத்தான கொள்ளு பூசனிக்கா யாகா
நாகாது கடல்நண்டு சுறாவுமாகும்
நல்ல வோலைமச்சமது நன்றேயாகும்
பாகாது ரவிசூரியன் சூடாகாது
பண்டிதமிந்தப் படிபறந்து நோய்போமே. 269

போமென்ற பாண்டுக்குச் சீரகக் கியாழம்
பொடுசூலை குன்மத்துக்கு வோமக்கியாழம்
நாமென்ற வலிக்கெல்லாம் பஞ்சமூலக் கியாழம்
நல்லண்ட வாதத்துக்குத் திசமூலக் கியாழம்
போமென்ற பித்த வாய்வுக்கு மிளகுக்கியாழம்
பேரான சிலேட்டும வாய்வுக்குத் திப்பிலிக் கியாழம்
வாமென்ற சுரத்துக்கெல்லா வசம்பின் கியாழம்
வசனித்த சன்னிக்கு வெந்தையமா மென்றே 270

துருசுகட்டு

என்றான துருசுகட்டு சொல்லக்கேளு
யேத்தமாந் துருசுதனில் பலம்நால் வாங்கி
அன்றான அறக்கும்விந்து வீதமரை கொண்டு
அடவான கல்வமதி லிட்டரைத் ததனை
துன்றான துருசதற்கு கழஞ்சிவீதம்
துதிபெறவே குகையிலிட்டு யிருநாழியூத
அண்டர்தொழுந் துருசதுவு முருகிப் போகும்
அரகரா பொடி போல துருசுக் களங்கம் போமே. 271

போமென்ற துருசுனிட களங்கம் போனால்
பொற்கமல மென்னுஞ் சிவப்பதிதமாகும்
ஆமென்ற துருசைப் பார்த்தீ ராகி
லண்டமெனும் விந்தது போலையா காணும்
காமென்ற குகையிலுள்ள விந்தேகொண்டு
கல்வமதி லிட்டண்ட செயநீர் பலம்விட்டு
தாமென்ற கஞ்சு சுன்னங் கடுகளவிட்ட
நல்லமுப்பு சுன்னமதில் கடுகுபாச்சே. 272

பாச்சியரை சாமமது சாடினாக்கால்
பசுமையென்ற வெண்ணையைப் போலாகு மாகும்
வாச்சியதாய்த் துருசதனை வழித்துக்கொண்டு
வளமான கல்நாரு குகையிலிட்டு
மாச்சியே வெண்கருவால் சீலையேழுஞ்செய்து
மண்சீலை யேழுமது வசமாச் செய்து
நாச்சியாம் ரவியிலிரு நாழிவைத்து
நலமான குகையதனை யெடுத்துக் கொள்ளே. 273

எடுத்துக் கோழிபுடம் போட்டுக்
குகையார வைத்துயென்மகனே குகையுடைத்துப் பார்த்தீராகில்
தடுத்ததொரு துருசுகட்டு வெளுமைநிறங் காணுஞ்
சந்திர சூரியர்போல் வொளிவோ காணும்

கடுத்த நமன்கட்டினா லொன்றே திருமுண்டோ
கல்லான கட்டுருக்கிப் பார்த்தாயாகில்
வெடுத்த கட்டுருகாது துருசுகட்டை
வேதாந்த சிரோன்மணிதன் பூசைசெய்யே. 274

பூசையது செகத்தி லுள்ள மனிதருக்குப்
பொல்லாத நோய்வந்தால் புகலக்கேளு
பூசைசெய்து பித்தத்தா லெடுத்தநோய்க்கும்
பகறக்கேள் சன்னி பதின்மூன்றுக் குந்தான்
ஆசையுடன் லவுங்கப்பூ கியாழஞ் செய்து
அதிலுரைத்து மூன்றுரைப்பு ஐந்துநாளும்
காசையென்ற செடத்திலுள்ள சன்னி பதின்மூன்றுங்
காதவழி வீறிட்டு வோடுந்தானே. 275

ஓடுமென்ற கருஞ்சீரகக் கியாழஞ் செய்து
ஓகோகோ வதில்நாலு வுரைப் புரைத்து
நாடுமெழு நாள்கொடுத்தால் பித்தசோகை
நல்லபித்தக் காமாலையுட் சூடெல்லாம்
ஓடுமேல் சொரிசிரங்கு தேகச் சூடெல்லா
முடலைவிட் டிருகாத மோடிப் போகும்
வாடுமிந்த துருசுகட்டு செய்வோரையா
மகத்தான சிவயோகி யவர் செய்வாரே. 276

அவரான பனவேருஞ் சுக்குங் கூட்டி
யன்பாகக் கியாழமிட்டு கட்டேகொண்டு
அவரான யஞ்சுரைப்பு நல்நாளாகில்
அப்பனே நோயாளிக் கறிந்து செய்தால்
வவரான சுரமறுபத்து நான்கு மாண்டுதடா
வுடலைவிட்டு வோடிப் போகும்
குவரான குவலயத் தோராரிந்து செய்தால்
கூரினோம் பித்தவாய்வு யெண்பத்து நான்கும் போமே. 277

பித்தத்தால் குலைநோய்கள் வயிறெறிவு
பிலத்ததொரு மும்மூலப் பொறிகலங்கல்
சுத்தசுக போகமதா லளவில்வத்த
சொரி சிறங்கு வரையாப்பு மேற்சூடாகில்
கைத்தசுக போகமதால் வருநோயான
கர்மமென்ற மேகச்சூடு கழண்டு போகும்
பத்தா சொல்லும் பலதிரட்டு ஐந்நூறுபீடம்
பாடினோ மிதுபோலப் பாயா தென்றே. 278

பாயவொரு கருவதனைச் சொல்லக்கேளு
பாடினார் நூல்தோறும் பண்போரே தானும்
வாயவின்னூல் போலொருநூல் கிட்டாதையா
வசனித்தோம் பலநூலின் கருவையெல்லாம்
சாயவிருட்ச நிழலுருவைக் காண்பதற்குச்
சச்சிதானந்த வெளியோகஞ் சொன்னோம்
உபாயமதாய் கருவைக் கண்டாயானால்
ஊழ்வினைபோ முன்செடல முறுதியாச்சே. 279

உறுதியேனுஞ் சரிதையிலே புழண்டுதேறி
யுபாயமதாய்க் கிரியையிலே பாசம்வைத்து
வறுதியெனுஞ் சிவயோகி தவசியாகில்
வசனித்த தீட்சைசெப நேமமாகி
சுருதியெனுங் கருவிகர னாதிகண்டு
சுயலிங்க பூசையெய்து மந்தரமதாகி
அறுதியெனு மாத்துமாவி னிருபங்காண்டு
அஷ்டமா தொழில்வசிய மருளுவாயே. 280

அறுளுவா யதன்பிறகு சிவயோகத்தி
லதிக வல்லவராகிய அயப்பாகஞ் செய்து
வருளுவாய் பிராணாய யோகஞ்செய்து
வளமான ராசயோகம் வளமாய்ச்செய்து
மருளுவாய் திசையோகம் நல்யோகஞ் செய்து
மகத்தான யோகமெல்ல முடித்துக் கொண்டு
வருளுவாய் பலகலைக லளவிலாத
பவனாதி யோகமெல்லாஞ் செய்துகொள்ளே. 281

முடியான யோகமதில் கற்பங்கண்டு
முவன்றநிலை சுழிமுனை யிலிமைப்பாலுண்டு
வடிவான பஞ்சசபை மூலங்கண்டு
வளமான பூரணமே மனதாற்கண்டு
அடியான அடிமுடியை யறிந்தோனாகி
லதிதமெனும் பரஞான மறிவார்பாரும்
கடியான விஷக்கடியைக் கடந்துபால்
கருவிகர னாதிதனிற் கலக்கலாமே. 282

கலக்கலாம் பிராணாய மதுவேயாகுங்
கலந்தோ ரைங்காயம் அஞ்சுண்டாச்சு
பிலக்கலா மைங்காய மந்தினாலே
பிலந்துதடா பிறிவியோ டஞ்சுண்டாச்சு
துலக்கலா மஞ்சதனாற் பஞ்சபூதந்
துருவமெனு மேருவதாங் கருவுண்டாச்சு
விலக்கலா மக்கருவைக் கண்டாயானால்
விதியாரை விமதியைக் காணலாமே. 283

காணவென்றா லின்னமொரு கருவைக்கேளு
காந்தசெந் தூரமென்று செப்பக்கேளு
காணவென்றால் காந்தமது பலம்நால்கொண்டு
கன்னியுட நாதஞ்சேர் கழட்டிநீயும்
காணவென்றாற் சட்டிதனில் நாதம்விட்டுக்
கருவான காந்தமதை யதனிற்றாக்கு
காணவென்றால் ரவிதனிலே சாமம் வைத்தால்
கழண்டுவிடு முனிரத்த மதுபோற் றானே. 284

தானென்ற காந்தசுத்தி யிதுபோலுண்டோ
தருவான காந்தமதை எடுத்துக் கொண்டு
மானென்ற முருக்கம்பூ பலமாற்கொண்டு
மகத்தான கல்வமதிற் பூசைதாக்கி
ஓனென்ற வுணிரத்த மூன்றுபலந் தாக்கி
யோர்சாமம ரைத்திடவே மெழுகுபோலாகும்
வானென்ற வம்மெழுகை வழித்துநீயும்
வளமான மூசையது போலச் செய்யே. 285

காந்தவட்டு

செய்துரவி தனிலுலர்த்தி கற்போலானால்
செயமான காந்தமய மதற்குள்வைத்து
செய்தண்ட மெழுகவிழ்தம் நன்றாய்ச்செய்து
சித்திபெற மண்சீலை யேழுஞ்
செய்து காடைப்புடந் தனிலே போட்டாயானால்
செயம்பெறவே காந்தவட்டு க்ஷணத்திலாகும்
செய்தந்த வட்டதனைக் கல்வத்திற்றாக்கி
சிவனார் வேம்பின் சாற்விட்டு மூன்றுசாம மாட்டே. 286

ஆட்டிடவே கொஞ்சிமஞ்சள் நிறம்போலாகும்
மாடாதோடைச் சாறுதனில் மூன்றுசாமமாட்ட
நாட்டிடவே நாதநிற மதுபோலாகும்
நாயகியாள் முலைப்பால்விட்டு மூன்றுசாமம்
சாட்டிடவே சர்வாங்கம் பஞ்சவர்ண மாகுஞ்
சமர்த்தான மெழுப் போலாங் காந்தமெழுவா கில்
வாட்டிடவே மெழுகுதனில் பனிநீர் பலம்விட்டு
வழித்துவில்லை செய்துரவி தனிலுலர்த்து வாயே. 287

உலர்த்திய தின்மேலண்டக்கரு மெழுகுசெய்து
உருவான விந்ததனாற் சீலையேழுசெய்து
அலர்த்தியதின்மேல் புற்றுமண் சீலைசெய்து
அகத்தியிலை யரைத்தன் மேற் கவசஞ்செய்து

நலர்த்தி ரவி யிருசாமங் காந்திபடவுலர்த்தி
நலமான கோழிப்புடம் போட்டீராகில்
செலர்த்தியது செந்தூர மாகும்பாரீர்
சிவசிவா புடமாறிப் பில்லையெடுத் திடீரே. 288

எடுத்து மண்சீலையது கவசமதை கழட்டி
யியலான வில்லையதைப் பீங்கானிலிட்டு
அடுத்து ரவிதனில் வைத்து ஒருநாழி யாகி
லப்பில்லை செந்தூரம் நீறியது போகும்
கடுத்த சரக்கறுபத்து நாலுமதைக் கொல்லுங்
காந்தாள மென்ன சொல்வேன் கடூரமிதுவாகும்
தடுத்திரா திக்குருவால் வெகுவேதையாகும்
தன்னைத்தா னறிவதற்குத் தனிக்குரு தானாமே. 289

குருவான சிதம்பர மிருநூற்றிற் சொன்னோம்
கூறினோம் பற்பமதிற் குன்றியரை யெடுத்து
மருவான காந்தசெந்தூர மரைகுன்றி வாங்கி
மகிழ்வான விதுரண்டு மொன்றாகச் சேர்த்து
அருவான ஆவின் வெண்ணெ யரைப்பலந் தானிட்டு
அருள் பெறவே குழைத்து அடிநாவுபட்டால்
திருவான ரூபமதைத் தியானித்து மண்டலம்
தெளிவாக விருபோது முண்டு தெளிந்திடீரே. 290

தெளிந்ததொரு மண்டலந் தின்றீராகில்
தினவுசொரி சிறங்கு அரையாப்பு வுள்மூலம்
நளிந்து விடுஞ் சீழ்மூலம் பிரமியம்
நாவறட்சி வயிறெரிவுசிலந்தி புண்காசம்
அளிந்துவிடும் துடைவாழை பாண்டு குட்டரோக
மடிவயிறு நோயும் வெடிசூலை புடபுரைகள்
களிந்துவிடுங் காமாலை சோகை கருமேகங்
கணக்கிலா வெண்மேகம் கழன்றுவிடும் பாரே. 291

பாரப்பா பவுத்திரங்கள் நாபிபுண் கட்டி
பளுவான கண்டமாலை முதுபிளகன் கடுவன்
ஆரப்பா வுட்சூடு புரச்சூடு குன்மம்
அரோசிகங் பாலச்சூ டற்றுப்போ மாகில்
பேரப்பா பித்தெரிவு அக்கினியா மல்மந்தம்
பிலமான பித்தப் பாண்டு கடுப்புவலி முடக்கல்
வாரப்பா வாதமதால் வாய்குளிர் சன்னி
வளமான சுரதோஷ மாண்டுபோம் பாரே. 292

மாண்டுபோம் நாலாயிரத்து நானூற்றெட்டுவியாதி
மகத்தான தாம்பிரஞ் செந்தூர மிதுவாலே
ஆண்டுவொரு வருஷமுத லிந்தமுறை கொண்டு
ஆவின்பசும் பாலன்னம் ஆட்டெலும்புச் சுப்பி
ஊண்டிரு போது பசுநெய்யிற் பாலாகும்
ஒருபோது நாளொன்று சுக்குக்கியாழம்
ஆண்டொடு நீயிந்தபடி யுண்டுவாரம்
அதில் வாதுமைக் கொட்டைத் தயிலமூழ்குவாயே. 293

மூழ்கவே யிந்தப்படித் தவறாதேபத்திய
மூதண்ட மனஞ்சிதருறாய் மோசம்வரும்பார்
மூழ்கவே பானவமாய் சைகாமியந்தான்
மூன்றையுந் தள்ளிவிடு மூர்க்கமாந் தேகம்
மூழ்கவே நோயில்லாச் சடலமது வாகும்
மூதண்ட வாசியது சிதறாது பாரீர்
மூழ்கவே முன்போன சுவாச வாய்வெல்லா
மூலமதிற் சேர்ந்து விளையாடுமது பாரே. 294

மூலமாந் தேகமது நூறாண்டு மட்டு
மூர்க்கமில்லா வச்சிரம்போல் நோயில்லாது வாழ்வாம்
மூலமாங் காந்தசெந் தூரமதை யுண்டு
முறையாக அற்ப்பாச கற்பமுண்டு தேறு
மூலமாங் கடைக்காண்டஞ் சொன்னவழிபாரு
முக்கியமா மிந்நூல் சொச்ச சாலத்திரட்டு
மூலமா மிம்முறையை யொருவாகுஞ் சொல்வாய்
முன்னமொரு கருவதனை மொழுகுவோ நாமே. 295

மொழியான பலதிரட்டு ஐந்நூற் பீட
முலகமதி லிந்நூலை ஒருவர்க்கு மீயா
வழியான துறையிதுபார் பெரியோர் சொன்ன பாதை
வழிப்படியே யறிந்தவனே யவரே மெய்ஞ்ஞானி
பழியாதே வேதாந்தங் கற்கிறதே யரிது
பாடினோம் பதினாறு லட்சங் காப்பாகில்
அழியாதே காமுகரோ டுறவாகாதே பாரு
ஐந்நூறை ஒருவர்க்கும் வெளிவிடாது பாரே. 296

அறுபத்து நான்குசுரத்துக்கும் நாதாந்தக்குளிகை

வெளிவிடா யறுபத்து நான்குசுரம் போக
விளம்புவோம் நாதாந்த குளிகைதனைச் சொல்வோம்
தளிவான தாளகந் தான்பல மொன்று வாங்கித்
தருவான நாபிபலம் வீரம்பல மாகில்

களிவான காந்தம் பலம்சிங்கி பலமாகில்
கருவான சாதிலிங்க மதுவும்பல மாகில்
அளிவான இந்துப்பு அதுவும் பலமாகில்
அருளினோஞ் சூதம்பலம் கெந்திபல மொன்றே. 297

பலமான பாஷாண மதுவும் பலமாகில்
பரிவான வெடியுப்பு அதுவும் பலமகில்
வலமான வங்கம்பல மயமும் பலமாகில்
வப்பிரேக மதுவும்பலம் சலாசத்தும் பலம்தான்
செலமான குருவண்டு அதுவும் பலமாகில்
செயலாக ஒவ்வொன்றாய் சுத்தியது செய்து
அலமான கல்வமதி லிட்டுச் சரக்கெல்லா
மாரிழையாள் நாதமது அஞ்சுபலந் தாக்கே. 298

தாக்கிவிடு ஒருசாமம் நாதமதை விட்டுத்
தருவான பனிநீரு அஞ்சு பலம்கொண்டு
தாக்கிவிடு ஒருசாமம் பனிநீராலையா
சார்வாக அண்டக்கரு அஞ்சு பலம்விட்டு
பாக்கிவிடு ஒருசாம மாட்டினதே யாகில்
பரிவான பழம்புளிபோ லாகுமதுபாரு
ஆக்கிவிடு நிம்பச்சா றஞ்சுபலம் விட்டு
அடைவாக ஒருசாம மாட்டிடீர் தானே. 299

மாட்டிடீர் கவிதும்பைச் சாறுபலமஞ்சு
மகிமைபெற அதிற்றாக்கி சாமமது சாடு
ஆட்டிட ரவுரிச்சா றஞ்சுபலம் விட்டு
அருள்பெறவே ஒருசாம மாட்டிடீரையா
நாட்டிட ராவாரைச்சாறு பலமஞ்சு
நலமாக வதிலிட்டுச் சாமமதுசாடு
பூட்டிடீர் புனல்முருங்கை சாறுபலமஞ்சு
புகழாக அதிலிட்டுச் சாமமதுசாடே. 300

சாடப்பா நிலத்துளசி சிவத்துளசி கருத்துளசி
நலமாக விவைமூன்றும் சரியிடையாய்க் கொண்டு
ஆடப்பா வஞ்சுபலஞ் சாறுதனைவிட்டு
ஆட்டுவாய் ஒருசாம மாட்டிடீரையா
சாடப்பா நன்னாரி நாயுருவிச் சாறு
சார்வான மேனிச்சாற் மூன்றுமொன்றாய்சேர்த்து
ஆடப்பா அஞ்சுபல மிடைகுறையா தெடுத்து
அஞ்சு பலமிட்டு ஒருசாம மது ஆட்டே. 301

ஆட்டிவிடு பிரமிச்சாற் பொடுதலைச்சாற்
அருளான குமரிச்சாற் கையான்சாரஞ்சும்
வாட்டிவிடு விதமொரு பலம்விஞ்சை கொண்டு
மாட்டிவிடு அஞ்சுபலம் விடுநீதாக்கு
நாட்டிவிடு இளநீறு அஞ்சுபலமிட்டு
நலமான சேங்கொட்டை பலஞ்சுத்திசெய்து
காட்டிவிடு கல்வமதி லிட்டுக் கருநீலி
கருணைபெற அஞ்சுபலம் சாறுவிட் டாட்டே. 302

சார்வான சாதிக்காய் லவங்கப்பூ கோஷ்டஞ்
சமர்த்தான மிளகுதிப்பிலி சுக்குமாகில்
மார்வான சடாமாஞ்சி கருஞ்சீரகந் தான்
மடவாக வொவ்வொன்று காற்பலந்தான் வாங்கி
ஊர்வாக வதிலிட்டுக் கொல்லன் கோவைச்சாற்
ஊர்கள்ளிக் கொழுந்துசாற் கருங்காக்கல்சாற்
ஏர்வான இலைக்கள்ளிச் சாற் சீந்திற்சாற்
எருமைமுல்லைச் சாறு வீத மொன்றாமே. 303

மொன்றான இதுவகைக ளொன்றாயிடித்து
மூர்க்கமாம் பலமஞ்சு சாற்றிலிட்டு
அன்றான விருசாமம் சாடினதே யாகில்
ஆலகால விஷநஞ்சது போலாகும்
தீண்டாத பாம்புவிஷம் தீண்டினதே யாகில்
தெளிவான நெஞ்சதிலே கடுகளவெடுத்து
முண்டான முலைப்பாலில் குழைத்து நாவிலிட்டு
மூர்க்கமாஞ் சலம்நூறு குடமதனை வாரே. 304

வாரது ஒருநாழியது கடந்ததே யாகில்
மாண்டுவிடு மனிதரவர் விழைத்துயிர் வருங்காண்
நாரமது விஷநஞ்சதனை வழித்துக் குன்றிபோல
நாதாந்தக் குளிமாத்திரை யதுவுஞ் செய்வாய்
பாரது பீங்கான் றனிலிட்டு நிழலுலர்த்திப்
பண்புபெறச் செப்புதனிற் பதனஞ் செய்தையா
ஆரது அம்பிகை பூசை சுத்திதனைச் செய்து
அருள்பெறவே பண்டிதரே ஆடுவீர் தானே. 305

ஆடுவீர் செகந்தனிலே மனிதர்களையா
அலறிவிடுஞ் சுரதோஷஞ் சன்னியது கண்டால்
சூடுவீர் சுக்குபல முலைப்பால் விட்டரைத்துச்
சுருதியெனுஞ் சஞ்சலம்பிழிந்து அச்சலம் தன்னில்
நாடுவீர் நாதாந்தக் குளிகையரைக் குன்றி
நலம்பெறவே யதிலுறைத்து நாலிற்படா கொள்க
பாடுவீர் சகலசுரசன்னி சுரதோஷம் பறந்துவிடும்
நாதாந்தக் குளிகை கண்டால் தானே. 306

தானென்ற வாதத்தா லெடுத்த நோயெல்லாம்
தாண்டிவிடு முலைப்பாலி லரைத்துண்டாராகில்
வானென்ற வாதமெல்லா மோடிவிடும்பாரு
வறட்சி முதல் குளிர்தோஷ மடைந்துவிடும்பாரு
பேனென்ற பித்தத்தா லெடுத்த சுரசன்னி
போரவி பயித்திய முதலோடி விடும்பாரு
நானென்ற வனுபானம் நிம்பப்பழச் சாற்றில்
நாட்டிவிடும் புலத்தியனே நண்பாமிது பாரே. 307

பாரப்பா சிலேட்டு நோயிருபத் தொன்றும் போகப்
பாய்ச்சிவா யரைக்குன்றி யேழுநாளாகில்
ஆரப்பா வனுபான மாவின் பானெய்யிற் கொள்ள
அற்றதடா மேகமெல்லா மடியோடே போய்ச்சு
தேரப்பா நாதாந்தக் குளிகைதனைச் செய்யச்
செகந்தனிலே பண்டிதஞ்செய் சித்திக்கும்பாரு
ஊரப்பா இக்குளிகை நாள்தோறு மையா
வுறுதிபெறப் பூசித்து ஊட்டுவாய் பாரே. 308

ஊட்டுகின்ற நாதாக்கள் வெகுவதிகஞ் சொன்னார்
ஓகோகோ பலதிரட்டி லுசிதமாய் நாமும்
வாட்டுகின்ற பூமலரின் வாசமது போல
வசனித்தோ மைந்நூறு மறிவோராகில்
நாட்டுகின்ற விந்நூலை வெளிவிடாதே மக்காள்
நாட்டினதே யாமாகி னரயு மெய்தும் பாரு
பூட்டுகின்ற பெரியோர்க்குத் தொண்டனுக்குத் தொண்டனாய்
புகழாக வவரிடத்திற் புகழ்ந்துகேள்வி கேளே. 309

முப்பூவின் செயநீர்

கேளப்பா புலத்தியனே சொல்லக் கேளையா
கெணிதமுடன் சொல்லுகிறோ முப்பூவின் செயநீர்
நாளப்பா சொல்லாது முன்னோர் சொன்னவாக்கியம்
நலமான பிண்டமாவு யிரண்டுசேர் கொண்டு
கொள்ளப்பா வாராது பனிநீர் படிவிட்டுக்
கூறாகப் பத்துமுறை தெளியவைத் திறுத்து
வேளப்பா அடுப்பேற்றிக் கொதிக்கவதைக் காய்ச்சி
வீறான களிம்பதனை யிறக்கிவிடு வீரே. 310

வீறான குழம்பதனை ஆறவைத் தெடுத்து
விதமான பீங்கானி லிட்டதையா
காறான வந்நாள் முழுதும் தெளிய வைத்தீராகில்
கண்ணீர்போ லமுத மிறங்குமது பாரும்

நாறான வவ்வமிர்த மதனிற் சேர்நாதம்
நாட்டிவிடு புலத்தியனே நாட்டின தேயாகில்
வாறான நாதமது வமுதமதிற் கலந்து
மருவிவிடுந் தும்பைமலர் போல்வாதந் தெளிவாம். 311

தெளிவான பாகமிது வெகுநூலில் மறைத்தோம்
தெம்பான பீங்கானி லமுதமதை யிட்டு
அளிவான ரவிதனிலே நாள்பத்து முழுது
மருள்பெறவே வைத்துநீ சிவக்கயிறுத்தால்
வளிவான நல்லெண்ணை யதுபோலக் கசிவிறங்கும்
மகத்தான கசிவெல்லா மிறங்கினதே யாகில்
களிவான கம்பியுப்பும் படருமது பாரு
காரணத்தா லபியிருந்தாற் கட்டுமுப்பு பாரே. 312

உப்பான வுப்பதனில் பாதியுப் பெடுத்து
வுசிதமுள்ள பனிநீரு ஆறுபலந் தாக்கி
குப்பான வுப்பதனைக் கரமதனாற் கூட்டிக்
கூரகா மத்தித்துப் பிட்டது போலாகில்
அப்பான பீங்ாகனி லப்பிட்டை யிட்டு
அருள்பெறவே ரவிதனிலே யறுநாழி வைத்தால்
நப்பான நாதாந்த செயநீ ரிறங்கும்
நரசென்ம மானிடர்க்கு வெளிவிடா திம்முறையே. 313

முறையான முப்பூவின் செயநீரு கொண்டு
மூர்க்கமாய்ச் சீசாவில் பதனமதாய்ச் செய்து
கறையான கணபதியின் பூசைதனைச் செய்து
கடைச்சரக் கறுபத்து நாலும் மழகாகும்
துறையான சரக்கதனைச் செயநீரில் தோய்த்துத்
துதிபெறவே யக்கினியில் வாட்டினதே யாகில்
மறையான நார்போல் மகத்தா மெழுகாகு
மப்படியே சரக்கெல்லாம் வாட்டி மிகப்பாரே. 314

வாட்டிடவே நவரத்னங் கள்செயநீரில் மாளு
மகத்தான வுபரசங் களங்கமது வாகும்
ஆட்டிடவே சரக்கதனைச் செயநீரில் தோய்த்து
அதன்மேலே யண்டவிந்து கவசமது செய்து
மாட்டிடவே மயிற்புடத்திற் போட்டீரேயாகில்
மகத்தான சுன்னங்க ணீறுமது பாரும்
நாட்டிலே யிம்முறையை வெளிவிட்டா யானால்
நரகமுனக் கெய்துமது நாட்டினோநாமே. 315

நாமென்ற சரக்கதனைச் செயநீரில் தாக்கி
நாதவிந் திரண்டு மொன்றாய்க் கவசமது செய்து
சேமென்ற வெண்கருவால் சீலையேழுஞ் செய்து
செப்பினோ மயிற்புடத்திற் போட்டீரே யாகில்
தேமென்ற செந்தூர முருக்கம்பூம் போலாகுஞ்
சித்திக்குஞ் செயமுறைகள் சிதறா திதுவாகில்
வாமென்ற நவரத்தினம் செயநீ ரதிற்றாக்கி
வாத்துமுட்டை விந்ததின்மேற் கவசமது செய்யே. 316

செய்யப்பா அண்டக்கரு சீலை யேழுஞ் செய்து
செப்பினோம் கோழிப்புடம் போட்டீரேயாகில்
ஐயப்பா நவரத்தினம் நீரியது சுன்னம்
ஆகிவிடும் புலத்தியனே யதுசெந்தூரங் கேளு
நையப்பா நவரத்னஞ் செயநீரிற்றாக்கி
நஞ்சுகொடிநாதம் விட்டரைத்ததின் மேற்கவசம்
பொய்யப்பா சொல்லவில்லை விந்துசீலை யேழு
புகழாகச் செய்து கோழிப்புடம் போடுவீராமே. 317

ஆமென்ற சரக்கறுபத்து நாலுந்தான்
அருளுவோம் பற்பங்கள் செய்யவகைகேளும்
நாமென்ற சரக்குநாலு பலவிதமு மாகில்
நலமான செயநீரு மூன்றுபலம் விட்டு
காமென்ற கல்வமதில் தாக்கியொரு சாமம்
கருணைபெற வழித்துவில்லை கருவாகச்செய்து
தேமென்ற அண்டமெழு கதன்மேற் கவசந்தான்
சீலைமண் ணேழுசெய்து கோழிப்புடம் போடே. 318

போடவே சரக்கெல்லாம் நீறிப் பற்பமாகும்
பூதலத்தில் மானிடர்க்குப் புகலாதே ஐயா
நாடவே யிந்தமுறை யமிசையுள்ள பேர்க்கு
நாட்டினோம் புலத்தியனே நன்பாகத்தானும்
தேடவே யிந்நூலைப் பசங்களுக்குங் காமுகர்க்கும்
காட்டினால் நரகம் வந்து சித்திக்கும் பாரு
ஆடவே யிந்நூலை வைத்துக் கொண்டையா
அஷ்டமா சித்து விளையாடுநீ பாரே. 319

இரசபாஷாணபற்பம்

ஆடவே யின்னமொரு கருவதனைக்கேளு
மருளுவோம் ரசபாஷாணப் பற்பமதைச் சொல்லுவோம்
நாடவே ரசபாஷாணம் நாலுபலங் கொண்டு
நண்டான வழுரிதனி லிருசாமந் தாக்கி

சாடவே பனிநீரும் நாகமது சேர்த்துச்
சார்வான கல்வமதிற் பாஷாணந் தாக்கிப்
பாடவே பனிநீரும் நாதமது இட்டுப்
பரிவாக விருசாமம் பண்புபெற ஆட்டே. 320

ஆட்டவே மஞ்சள்வர்ண மாகுமது பாரு
ஆரனியில் மூலிகையில் குமரிகற்றாழை
சாட்டவே யிடித்துச் சார்யிழைத்து மூன்றுபலந்தான்
சார்வாக இட்டு இருசாம மது சாடு
காட்டவே கருநீல நிறமது போலாகும்
கங்குல் ரவிகாந்தியது வீசுமொளி வதுபோல்
தீட்டவே வெண்சாவ லுதிரம் பலமூன்று
தெகட்டி யிருசாமமது தெளிகாட்டு வாயே. 321

ஆட்டுவா யாட்டையிலே மெழுகுபத மாகு
மடைவான மஸ்து சாராய மூன்று பலந்தான்
நாட்டுவா யாட்டுஅதில் தாக்கி மூன்றுசாமம்
நார்பிசின் போல்வதை யாட்டும் பதங்கேளு
வாட்டுவாய் மேகநிறஞ் செழுமையது காணும்
வாலையடா ரசபாஷாண முறையது போலுண்டோ
கூட்டுவாய் நிம்பச்சாற் பலமூன்று தாக்கிக்
கூறாது விருசாமம் கூறறியச் சாடே. 322

சாடியதை வழித்துவில்லை சம்பிரமமாய்ச் செய்து
சங்கையில்லா ரவிதனிலே சாமமூன்று மாகில்
ஊடியதை யுலர்வில்லை செய்து பாகமானால்
ஓகோகோ கெம்புபொடி தகதகென நிறமாம் பில்லை
மேலண்ட மெழுகவசஞ்செய்து வஸ்துவெனும்
விந்ததனாற் சீலையேழுஞ் செய்து
பேடியாய்த் திரியாதே ரவிதனிலே வைத்துப்
பெலத்த பில்லை காய்ந்ததனாற் கோழிப்புடம்போடே. 323

போடவே நீறியது பற்பமது வாகும்
பூதலத்தி லிம்முறையைப் புகலாதையா கேளு
நாடாதே ரசபாஷாணப் பற்பமிதுபோல
நாட்டிலுள்ள பண்டிதர்க ளாருஞ் செய்யாரையா
மாடவே மனிதனாய்ப் பிறந்ததினா லென்ன
மாடுகளே யறிவிப்போம் வையகத்திலொன்று
சாடவே ரசபாஷாணப் பற்பமதைக் கொண்டு
சாமளா தேவி பூசை சாற்றிடீரே. 324

சாற்றவே வையமதில் மனிதற் களையா
தையனல்லாள் போகமதில் சுகசன்னி கண்டால்
மாற்றவே வேறுமொரு மருந்து தோன்றும்
வேண்டா மகத்தான ரசபாஷாண பற்பம் கடுகிடைதான்
சாற்றவே தையனல்லா ளிடைத்து ரத்தம்
தருவாகக் குன்றியிடை வாங்கியதிலையா
பாற்றவே பற்பமதை யதிலே மத்தித்தையா
பாலையென்ற புருஷருக்குப் பலப்படாம லற்றே. 325

பத்தியம்

அற்றின தோராமாகில் மூன்றுவேளைக் குள்ளே
யென்சா னுடலைவிட்டு இறந்துபோகுஞ் சன்னி
பாற்றினதோ ராமாகில் பத்தியந்தான் கேளு
பரிவான சுறாக்கருவாடு அன்னமாகில்
காற்றினதோர் கல்மிளகு காற்பலந்தானிட்டுக்
கருவான திப்பிலி கால் லவங்கப் புகலந்தான்
ஆற்றினதோ ரதையரைத்துச் சாறுசெய் துண்டால்
அன்றுன்னைப் பிடித்தசன்னி யலறியோடுந்தானே. 326

வாதசன்னிக்கவிழ்தம்

ஓடுகின்ற வாதசன்னி ஓகோ வந்ததானா
லுறுதிபெற மலைதேனு சுத்திசெய்தெடுத்து
நாடுகின்ற ரவபாஷாணப் பற்பம் பெருங்கடுதான்
நலமான தேனதனில் மத்தித்து நீயும்
ஆடுகின்ற அடிநாவு பற்படாம லேற்று
அரகரா மூன்றுவேளை பற்பமுண்டாராகில்
வாடவேண்டா பண்டிதரே வாதசன்னி போகும்
வாட்சிசுர தோஷமுதல் மாண்டுபோம் பாரே. 327

பித்தசன்னிக் கவிழ்தம்

மாண்டுபோம் பித்தசன்னி மனிதர்கட்குவந்தால்
மகத்தான நாதமுலைப் பாலுமிகச் சேர்த்து
நாண்டுபோ மிருகடுகு ரசபாஷாண பற்பம்
நாதமுலைப் பாலிலிட்டு மத்தித்து நீயும்
ஆண்டுபோ மடிநாவு பற்படா மலெடுத்து
அரகரா அஞ்சுவேளை யுண்டாகிலையா
தாண்டிப்போம் சட்டைவிட்டுப் பித்தசன்னியாகில்
தவறாது பண்டிதரே யிந்தமுறை தானே. 328

முறையான சிலேத்ம சன்னி மூலமதில் வந்தால்
மூதண்ட மூலிதன்னை யரைத்து பிழிந்தெடுத்து
அறையான னெய்தேனி லிட்டு மிகதாக்கி
யரகரா ரசபாஷாண பற்பமுண்டு நீதான்

வறையான வதிலிட்டு மத்தித்து நீயும்
மடிநாவு பற்தட்டா யேழுவேளை யேற்று
துறையான சிலேத்மசன்னி சொல்லா தோடுமையா
துரைராச பூபதியே சொல்லிவிட்டோ நாமே. 329

சொல்லிவிட்டோ மிந்தவைந்நூற் பலதிரட்டால் நாமும்
சொன்னமொழி வெகுபதனந் துன்மார்க்கர்க்கீயார்
சொல்லிவிட்டோம் ரசபாஷாண பற்பமதைக் காண்பீர்
கொல்லுலகில் வாதிகளே தொகுத்துப் பாருண்மை
சொல்லியதோர் முறைகளெல்லாங் கருக்குருவாய்ப் பாடித்
தொந்தமெனும் பண்டிதந்தான் றொழில் சித்தியாகி
சொல்லியதோ ரின்நூலை வெளிவிடாதே மக்காள்
சொற்பெரிய வைத்திய காவியந்தனைப் பாரே. 330

பாரப்பா புலத்தியனே மகராச யோகி
பாடினோ முன்நூறு பதுமையது போல
ஆரப்பா வறியார்க ளந்தநூற் பெருமை
யறிந்தவனே மெய்ஞானி யதிகசித்தனாகில்
தேரப்பா சௌமியத்தின் சூஸ்திர மெல்லாமாய்ந்து
தெளிவான யெண்ணூறு நிகண்டதனைப் பார்த்து
மாரப்பா தொழில் முறைகளொருவ ரறியாமல்
மகத்தான கருக்களெல்லாம் வகுத்து மிகப்பாரே. 331

வசியக்கரு

வகுத்துப்பார் சுந்தரமே வசியக்கரு சொல்வோம்
வசனிப்போம் வாதிகட்கு வறுமை யணுகாமல்
அகுத்துப்பாராள் காட்டி முட்டைதனை வாங்கி
அரணையுட பித்ததுவுங் கூட்டி மிகச்சேர்த்து
பெகுத்தும்பார் கருங்கோழி ரத்தம்பலந் தாக்கு
பேரான பிண்டநெய் தானிருபலந் தானிட்டு
மகுத்துப்பார் கோரோசினை கஸ்தூரி புழுகையா
வகையான யிவ்வகைகள் கல்வமதிற்றாக்கே. 332

தாக்கியே நாதவிந்து யிருபலந் தானிட்டுத்
தருவான சூரியகாந்தம் பலமதனை தாக்கி
ஆக்கியே செந்நாயுருவிச் சாறுபலம் விட்டு
ஆட்டுவா யிருசாம மாட்டினதே யாகில்
பாக்கியே பழம்புளிபோல் வருதலது வாகும்
பண்மைபெற வழித்ததனைச் செப்லலதைத் தாக்கி
வாக்கியே வாலைபூசை மண்டலந்தான் செய்து
மகத்தான தேவதைகள் மகாவசியந் தானே. 333

வசியமாம் லோகமெல்லா மிக்கருவால் வசியம்
வதனமென்ற நெற்றிதனில் திலர்தமிட்டீராகில்
வசியமாம் புவனமெல்லாம் செகவசிய மாகும்
வண்மைபெறும் ஸ்திரீபுருஷர் பரிட்சியமாகும்
நசியமா மிருகங்கள் வசியமது வாகும்
ராசமதி பூபதியும் வசியமாகும்
பெசியமாய் பேதபூத வேதாள வசியந்தான்
பெலமான குட்டிசாத்தி வசியமது வாமே. 334

மோகனக்கரு

வாமென்ற மோகனத்தின் கருசொல்லக் கேளு
மகத்தான வழிமாரி சான்முட்டை தனைவாங்கி
நாமென்ற நரிப்பித்து மூன்றுபலம் வாங்கி
நாட்டிலே கழுகதுவின் கொழுப்பதுவுஞ் சேர்த்து
பேமென்ற பேரண்டத் தயிலங் கூடச்சேர்த்து
புறாரத்தம் பலஞ்சேர்த்து நாதவிந்து பலந்தான்
மாமென்ற மாக்கருதா னரைப்பலந்தான் சேர்த்து
மகத்தான கொச்சிமஞ்சள் புழுகு கஸ்தூரி யென்றே. 335

என்றான கோரோசனை நாலுங்கால் கழஞ்சி
யியலான துருசதுவும் பலமொன்று தாக்கு
மென்றான மேனிச்சாற் மூன்றுபல மிட்டு
மேலான கல்வமதில் மெழுகுபோ லிருசாமம்
அன்றான ஆட்டியதைச் செப்பதனிற் றாக்கி
யாகார புவனையுட பூசைமண் டலந்தான்
சண்டான சகலசித்தி வெகுமோகி யாகுஞ்
சராசரங்கள் புவனமெல்லா மதிகமோக மாமே. 336

ஆமென்ற வதனமதில் மோகனத்தின் கருவை
யருள்பெறவே திலர்தமிட்டு அடிபணிந்தீராகில்
நாமென்ற ஸ்திரீகளெல்லாம் புருஷரெல்லா மோகம்
நளினமெனும் ராசரெல்லாம் நாடெல்லா மோகம்
வாமென்ற கெசமோக மிருகமெல்லா மோகம்
வையகமெல்லா மதிமோக மாந்தரீக மோகந்
தீமென்ற தேவதைக ளதிக மோகமாகுந்
தேவகண பூதவேதாள மோகம்தானே. 337

உச்சாடனக்கரு

தானான வுச்சாடன மாக்கருவதனைக் கேளு
தருவான தேவாங்கின் முட்டைதனை வாங்கு
மானான மந்தியுட பிச்சுகூடச் சேர்த்து
மதின்கொழுப்பு பலஞ்சேர்த்து மாட்டுணியுஞ் சேர்த்து

வானான வழிமறிச்சான் ரத்தமது சேர்ந்து
வஞ்சியுட நாதம்பலம் விந்துபலஞ் சேர்த்து
ஏனான வாணியந்தா னிறந்தநெய் பலஞ்சேர்த்து
யிந்திர கோபம் பலஞ்சேர்த்து கஸ்தூரி மஞ்சள் பலமே. 338

பலமான புழுகு கால்கழஞ்சியது சேர்த்துப்
பரிவான கஸ்தூரி கால்கழஞ்சு சேர்த்து
குலமான கோரோசினை கால்கழஞ்சு சேர்த்து
குழந்தையுண்ணு முலைப்பால் கூட்டுவீர் பலந்தான்
வலமான வஞ்சிக்கொடி யரைப்பலத் தானிட்டு
வன்னிச் சாம்பல் பலம்நாலு விட்டிரு சாமம்
மலமான புளியதுபோல் வருதலது வாகில்
மகத்தான சாதிலிங்கம் பலம்போடு வாயே. 339

போட்டுநீ தயிலமாங் கிளிரெத்த மூன்று பலந்தான்
புகழாக வதிற்றாக்கி யிருசாம மாட்டி
வாட்டுநீ வழித்தெடுத்துச் செப்புதனிற் றாக்கி
மண்டலந்தான் வைரவர்க்குப் பூசையது செய்து
கேட்டுநீ செயசித்தி பிரசன்னமாக்கித்
திலர்தமிட்டு வதனமதில் திலர்தந் தீட்டுவீராய்
நாட்டிலுள்ள ஸ்திரீபுருஷ ருச்சாடன மேயாவர்
ராசமகி பூபதியு முச்சாடன மாமே. 340

ஆமேதான் மிருகமெல்லா முச்சாடன மேயாகும்
அருளினோம் தேவதைக ளுச்சாடனமே யாகும்
நாமேதான் தேவகணம் பேதபூத வேதாளமுதற்கொண்டு
நாட்டிலுள்ள வுயிர்களெல்லா முச்சாடனமே யாகும்
வாமேதான் பிதிர்க்களெல்லாங் குட்டிச்சாத்தி முதலாய்
வசனித்தோம் நவக்கிரக முச்சாடனந் தானாகும்
போமேதான் சிதம்பரமும் நாற்பத்து முக்கோணம்
புகழான சர்வமெல்லா முச்சாடனந் தானாமே. 341

தம்பனக்கரு

ஆமப்பா புலத்தியனே சொல்லக்கேளையா
அருளுகிறோம் தம்பனத்தின் தீத்தரு கேளும்
கோமப்பா கோட்டானின் முட்டைதனை வாங்கிக்
கூரான முசலினுட கொழுப்பும் பிச்சுஞ் சேர்த்து
காமப்பா கருநாரை ரத்தம்பலஞ் சேர்த்து
கருவான தூக்கணங் குருவிப் பிச்சுஞ் சேர்த்து
நாமப்பா பொருநத்தை முழுதுமதைச் சேர்த்து
நாகமது பலமொன்று நண்பாகச் சேரே. 342

சேரப்பா கேசரியி னெய் பலந்தானிட்டுச்
செயலான நாதவிந்து யிருபலந்தான் சேர்த்து
காரப்பா கருநாயி னிரண்டு கண்ணுஞ் சேர்த்து
கருவான அழிஞ்சிவிரை த்தயிலம் பலஞ் சேர்த்து
மாரப்பா மாக்கருதான் காற்பலமுஞ் சேர்த்து
மகத்தான கஸ்தூரி மஞ்சள் காற்கழஞ்சாகும்
தேரப்பா புழுகுகால் கழஞ்சியது சேர்த்து
தெளிவான கோரோசினை கால் கஸ்தூரியும்படி. 343

படியான குன்றிமணிப் பருப்பு கால்கழஞ்சு
பரிவான யெருக்கினுட சாறு பலமாகில்
அடியான செவ்வாமணக் கனிலைச்சாறு பலம்நாலு
அவுரிச்சாற் பலமிரண்டு அடவாகச் சேர்த்து
நடியான யிவ்வகைகள் கல்வமதிலிட்டு
நளினமெனு மிருசாமம் நண்பாக ஆட்டி
வடியான மெழுகுபதம் வருதலது பார்த்து
மகத்தான சிற்றேரண்ட யெண்ணை பலம்வாரே. 344

வார்த்துநீ யொருநாழி ஆட்டியதை வழித்து
வளமான செப்புதனில் பதனமதாய்ச் சேர்த்து
நார்த்துநீ யொருமண்டலம் வாராகி பூசை செய்து
நளினமெனுந் தம்பனத்தின் கருவெனவே பணிந்து
ஆர்த்துநீ யிக்கருவில் கடுகு வீதமெடுத்து
அருளான வதனமதில் திலர்தந் தீட்டுவீராய்
தேர்த்துநீ திலர்த மிட்டுத் திசைபார்த்தீராகில்
திரிபுவன மண்ட சராசரமுற் தம்பனமே. 345

சரமான ஸ்திரீபுருஷர் தம்பனமே யாகுஞ்
சார்வான லோகமெல்லாந் தம்பனமே யாகும்
வரமான தேவதைகள் தம்பனமே யாகும்
வளமான கெணபூத கிரேகஸ் தம்பனந்தான்
கரமான கருவி கரனாதி தம்பனந்தான்
கனமிருக வேதாள காளி தம்பனந்தான்
அரமான வாசியது அதுவுந் தம்பனந்தான்
அருளினோஞ் சாவுமுத லதிக தம்பனமாமே. 346

பேதனக்கரு

அதிகமாம் பேதனத்தின் கருசொல்லக் கேளும்
அருளுகிறோம் புலத்தியனே யடவாக நாமும்
வதிகமா முடும்பின் முட்டை கரும்பூனைப்பித்து
வளமான செந்நாயின் கொழுப்பும் பித்துஞ் சேர்த்து

நதிகமாம் நட்டுவக்காலி முழுதுமதைச் சேர்த்து
நலமான வாந்தையுட ரத்தம் பலஞ்சேர்த்து
சதிகமாஞ் சலச்சுழலின் வண்டுபலஞ் சேர்த்து
சாதியிலே முதற்சாதி பிராமணப் பெண்ணெய்யே. 347

நெய்யான நஞ்சுக்கொடி பலமதுதான் சேர்த்து
நிகரில்லா நாதவிந்து யிருபலந்தான் சேர்த்து
மையான கருங்குன்றி யுப்புபலஞ் சேர்த்து
வஸ்துவெனு மாக்கருவில் காற்பலந்தான் சேர்த்து
மையான வீரமதி லொருபலந்தான் சேர்த்து
வளமான யெருமை யணி யரைப்பலந்தான் சேர்த்து
கையான முதலையுட நெய்யில் பலஞ் சேர்த்துக்
கருமந்திக் கண்சேர்த்து பேய்ப்பீர்க்கின் தயிலம்பல மொன்றே.348

ஒன்றான வாவாரைப் பிசின்பலஞ் சேர்த்து
உகப்பான விஷ்ணுகிரந்திச் சாறுபல மூன்று
நன்றான நத்தைச்சூரிச் சாறுபல மூன்று
நல்லமஞ்சள் கால்சுழஞ்சு கஸ்தூரி கால் கழஞ்சு
அன்றான புனுகதுவுங் கால் கழஞ்சு தானும்
அருளான கோரோசினை கால்கழஞ்சு தானும்
வன்றான வஸ்துசாராய மாறுபலந்தான்
வளமாக வதிலிட்டு யிருசாம மாட்டே. 349

ஆட்டுவாய் மாட்டையிலே மைபோல துவாகும்
அதைவழித்துச் செப்புச் சிமிழதனி லடைத்து
ஆட்டுவாய் திரிபுரையின் பூசை மண்டலந்தான்
அருளாகச் சித்திசெய்து அடிபணிந்து நீயும்
நாட்டுவாய் பேதனத்தின் கருவெனவே பணிந்து
நலமான வதனமதில் திலர்தந் தீட்டுவீராய்
பாட்டுவாய் அரசசபையும் பேதனந்தா னாகும்
பவனாதி லோகமெல்லாம் பேதனந்தானாமே. 350

பேதனமாம் வாசிமுதல் பேதனமே யாகும்
பேரான பூதப் பிரேதம் பேதனமே யாகும்
ஆதனத மஷ்டகணம் பேதன மேயாகும்
ஆதாரம் பேதனந்தாம் தேவபேதனந்தான்
நாதனமாம் ஸ்திரீபுருஷர் பேதனமே யாகும்
ராசமகி பூபதியும் பேதனந் தானாகும்
வேதனமா மிருகமெல்லாம் பேதனமேயாகும்
விளங்கிறோம் பேய்க்குட்டிச் சாத்தி பேதனமே. 351

ஆக்கிருஷணக் கரு

சாத்தியெனுஞ் சர்வமெல்லாம் பேதனமே யாகுஞ்
சராசரங்கள் பகிரண்டம் பேதனமே யாகுஞ்
ஆத்தியெழு மாக்கிருஷ்ண கருவைக் கேளுந்தானும்
அருளுகிறோம் புலத்தியனே யடவாக மாகும்
வாத்தியெனும் வக்கான் முட்டைதனை வாங்கி
வளமான கழுதையின் கொழுப்பும் பிச்சும் சேர்த்தே
நாத்தியெனுந் தலைச்சன்பிள்ளை பிண்டகருப் பலந்தான்
நஞ்சுகொடி சுன்ன மதிலரைப் பலந்தான்றாக்கே. 352

தாக்குவாய் நாதவிந்து யிருபலந் தானிட்டு
தருவான மண்ணானை யிரண்டுபலம் விட்டு
வாக்குடனே வாலைரசம் பலமொன்று தாக்கி
வாத்தினுட ரத்த மிருபலந் தானுமிட்டு
நாக்குவாய் வரப்பெலியின் பிச்சுங் கண்ணுஞ்சேர்த்து
நலமான சமாதினுட வெலும்பினிட தயிலம்
தாக்குவாய் பலமொன்று பண்மைபெறச் சேர்த்துப்
பறிவான சிறியாநங்கை வடவேர் பலமாச்சே. 353

பலமென்ற கஸ்தூரி கால்கழஞ்சி யாகும்
பரிவான மலைமஞ்சள் கால்கழஞ்சாகும்
புலமென்ற புழுகதுவுங் கால்கழஞ் சாகும்
புகழாக கோரோசனை கால்கழஞ் சாகும்
அலமென்ற சந்தனம் பலமொன்று சேர்த்து
ஆடாதோடைச் சாற்மூன்று பலமொன்றுஞ் சேர்த்து
கலமென்ற கவிழ்தும்பைச் சாறு பலமூன்று
கருவான பேய்ச்சுரையிற் றயிலம்பலம் நாலே. 354

நாலான யிதுவகைகள் கல்வமதிற் றாக்கி
நாளொன்று நால்சாமம் நன்றாக ஆட்டி
வாலான மைபோலா மையதனை வழித்து
வளமான செப்புத்தனிற் பகன்மிகச் செய்து
காலான கருவெனவே கைதொழுது பணிந்து
கன்னியாஞ் சாமளா தேவியுட பூசை
மாலான மண்டலந்தா னுருபோட தீரானால்
மகத்தான மையெனவே யடிபணிந்து பாரே. 355

அடிபணிந்து ஆக்கிருஷ்ண மையெனவே தொழுது
அடவான வதனமதில் திலர்தந் தீட்டுவீராய்
நடிபணிந்து நால்திசையும் பார்தீரே யாகில்
நவசராசரங்கள் முதலாக்கிருஷ்ண முமாகும்
வடிபணிந்து வாசியது ஆக்கிருஷ்ண முமாகும்
மகத்தான தேவதைக ளாக்கிருஷ்ண மாகும்
தடிபணிந்து தேவகணம் வேதபூதக் குட்டிச்சாத்தி
தராதரங்கள் முதற்கொண்டு ஆக்கிருஷ்ணமா மென்றே. 356

கிருஷ்ணமாம் ஸ்திரீபுருஷர்க் கிருஷ்ண மாகுங்
கெணிதமெனும் லோகமெல்லா மாக்கிருஷ்ணமாகும்
அருஷ்ணமா மிருக்கமெல்லா மாக்கிருஷ்ணமாகும்
ஆனைப்பட்டை சேனைத்தள மாக்
கிருஷ்ணமா மனிமந்தர மாக்கிருஷ்ணமாகும்
வாதமுதல் வயித்தியமும் மாக்கிருஷ்ணமாகும்
புருஷணமாகும் சாவமெல்லா மாக்கிருஷ்ணமாகும்
புவன சராசரங்கள் முதலாக்கிருஷ்ண்மா மென்றே. 357

வித்துவேஷணக்கரு

என்றான புலத்தியனே சொல்லக்கேளையா
யியம்புகிறோம் வித்வேஷணந் தானியல்பாய் நாமும்
வென்றான வித்வேஷண மாங்கருவைத் தானும்
வெளிவிடா தொருவர்க்கும் விட்டாயானால்
அன்றான நரகமெய்துந் தேரார் சொன்னோம்
அண்டவிடி விழுந்துதலை தெறித்துப் போவாய்
குன்றாம லிக்கருவைச் சொல்லக்கேளுங்
கூறுவோம் செம்பருந்தின் முட்டைவாங்கே. 358

வாங்கியே விச்சுளியின் பிச்சுங் கண்ணும்
வளமான செம்போத்தின் கொழுப்பும் பிச்சும்
ஆங்குவா யாரிழையா ளீன்றபாலன்
அருளினோ மதன்மேல்மாவு பலமொன்று
தேங்குவாய் துரிஞ்சில் ரத்தம் பலமூன்றில்
தெளிவான பலமுட்டை குழியானை பலமொன்று
நாங்குவாய் நாதவிந்து யிருபலந்தானாகில்
நஞ்சுகொடி யரைப்பலந்தா நளினமுமாமே. 359

நளினமெனு மிலைப்பாசி கெந்தியொரு பலந்தான்
நலமான கற்பூற வள்ளிச்சாறு பலமூன்று
அளினமெனும் புங்கங்கொட்டை தயிலம் பலமொன்று
ஆனையுட நெருஞ்சிசாற் மூன்றுபல மாகில்
வளினமாம் பன்றிநெய் பலந்தானாகில்
வடக்கேபோம் வாடிவேர் பூனைக்காலிசாறு பலமாகில்
தளினமெனும் கோரோசினை கால்கழஞ்சாகில்
தருவான புழுகுகஸ்தூரியுங் கால் பலமே. 360

பலமென்ற சொஞ்சிமஞ்ச ளரைப்பலந் தானாகில்
பரிவான யிதுவகைகள் வீதமெல்லாஞ் சேர்த்து
அலமென்ற வில்வமதி லிதுவகை களிட்டு
அருளான பனிநீரு அஞ்சுபலந் தாக்கி

நலமென்ற விருசாமம் மைபோலதையாட்டி
நளினமெனுஞ் செப்புதனிற் பதனமாய்ச் செய்து
வலமென்ற சாமளா தேவிபூசை செய்து
மண்டலந்தா னுருவேற்றிச் சித்திசெய்து பாரே. 361

சித்தியெனும் வித்வேஷண மாங் கருவதனை யாருஞ்
செகத்திலே யிக்கருவை தெளிவிடாது பாரும்
அத்தியுரித் திடைத்த யுமையா ளீசன்சொல்ல
யான்கண்டு புலத்தியனே யருளினோ நாமும்
வெத்தியெனும் வித்வேஷணத்தின் கருவதனைக் கேளு
விளங்கவே வதனமதில் திலர்தமிட்டீராகில்
பத்தியெனும் ஸ்திரீபுருஷர் வித்வேஷணந்தானாகும்
பண்புடைய தேவதைகள் வித்வேஷணந் தானாமே. 362

வேஷணமாம் தேகமெல்லாம் வேஷணந்தா னாகும்
வேதாள பூதகணம் வித்வேஷணந் தானாகும்
பூஷணமாம் புவனாதி புவனமெல்லாந் தானாகும்
புகழான நவக்கிரகம் வித்வேஷண மாகும்
வாஷணமாம் வாதவயித்தியமுந் தானும்
வாசிமுதல் வித்வேஷணமா மிருகவேஷணமாம்
மூஷணமாமூலி யெல்லாம் வித்வேஷணந் தானாகும்
மூர்க்கமென்ற பிதிர்க்களெல்லாம் வித்வேஷணமா மென்றே.363

என்றேகேள் தேவகணம் சக்கரங்கள் முதலா
யென்னசொல்வேன் தொழில்களெல்லாம் வித்வேஷணமாகும்
அன்றேகே ளண்டசராசரமுதற் கொண்டு
அஷ்டகெசம் வித்வேஷண மருளினோம்
நன்றே கேள்சாவ மெல்லாம் வித்வேஷண மாகும்
நாட்டிலுள்ள பேய்களெல்லாம் வேஷணந்தானாகும்
பன்றேகேள் பலதிரட் டைந்நூறின் னூல்பீடம்
பாடினோ மிந்நூலைப் பதனமதாய்ச் செய்யே. 364

மாரணக்கரு

பதனமெனு மாரணமாங் கருவதனைச் சொல்வோம்
பண்புடைய புலத்தியனே பாடக்கே ளையா
அன்புடைய மணிப்பிள்ளை முட்டைதனைவாங்கி
அண்டங் காக்கை ரத்தம் பலம் வெண்கூளி பிச்சு
வன்புடைய பச்சோந்திப் பிச்சுங் கொழுப்பாகி
வதின்ரத்தம் பலம் பச்சைத் தவளையதின் பிச்சும்
நண்பெனும் பசுந்தேரைக் கொழுப்பும் பிச்சும்
நலமான வெட்டு திங்கள் மாக்கருதான்பலமே. 365

கருவான நாபிபலம் பாம்புவிஷந் தான்
கருணைபெறும் பலமொன்று யெட்டிக்கொட்டைத் தயிலம்
வருவான பலமொன்று வளமாகச் சேர்த்து
வசனித்தோம் நாதவிந்து யிருபலந் தானாகும்
அருவான சீந்தி யிட வடவேர் வாங்கி
யருளான கோரோசினை கால்கழஞ்சாகும்
மருவான கஸ்தூரி கால்கழஞ்சாகும்
மகத்தான புழுகால் கழஞ்சியது வாமே. 366

ஆமேதா னிவ்வகைகள் கல்வமதி லிட்டு
அடைவான அழுகணைச் சாற் மூன்றுபலந் தாக்கி
நாமேதான் சுத்தசல மிரண்டுபல மிட்டு
நளினமெனுந் தில்லைப்பா லிரண்டுபலந் தாக்கி
வாமேதான் வரமுள்ளிச் சாறுபல மூன்று
வளமாக வதிலிட்டு இருசாம மாட்டி
காமேதான் மாரணமாங் கருவிது வாகுங்
கருணை பெறுமை யதுபோல் கசிந்துவிடும் பாரே. 367

கசிவான மையெடுத்து எட்டிவேர்சிமிளில்
கலக்கமில்லாக் கருவதனைப் பதனமதாய் வைத்து
கசிவான சக்கலாதேவி பூசை யாகில்
சகலசித்தி பெறுவதற்கு மண்டலந்தான் செபி
அசிவான கருவதற்கு மரணசித்தி றாக்கு
அம்பாளின் கிருபையினா லஷ்டதொழி லாட
நசிவான மாரணத்தின் கருவெனவே பணிந்து
நாதாந்த மையெனவே யடிதொழு வீராமே. 368

அடிதொழுக மாரணத்தின் தொழிலதனைக் கேளும்
ஆரணியில் மானிடர்க்கு அருள வொண்ணாதையா
நடிதொழு தாளியப் பனையோலை யோரங்குலம்
நளினமெனுஞ் சக்கலா தேவி சக்கரத்தை யெழுதி
வடிதொழுக மாரணத்தின் கோசபீச மடைத்து
மைந்தனே யுனக்கெதிரி போதனை யரிந்து
தடிதொழுக தலைகாலாய் மாறிக்கரு பூசித்
தணலான வக்கினியில் வாட்டி செபஞ்செய்யே. 369

செய்துநீ மாரணத்தி னுருவில் நூற்றெட்டு
செயலாகப் பூசைசெய்தே செபித்தீரே யாகில்
அய்துவொரு வாரமதில் தேகமெல்லாம் வெடித்து
அந்தப்புர மேகிடுவா ரறிந்துசெய் பாவம்
நைதவர் நசித்திடுவார் குட்டநோய் கொண்டு
நல்கண்டமாலை யதுநான்கு நாளிற் காணும்
கைதொடுவார் மண்டலத்தி னுனைத்தேவ னென்று
கன்மிகட்கு இத்தொழிலை கண்ணதனிற் காட்டே. 370

கண்ணிலவ ருனைக்கண்டு கைதொழுதா ரானால்
காராவின் பசும்பாலுந்தனிற் கழுவிவிடு சக்கரத்தை
விண்ணில் பாதகருக்குக் கண்டவினை யற்றுப்போகும்
விமலி சாம்பவி பூசை விடாயாற்றிப் பணிவாய்
மண்ணிலே மனிதருக்கு மூன்று சாட்சியாகில்
மகத்தான மாரணஞ் செய்காமி யென்று
வுண்மை வெண்ணிலையாம் நல்லோர்க்கு வித்தை வினை செய்யா
வீம்புள்ள கர்மிகட்கு விருதுபெற்ச் செய்யே. 371

விருதான பலதிரட் டைந்நூற் நூற்பிடம்
வேதாந்த சாரமிது விளங்கு நவரசந்தான்
அரிதான விந்நூலை வெளிவிட்டா யானால்
அண்டயிட விழுந்துதலை தெறிந்து மிகப்போவாய்
மருதான மாரணமாஞ் சகலத்துக்கு
மதிகமாணாக்காள் மாந்திரீகஞ் சித்துப்பதரிது
கருதான கருக்குருவாய்ச் சொல்லிவிட்டோ நாமு
காரணத் தாலெபியிருந்தால் கருவெய்து பாரே. 372

பாரப்பா புலத்தியனே மகராச யோகி
பசங்கலுக்குங் கர்மிகட்குங் காமுகர்க்கு மாகா
தேரப்பா பொய்சொல்வோர் சென்மகா தர்க்குந்
தீவினைசெய் மனிதருக்குந் திருடர்க்கு மாகா
வேரப்பா வேதாந்தி சிவயோகி கட்கு மாகும்
விதியமைப்பு விட்டகுறை தொட்டகுறை யாகில்
ஆரப்பா வறிவார் களதித சித்தியாகும்
அஷ்டமாரண சித்தியாகுமது பாரே. 373

செகசாலக் குரு

சித்தியா மின்னமொரு கருவதனைக் கேளுஞ்
சித்திக்கத் தொழில் முறைகள் சொல்லக் கேளையா
அத்தியாஞ் செகஜால வித்தையது வாட
அருளுகிறோங் கருவதனை யடவாக நாமும்
கத்தியாங் கழுவிலே யிறந்தவர் கனையெய்தான்
கருணைபெற வவருடைய கொழுப்பெடுத்துருக்கி
முத்தியாம் பிச்சதுவும் நெய்யதிலே சேர்த்து
மூதண்ட வவர்சிரசு கத்திகொண்டு வாங்கே. 374

வாங்கியே யிடித்ததைச் சரகதுவாயுலர்த்தி
வதின்கூடச் செவ்வாமணக்குப் பருப்புபல மெட்டு
ஆங்கியே யழிஞ்சிவிரை யெட்டு பலம்வாங்கி
யடைவாக விதுரண்டு மிடித்ததிற் கலந்து

தாங்கியே நாதவிந்து அதின்கூட விருபலந்தான்
நளினமெனுஞ் சிறியாநங்கை முழுதும் பலம்ரண்டு
ஏங்கியே திரியாதே யெட்டிக்கொட்டை பலமெட்டு
யிடித்ததிற் கலந்துநீ யியம்ப கேளென்றே. 375

இயம்பக்கேளு நெய்யும்பிச்சுங் கொழுப்பதுவுஞ் சேர்த்து
இந்திரமேக் குழியானை யிதுரண்டு பலந்தான்
இயம்பக்கே ளதிற்சேர்த்துக் கோரோசினை காற்பலந்தான்
அருளான கஸ்தூரியதுவுங் காற்பலந்தான்
நியம்பக்கேள் புழுகதுவுங்காற் பலந்தானாகில்
நலமான சமாதிதனிலிறந்த வர்தன்னெலும்பு
மயம்பக்கே ளெட்டுபல மிடித்ததிலிட்டு
மகத்தான கொச்சிமஞ் சள்பலமிடித்துத் தாக்கே. 376

தாக்குவாய் பாண்டமதில் வீதமெல்லாமிட்டுத்
தருவாக மண்சீலையேழுமிகச் செய்து
ஆக்குவாயிரு முழக்குழியது தோண்டியதற் குள்ளே
கலசம் வைத்துப் பாண்டத்து வாரஞ் செய்து
வாக்குவாய் கலசமேல் பாண்டமதை வைத்து
வளமானசமாதி யெருகொண்டதின் மேல்
மூசொக்குவாய் காலாக்கினியின் றீயதனால்
மூட்டிச் சாமங்கொண்டக் கினிமைச் சாடுவாய் தானே. 377

தானான மண்டலந்தான் சென்றபிறகையா
சாலவித்தையா டுதற்குப்பாண்டமதை யெடுத்து
வானான கலசமதைப் பார்த்தீரேயானால்
மகத்தான விந்திரசாலத் தயிலமதிறங்கு
கோனான தயிலமதைச் சீசாவிலிட்டுக்
குருபரன்றன் றியானமது மண்டலந்தான் செபி
மானான சக்கலாதேவியிட பூசை
மண்டலந்தா னுருவேற்றத் தயிலஞ் சித்தியாமே. 378

சித்தியென்ற தேவிபிரசன்ன மதாய்ச்செய்து
செகசால வித்தையெல்லா மருக்ஷணத்திலா டுதற்கு
முத்தியெனுந் தயிலமதில் ஓம்றீம்கிரியும் அரியுஞ்சிவ வென்று
முந்நூறுவுருச் செய்துதயிலமதைத் தொட்டு
சத்தியெனுஞ் சாலக்காள் தேவிவாவாவென்று
தந்தியெனுங் கணபதியினா லயந்தான் சென்று
பத்தியெனுங்கற் பிள்ளையார் தின்சிரசிற்றொட்டு
பாதைவழி முன்னிருந்து தியானமது செய்யே. 379

செய்யப்பா புலத்தியனே மகராசயோகி
சிவசிவாவென்ன சொல்வேன் றயிலமதி னேர்மை
பொய்யப்பா சொல்லவில்லை ஐந்நூற் பலதிரட்டு
புதுமையிது வெகுபுதுமை புண்ணியர்க் கெய்தும்

நையப்பா கற்பிள்ளையார் நகர்ந்து வருமானால்
நாடதிலே வெகுமனி தாதிசயமாய்ப் பார்ப்பார்
மெய்யப்பா சொல்லிவிட்டோ மிந்திரசால வித்தையது
மெய்ஞ்ஞானி செய்வாரே. 380

வாரான செகஜாலமின்ன மொருவித்தை
வசனிப்போம் புலத்தியரே வண்மை பெறநாமும்
நேரான புருஷரத்நம் நீயே யானால்
நிமிஷத்திற் கோடாகோடி யிந்திரசாலமாடும்
பேரான சித்தருக்கெல்லாம் வெகுபெருமையாவாய்
பெரியோர்க்குத் தொண்டனாய் பிலஞானியாவாய்
தேரான தெளிவுள்ள சிவயோகியாவாய்
சித்தறு பத்துநால் க்ஷணத்திலாடுவாயே. 381

நோக்கர் கெடைக்கம்பம் பொடியாக்குகல்

ஆடுதற்கு நோக்கரவராடுந் தொழிலெல்லாம்
அரைநொடியில் நிர்த்தூளியாவதற்குக் கேளும்
நாடுதற்குக் கெடைக்கம்பம் பொடிபொடியாய்ப்போக
நாம் சொல்வோம் வித்தையொன்று நளினமதாய்த் தானும்
கூடுதற்கு புரத்தயிலமதில் குன்றியரை யெடுத்துக்
கோட்டானின் ரத்தம்விட்டு மத்தித்துநீயும்
வேடுதற்கு வேடிக்கை பார்க்கு மனிதர்போல் நின்று
விமலி சக்கரதேவியிட மூலஞ்செபிப்பாயே. 382

முந்நூறு பார்க்கவும்

மூலமாங் கம்பமதில் தயிலமதைத் தொட்டு
முனையாக வுன்னுடைய இல்லம் வருவாய்நீ
சாலமாம் நோக்கரவரு ரறிவித்தையாடுஞ்
சமர்த்தான கம்பமது பளபளென முறியும்
ஞாலமாம் வெகுமனிதர் விழுந்திறந்திடுவார்
நளினமாம் வித்தையிது ஆருஞ்செய்யாரையா
ஆலமாம் திரும்பவரை முந் நூற்றிற்சொன்னோம்
அறிந்திடுவாய் புலத்தியனே யதிதமிதுவாமே. 383

மணிச்சிலம்புடையும்வித மறிய

ஆமென்ற பூசாலிமணிச் சிலம்புடைய
அடைவான தயிலமதின் குன்றி யரையெடுத்து
நாமென்ற நுழைநரியின் பித்ததனைக் கூட்டி
நலமாக மத்தித்து வோடதனிற் பூசி
வாமென்ற எட்டியிலை யதுமேலே மூடி
வங்சிங் ஓம்யலி ரிமசவ்வென வேமைந்தா
ஓமென்ற வுருநூற்றெட்டு செபிப்பீரா
லுறுதிபெற வவர்பேரை மாற்றி தியானஞ் செய்யே. 384

செய்யப்பா வவரிருக்குந் தெருவுதனிலேகிச
செயலான வோடுதனை பூமிதனில் வைத்து
ஐயப்பா இடதுகாலால் மூன்றரைப்பரைக்க
அரகரா சிலம்பு மணிபொடிபொடியாய்ப் போகும்
மெய்யப்பா திரும்பவளக முந்நூற்றைப்பாரு
மேலான வித்தையிது மேவிப்பாருண்மை
பொய்யப்பா சொல்லவில்லை பூதலத்திற்
செய்யலாம் புகழானகரு வித்தை கெசசால மாமே. 385

தம்புருகின்னரி உடுக்கைகளுடைய விதம்

சாலமா மின்னமொரு வித்தைதனைக் கேளு
தம்புருகின்னரி யுடுக்கை பம்பை முதல்மேளம்
ஞாலமாம் ராவணாஸ்த மத்தளம்பேரி களின மெனு
மிதுவகை யோடதித மெல்லாமையா
வாலமாங் கம்பியதுபொடி பொடியாய்ப் போக
வசனிப்போந் தயிலமதி லரைக்குன்றிவாங்கி
ஆலமாம் அரனை யிடபித்துங் கூடச்சேர்த்து
அரகரா மத்தித்துஆடத் தொழில்களே. 386

தொழிலான தலைப்பிள்ளை கபாலவோடு வாங்கி
துதிபெறவே மையதனையோ டதனிற்பூசி
மழிலான கரூமத்தனிலை யதன்மேற் பரப்பி
வங்அங்உஸ்யூரி அரியும்மென்று செபியுரு நூறையா
வழிலானவர் செய்யுந் தொழிலருகே சென்று
வையகத்தோ ரொருவர றியாமல்மைந்தாநீயும்
அழிலான பூமிதனிலோ டதனையிட்டு
அறக்குவாய் மூன்றுதரம் அறக்கிவருவாயே. 387

வரிவான தம்புருகன் கின்னரிக ளுடுக்கை
வளமான மேளமத்தள முதலாய்த் தானும்
புரிவான பொடிபொடியாய்த் தூளதுவாய்ப் போகும்
பூதலத்தி லிதுவதிக மிந்திரசால வித்தை
கருவான திதுதிரும்ப முந்நூறைப் பாரு
காசினியி லிதுவரிது அந்நூல் மைந்தா
விருதாந வாதிகள்தான் கைவிடாரிந்நூல்
வெகுபெருமை ஐஞ்னூரிற் கண்டோர்வெளி யிடார்பாரே. 388

வில்லம்பு குண்டாயுதங்கள் படைசிதற

வெளியாகச் சொல்லுகிறோங் கருவித்தையிதுதான்
விளங்குவில்லு அம்புதடி குண்டு ஆயுதங்கள்
களியான கத்தியொடுவளை தடிசக்கரம்
கருவான சில்லாக்கோல் நேரிசம் சமுதாளி

பளியான பாணமொடு அஸ்திரங்களக்கினி
படைசிதறும் ராணுவங்கள் மந்திரம்பில்லியேவல்
மளியான குத்துவெட்டு அடிகளிது முதலாய்
மகத்தான சாவமெல்லாந் தடைசெய்யக்கேளே. 389

சகலத்துக்குந் தடையறியவு

செய்யக்கேள் தயிலமதில் குன்றியரை வாங்கிச்
சிறியாநங்கைச் சாறுவிட்டு புலிப்பித்துஞ் சேர்த்து
நையக்கேள் மதித்துத் திலர்தந்தீட்டி
நலமான புருவமதில் மையதனைப்பூசி
உய்யக்கேள் ஓம்கிறியும் கிறாங்கிலி"புஞ் சவ்வும்
உருநூற்றெட்டு தரஞ்செபித்துப் படையேகி
அய்யக்கேளு யுத்தியத்தின் ரணக்களத் தினடுவே
ஆமென்று நின்றுவுரு செபிப்பீரையா. 390

ஐயாகேள ம்புவில்லு சிதறியது போகும்
அடிகுத்து அக்கினிகளது சிதறிப்போகும்
நையாகேள் கத்திவெட்டு சில்லாக்குத்து கோல்குத்து
நலமான பாண்டுமுதல் சிதறியது போகும்
மெய்யாகேள் புட்பமாறி பொழிந்ததுதான் போல
வெடிபானஞ் சிதறியது விலகும்பாரு
பொய்யப்பா சொல்லவில்லை புலத்தியனேஐயா
புதுமையிது பூதலத்திற் புண்ணியர் செய்வாரே. 391

இடிமழைகள் மின்னல் காற்றுசிதறும் விதமறியவும்

செய்யவே யின்னமொரு செகசாலவித்தை
செப்புகிறோம் இடிமழைகள் மின்னலதுசிதறி
கையவே காற்றுமுதல் விலகியதுபோகக்
கருவான தயிலமதில் குன்றியரைவாங்கி
உய்யவே செய்யானின் பித்துமிரத்தஞ் சேர்த்து
உடும்புனிட பித்தும் ரத்தமு ரவாகச் சேர்த்து
ஐயவே மத்தித்தால் மெழுகது போலாகும்
அருளான தாம்பிரத்தாற் குளிசமது செய்யே. 392

செய்யப்பா குளிசமதில் மெழுகதனை யடைத்து
செயம்பெற வேசிறியும்ஐயும் அங்குசயா
வெய்யவே் வென்றுவுரு நூற்றெட்டு செபித்து
விளங்கவே விளையினில் குளிசமதை யிட்டு
மையவே மழைக்காற்று யிடிமின்னலிற் போனால்
மழைசித்து மிடிகாற்று மின்னல் சிதறுங்காண்
பொய்யப்பா சொல்லவில்லை பூதலத்தில்நீயும்
புண்ணியவான் மனிதனல்ல தேவனீதான் பாரே. 393

தேவனாஞ் சித்தனடா வொருவனையுங் காணார்
செகசால மறிந்தவரே வாதியாகும்
தேவனாய்ப் பிறக்கிறது வுலகமதிலையா
திசையிலே யொருவனுண்டு சித்தனவராகில்
தேவனாம் புலத்தியனே யுனக்காகச் சொன்னோஞ்
செகமதிலே காமுகர்க்குஞ் செப்பவில்லை நாமும்
தேவனாய்ப் பிறப்பவர்க்கும் பலதிரட்டைஞ்ஞூரிற்
செப்பினோ முண்மையிது சித்திப்பதரிதே. 394

அரிதான மூலமெல்லா மிந்நூலில் சொல்வோம்
அடவுள்ள சுந்தரமே யடவாகக் கேளும்
அரிதான விந்நூலை யார்க்கும் வெளிடாதே
அரகரா வெளிவிட்டா லண்டஇடி யிடிக்கும்
அரிதான கருவெல்லா மிந்நூலிற் சொன்னோம்
அறிவதற்க்கு வாதிகளே யறியுமவராகில்
அரிதான சிவயோகி யுலகமதிலரிது
ஆத்மாவை ரட்சித்தோ மவன்மெய்ஞ் ஞானியாமே. 395

அஞ்சனாதி லேகியம்

மவரான யின்னமொரு கருவதனைக் கேளு
மாதளம்பூ நிறமாக வவிழ்தமொன்று சொல்வோம்
அவரான வஞ்சனாதி லேகியந்தானையா
அருளுகிறோம் புலத்தியனே யடைவாக நாமும்
நவரான நார்த்தம்பழம் ரசம்பலமெட்டு
நலமான கொடிமாதளம் பழம்ரசம் பலமெட்டு
அவரான அன்னாசிப்பழ ரசம்பலமெட்டு
அருளான நிம்பப்பழம் ரசம்பலந்தா னெட்டே. 396

எட்டான மாதளம்பழ ரசம்பலமெட்டு
இயலான தேங்காய்ப்பா லெட்டுபலமாகும்
நட்டான பனங்கள்ளு எட்டுபலமாகும்
நளினமெனும் அத்தியிட கள்ளுபலமெட்டு
வெட்டான வேம்பினிட கள்ளுபலமெட்டு
விளங்குங் கறுப்புவெற்றிலைச் சாறுபலமெட்டு
அட்டான இஞ்சிசுரசம் பலமெட்டுமாகும்
அருளினோங் கற்பூரவள்ளிச் சாறுபலமெட்டே. 397

பலமான வவுரிச்சாற் பலமெட்டதாகும்
பரிவான வாடாதோடைச் சாறுபலமெட்டு
அருளான கருங்காக் கலஞ்சாறு பலமெட்டு
யழகான குப்பைமேனிச்சாறு பலமெட்டுந்

தோரான திராட்சப்பழரசம் பலந்தானெட்டு
திறமான வுத்தாமணிரசம் பலந்தானெட்டு
கூரான கருந்துளசிச்சாறு பலமெட்டு
குறிப்பான நரநாயுரிச்சாறு பலமெட்டே. 398

நவிலுவோம் நிலத்துளசிச் சாறுபலமெட்டு
நலமான கவிழ்தும்பை சாறுபலமெட்டு
அவிலுவோஞ் சூரியகாந்தி சந்திரகாந்திச்சாறு
அதுவுமிரு பலமெட்டு அருளுவோநாமும்
பவிலுவோம் பொடுதலைச்சாற் பலமெட்டுமாகும்
பரிவான கையான்சாற் பலமெட்டுமாகும்
பெவிலுவோம் பிரமிசாற் பலமெட்டதாகும்
பேரான இதுவகைகள் பாண்டமதில் வாரே. 399

வாரப்பா புலத்தியனே வேர்கிழங்கு வகைகேள்
வல்லாரை வேருதான் பலமூன்றதாகும்
ஆரப்பா வறிவார்கள் மெருகனிடகிழங்கு
அருளினோய் பலமெட்டு மிளகரணை வேர்தான்
ஏரப்பா எட்டுபலஞ் சிவதை வேரெட்டு
யியலான சிவனாரு கிழங்கு பலமெட்டு
தேரப்பா கெருடனிட கிழங்கு பலமெட்டுத்
தெளிவான நிலப்பனைவே ரெட்டுபலமாமே. 400

வாமேதான் மணித்தக்காளி வேருபலமெட்டு
மகத்தான பூதவிருட்சம் பட்டைபலமெட்டு
ஆமேதான் சிறுசின்னிவேரு பலமெட்டு
அடைவான சிறுகுறிஞ்சாவேரு பலமெட்டு
நாமேதான் முக்கத்தாரிவேரு பலமெட்டு
நலமான கண்டங்கத்திரிவேரு பலமெட்டு
வேமேதான் குளப்பாசி பலமெட்டாகும்
விளம்பினோம் சங்கம்வேர் பலமெட்டதாமே. 401

தாமென்ற வழிஞ்சியின்வேர் பலமெட்டாகுந்
தருவான வகையெல்லாம் கல்லுரலிலிட்டு
நாமென்ற விருப்புலக்கை கொண்டிருசாமம்
நனினமதா யிடித்துமாப்போல் வடிகட்டிமாவை
வாமென்ற முன்சொன்ன சாறதனிற்றாக்கி
வளம்பெறவே யின்னமொரு கடைசரக்குகேளு
பாமென்ற சரக்காய் பலமிரண்டாகும்
பரிவான சாதிபத்திரி பலமிரண்டே. 402

ரண்டான லவங்கப்பூ பலமிரண்டாகும்
நவிலுகிறோம் லவங்கப்பட்டை பலமொன்றாகும்
அண்டான தேவதாரம் பலமிரண்டாகும்
அடைவான கடுக்காய் பலமிரண்டாம் பாரீர்
நன்றான தேத்தாங்கொட்டை பலமிரண்டாகும்
நளினமெனு மிளகுபலந்திப்பிலியும் பலந்தான்
என்றான யேலரிசியிரண்டு பலமாகு
மென்னசொல்வோம் பரங்கிப்பட்டை யிரண்டுபலமாமே. 403

இரண்டான தும்புராஷ்டக மிரண்டுபலமாம்
இயலான தாளிசபத்திரியும் பலந்தான்
அரண்டான சுக்கதுவு மிரண்டுபலமாகும்
அருளான கருஞ்சீரக மிரண்டுபலமாகும்
நரண்டான சிறுநாகமலர் பலந்தான்ரண்டு
நலமான தான்றிக்காய் பலமிரண்டாகும்
வரண்டான வேப்பாலரிசி பலந்தான்ரண்டு
வளமான கார்கோலரிசி பலந்தான்ரண்டே. 404

தானென்ற யிவ்வகைகள் கல்லுரலிலிட்டுத்
தனதாக வொருசாம மாப்போலிடித்து
வானென்ற மாவதனை வடிகட்டிநீயும்
வளமாக முன்சொன்னசாற் றனிற்றாக்கி
மூனென்ற மூன்றுநால் ரவிதனில் வைத்து
முக்கியமா யெடுத்ததனைச் சொல்லக்கேளையா
நானென்ற செவ்விள நீரொருபடிதான் கொண்டு
நல்லபெருஞ் சட்டிதனில் நீரதனைவாரே. 405

வாரப்பா பனங்கற்கண்டு யிரண்டுசேரிட்டு
வளமான பனிநீரு நாலுபலந்தாக்கி
காரப்பா வாவினெய்யு மரைப்படிதானிட்டுக்
கருவான பிண்டக்கரு யிரண்டு பலந்தாக்கி
சேரப்பா செவ்வாழைப்பழம் பந்துரித்துத்தாக்கி
செயலான பேரீச்சம் சேர்தானிட்டு
காரப்பா கரைத்ததனை யடுப்பின் மேலேற்றிக்
கார்மேகத் தீமூட்டிக் கொதிக்கவைப்பாயே. 406

கொதிகிளம்பி நீர்வற்றும் பாகமதுகண்டு
கூராகமுன் சொன்னவகை யெல்லாந்தாக்கி
ஆதிகேளப் பிரேக செந்தூர மிருபலமிட்டு
அருளான சலாசத்துபற்ப மிருபலந்தான்
நாதிகேள் மிருதாருசிங்கி பற்பமிரு பலந்தா
னதிலிட்டுக் கெந்திபற் பலந்தானிட்டு
வாதிகேள் வாலைரசபற்ப மிருபலந்தானிட்டு
வளமான லிங்கபற்ப மிருபலந்தான்றாக்கே. 407

தாக்கக்கேளி துவெல்லா மிட்டதிற்கிளறித்
தருமான மெழுகுபத மாகும் போதையா
ஆக்ககேள தையிறக்கியா றவைத்துநீயும்
அருளான மரச்சிமிழ் தனில்மிகச் சேர்த்து
வாகக்கேள் வாலையுட பூசைதனைச் செய்து
வயித்தியந்தான் சித்திபெற லேகியத்தைத்தானும்
சேர்க்கக்கேள் லேகியத்தைப் பதனமதாய்ச்செய்து
செகந்தனிலே மனிதர்கட்குப் பித்தநோய்க் கேளே. 408

பித்தமாம் வாதபாண்டு வரச்சூலைதானும்
பிலமான பித்தசூலை சிலேட்டுமசூலை
அத்தமாம் சிலேட்டும குன்மம் பித்தகுன்மம்
அடவான வாதகுன்மம் வாதவாய்வு
நத்தமாம் பித்தவாய்வு சிலேட்டுமவாய்வு
நலமான வாதசுரம் பித்தசுரந்தானும்
வத்தமாம் சிலேட்டுமசுரம் வாதசன்னி
வளமான பித்தசன்னி சிலேட்டுமசன்னி தானே. 409

சன்னியாம் வாதத்தால் பவுத்திரமுள் மூலம்
சமர்த்தான சுகசன்னி யரோசிகங்காமாலை
சென்னியாஞ் சோகையொடு வுடகாச்சல்பிரமியம்
சீழ்மூலம் தலைக்குத்தல் வயற்றுநோவு
நன்னியாம் நாவறட்சிகுளிர் தேகயெரிவு
நளினமெனு மேகத்தால் புடைத்தழும்பு நாபிப்புண்
அன்னியாஞ் சொரிசிரங்கு அறையாப்புத் துடைவாழை
அடைவான கன்னம்புற்று முதுபிளகாமே. 410

பிளவையாங் கண்டமாலை யெரிகள்ளன் குதிக்கால்கள்ளன்
பேரானம கோதரமுதல் வெள்மேகம்
சௌவையாஞ் சீழ்மேகம் ரெத்தமேகஞ்
செயலான நீர்க்கட்டு நீர்ச்சுருக்கு
அளவையா மூஷ்ணநோய் முடக்குடன்கடிப்பு
அடவான வலிமுதலாய் வாதமெண்பத்துநான்கு
வளமையாம் வெடிசூலை குடைச்சல் பக்கசூலை
வளமான மார்புநோய் மற்றுப் போமென்றே. 411

மற்றுப்போம் பித்தநோய் நாற்பத்திரண்டு
மகத்தான சிலேட்டுமநோ யிருபத்திரண்டு
அற்றுப்போ மாத்துமாவிற் பிறந்த நோயெல்லா
அலறிவிடு மஞ்சனாதி லேகியத்தாலையா
செத்துப்போம் பிணமெழுந்து செணத்திலது பேசும்
செயலான லேகியந்தான் விராகனெடை மூன்று
வைத்துப்போம் நாளொன்றுக்கிரு வேளையாகில்
மண்டலந்தா னுண்டதனா லற்றுப்போம் நோயே. 412

போமென்ற லேகியந்தா னுண்ணும் போதையா
புகலக்கேள் பத்தியந்தான் புகழாகநாமும்
வாமென்ற மிளகாயது புளிபுகையிலை போகம்
வளமாக பூசினிக்காய்கொள் ளகத்திக்கீரை
நேமென்ற காற்றுவெய்யல் புளிமரத்தி னிழல்தான்
நேரான கள்ளிநிழல் துவரையதுகடுகு
வேமென்ற வெந்தயந்தான் விசனமது ஆண்மை
விரகமயம் கோபமது யிதுவகை தள்ளே. 413

வகையான முளைக்கீரை சிறுகீரை யரைக்கீரை
வசனித்தோம் வெங்காய முருங்கையின் பிஞ்சு
அகையான பூண்டுடனே லவங்கப்பூவு சுக்கு
அடவான திப்பிலிமிளகு புளியாரை
வெகையான வெள்ளாட் டிறைச்சி யதுவாகும்
வெற்றிலையும் பாக்குமுதல் சம்பாவரிசி சாதம்
வகையான வறுத்து வுப்பு சகலத்துக்கு மாகு
மச்சவகை யதீதமெல்லாம் வகுத்து நீதள்ளு. 414

வகுத்துப்பார் பாசிப் பயறதுவு மாகும்
வளமான வாவிணெய் யாவின்பாலாம்
வெகுத்துப்பார் வெண்ணை யொடு தயிர்மோர் தள்ளு
விசிதமுள்ள பாவற்காய் பீர்க்கன்கா யாகும்
வகுத்துப்பார் கத்திரிக்காய் புடலைசுரை தள்ளு
கருணையோ டவரைக்காய் தேங்கா யதுவாகும்
மகுத்துப்பார் மணித்தக்காளி வற்றலது வாகு
மகத்தான தூதுவளை வற்றலது வாமே. 415

வைத்தலெனு மஞ்சனாதி லேகியத்துக் காக
வசனித்தோம் பத்தியந்தான் வயித்தியரே கேளும்
அத்தலெனு மிம்முறையை யார்க்கும் வெளியிடாதே
யரகரா வெளிவிட்டா லண்டயிடி யிடிக்கும்
சுத்த பரிசுத்தமாய்ச் சுயம்பெறவே சொன்னோஞ்
சுருதிமுடி வானதிந்த லேகியந்தானையா
கைத்ததனாற் கல்வியது கற்கவேணுங்
காசினியில் மனிதருக்கு நோய்தீர்த்திடீரே. 416

தீராத நோய்களெல்லாந் தீர்த்திடலா மிதனால்
தேகமெல்லா மாதளம்பூ நிறமது வாகும்
ஆறாத புண்புரைக ளாறிவிடு மிதனால்
அலறிவிடும் விஷுங்கள் முதலாயிசு நூறாகும்

மாறாத செகமதிலே பண்டிதர்கள் பிழைக்க
மகத்தான லேகியத்தை வகுத்துரைத்தோ
நாமும் தேராத பேர்க ளின்னூல் பார்த்திடா ராகில்
செல்வ பூபதிபோலச் செடம் வாழ்வதலாமே. 417

செடமான தொண்ணூற்றாற் கருவிகரணாதி
க்ஷெணத்திலே கட்டுமப்பா அஞ்சனாதி லேகியம்
கெடமான செடமழியா திந்தமுறை செய்தால்
கெவுனியெனு மெய்ஞ்ஞானி கெணிதம தாவார்
சடமான தேகமது வெகுகால மிருக்குஞ்
சாயுச்சிய பதவியிலே சார்ந்துமிக வாழ்வார்
நடமாடுந் தில்லைச் சிதம்பர சித்தியாகும்
நாற்பத்து முக்கோணம் வாலைசித்தியாமே. 418

மேகராசாங்க யெண்ணை

வாலை மேக ராசாங்க யெண்ணை கேளு
வசனிப்போம் சகலநோய்க் கர்மவினை தீர்
ஆலையாம் அத்திப்பட்டை பஞ்ச பலமும்
அடவான வாடாதோடை வேரு பலமஞ்சு
நாலையமுக் கத்தாரி பட்டை பலமஞ்சு
நலமான மிளகரணைப் பட்டை பலமஞ்சு
காலையாம் வெண்காக் கணம்வேரு பலமஞ்சு
கருவான சின்னிவேரு பலமஞ்சே. 419

அஞ்சான சிறுசின்னி வேறு பலமஞ்சு
அடவான ஆவாரைப் பட்டை பலமஞ்சு
நஞ்சான வவுரிவே ரஞ்சுபலமாகும்
நளினமெனுஞ் செந்நாயுருவி வேறு பலமஞ்சு
பிஞ்சான தூதுவளை வேருபலமஞ்சு
பெலமான வமுக்கரா வேரு பலமஞ்சு
மஞ்சான நன்னாரி வேருபலமஞ்சு
மணத்தக்காளி வேரு பல மஞ்சதாமே. 420

அஞ்சென்ற முசுமுசுக்கை வேருபலமஞ்சு
அருளான நிலத்துளசி வேருபலமஞ்சு
செஞ்சென்ற சிவனார் வேம்பு வேறுபலமஞ்சு
சிவதையுட வேறுபல மஞ்சுமாகும்
வஞ்சென்ற முள்ளிவேரு பலமஞ்சுமாகும்
வளமான மேனியுட வேருபலமஞ்சு
நஞ்சென்ற நெருஞ்சியுட வேருபலமஞ்சு
நளினமெனும் விஷ்ணுகிராந்தி வேருபலமஞ்சே. 421

வேரான கெருடனுட கிழங்கு பலமஞ்சு
விசிதமா மெருகினுட கிழங்கு பலமஞ்சு
நீரான நீர்ச்சேம்பு கிழங்குபல மஞ்சு
நிலவேம்பு வேறுபல மஞ்சதாகும்
நாரான நந்தியா வட்டம் வேறு பலமஞ்சு
நலமான வட்டக் கிலுகிலுப்பை வேறுபலமஞ்சு
ஆர்ரான வேளை வேரஞ்சு பலமாகும்
அருளான வெள்ளைச்சாற் வலைவேர்பல மஞ்சே. 422

மஞ்செனவும் புனல்முருங்கை வேருபலமஞ்சு
மகத்தான வெள்ளறுகு வேருபல மஞ்சு
நெஞ்செனவும் நிலப்பனை வேரஞ்சு பலமாகும்
நிலையான தும்பை வேரஞ்சு பலமாகும்
வெஞ்சனவு மருக்காரை வேரு பலமஞ்சு
விளங்குஞ் சித்திரமூலம் வேரஞ்சு பலமாகும்
அஞ்செனவும் வன்னிப்பட்டை யஞ்சுபலமாகும்
அருளான வேர்வகையி னதீதமது வாமே. 423

அதீதமெனும் லவங்கப்பூ அரைப்பலந் தானாகும்
அடவான சாதிக்கா யிருபலந் தானாகும்
வதீதமெனும் வால்மிளகு வொருபலந் தானாகும்
வளமான சுக்கதுவு மூன்று பலமாகும்
சதீதமெனுஞ் சாதிபத்திரி யிருபலந்தா னாகுஞ்
சமர்த்தான தான்றிக்காய் யிருபலந் தானாகும்
தெதீதமெனும் பெருஞ்சீரக மூன்றுபல மாகுந்
தெளிவான கருக்கா யிருபலந்தா னென்றே. 424

என்றான விருசீரக மூன்றுபல மாகு
மியலான பரங்கிபட்டை மூன்று பலமாகும்
நன்றான மிளகொரு பலந்தானாகும்
நலமான தாளிசப்பத்திரி யிருபலந்தான்
அன்றான லவங்கப்பட்டை மூன்றுபல மாகும்
அடவான சிறுநாகப்பூ வோர் பலந்தான்
வன்றான யிவ்வகைகள் முன்சொன்ன வகைகள்
வளமான விதமெல்லாங் கல்லுரலிற் றாக்கே. 425

தாக்கியே யிடித்ததனைப் பாண்டத்தி லிட்டுத்
தருவான நல்லசலம் படியெட்டு தாக்கி
மூக்கியே மூன்றுநாள் ரவிதனிலே வைத்து
மூதண்ட மாகவே யிளநீர்படி மூன்று

சேக்கியே சித்தாமணக் கெண்ணைபடி யஞ்சு
செயலான கற்றாழைச் சாறுபடி யொன்று
நாக்கியே தாழையிடச் சாறுபடி யொன்று
நளினமெனும் பெருவாயன் பால்படி யொன்றே. 426

ஒன்றான யிவ்வகைகள் பாண்டமதிற் றாக்கி
ஓகோகோ வடுப்பேற்றி வன்னிதனை மூட்டி
நன்றான சாமமது நாலுகொண் டையா
நலமான வக்கினி கொண்டெரித்திடு வாயாகில்
அண்டான நீரெல்லாம் வற்றியது போகும்
அரகரா யெண்ணையது பசுமைநிறம் போலாம்
வண்டான அதுபாகங் கண்டீராகில்
மகத்தான பாண்டமதை யிறக்கி யாறவையே. 427

ஆறவைத் தெண்ணையைத் தான் வடிகட்டி நீயும்
அருளாக வேறுமொரு பாண்டமதிற் றாக்கி
வாறவைத்துக் கணேசனுட பூசையது செய்து
வாலையுட பூசைசெய்து வைரவத்தின் பூசை
சாறவைத்துப் பண்டிதத்தி னெண்ணையெனப் பணிந்து
சகலசித்தி பெருவதற்கு அகஸ்தியர் பூசைசெய்து
சேரவைத்து மேகராசாங்க யெண்ணை யிதுதான்
செகந்தனிலே மணிதருக்குக காமநோய்தீரே. 428

தீராத மேகமெல்லாந் தீர்ந்து போகுஞ்
சிலந்தி யரையாப்பு முதல்தீர்ந்துதான் போகும்
வாராது யிந்தயெண்ணை மண்டலந் தானையா
மைந்தனே யொருகரண்டி யுண்டாராகில்
ஆறாத புண்புரைக ளாறியது போகும்
அஸ்திலுள்ள நோயலா மாறிவிடுகும் பாரு
ஏறாது கடிவிஷங்கள் சூலை குன்ம மாகில்
யிறந்துவிடுங் குட்டமொடு பாண்டதுவும் போமே. 429

போமென்ற சன்னிபதின் மூன்றுமது போகும்
புகழான காசமொடு வலிகடுப்புப் போகும்
நாமென்ற சுரம்போகு மரோசிகம் போகும்
நாவுரட்சி யெரிவுநீர்க் கட்டது போகும்
வாமென்ற மேகத்தால் வந்தநோயெல்லா
மலறிவிடு முடலைவிட் டோடிப் போகும்
ஆமென்ற யிந்தயெண்ணை மூலிகையிற் செய்தோம்
அறிவுள்ள பண்டிதர்க ளறிந்துசெய் வாரே. 430

செய்யலாம் பண்டிதற்குக் கிந்தியது வேணுந்
தீட்சையொடு தேவதைகள் வசியமது வேணும்
மையலா மாந்திரீகந் தருவதுதான் வேணும்
வாதியென்றால் முப்பூவை யவரறிய வேணும்
வையலரம் மனுஷ்டானஞ் செபத்தியானம் வேணும்
மகத்தான பெரியோர்கள் கேள்வியது வேணும்
நயலான செயபாகங் கைபாகம் வேணும்
நாற்பத்து முக்கோணஞ் சித்திவேணும் பாரே. 431

சித்தியெனுஞ் சிதம்பரத்தின் பூசைவேணுஞ்
சித்தருட மூலமெல்லா தெளிவறியவேணும்
பத்தர்மெஞ் ஞானியுடன் தொண்டு பண்ணவேணும்
பஞ்சபூதக் கருவைப் பயனறிய வேணும்
முத்தியெனு மும்முறையை யறிந்து செய்தாரானா
லுலகமதில் வாதிமகன் வயித்திய னாவர்
புத்தியெனுஞ் சிவயோகி புகலுவாரையா
புகழான நூல்களுட கருவறிவார் தானே. 432

வாரான விந்நூலில் சொன்னதெல்லாங் குருதான்
வசனித்த பலத்திரட்டின் முறையெவர்தா னறிவார்
ஆரான கருவாளி யரிதரிது கேளும்
அடைவான மேக ராசாங்க யெண்ணை சொன்னோம்
வேரான புலத்தியனே முன்சொன்ன பத்தியம்
விதப்படிக்குத் தவறாதே முறையறிந்து செய்வாய்
காரான இம்முறையில் கடுகளவதாக
கலக்கமதெய்துங் கானோம் தீராதென்றே. 433

இராமபாணக்குளிகை- நாபிசுத்தி

என்றான புத்தியுள்ள புலத்தியனே கேளும்
இயம்புவோம் ராமபாணக் குளிகைதனைச் சொல்வோம்
நன்றான நாபியது யிருபலந்தான் வாங்கி
நலமான மிளகதுதா னரைப்பலந்தான் கொண்டு
அன்றான வமுறிதனில் மிளகரைத்துக் கலக்கி
அதிலூற்றி நாபிதனைச் சாமமது தாக்கி
மென்றான நாபியுட விஷமதுதான் போச்சு
விளங்கினோ மதித்ததிது விசிதமாமே. 434

பாஷாணசுத்தி

விசிதமாம் பாஷாண மிருபலந்தான் வாங்கி
விளங்கவே சுக்கதுதா னொரு பலமரைத்து
அசிதமா மமுரிதனிற் சுக்கதனைக் கலக்கி
யதிலூறப் பாஷாண மொருசாமம் வைத்தால்

வசிதமா மதனுடைய விஷமது போச்சு
வேதாந்த சாரமதால் விளம்பினோ நாமும்
நசிதமா மதித சுத்தியாகுஞ் சொல்லார்கள்
நாம்சொன்னோம் மிவ்விரச மிருபலந்தான் வாங்கே. 435

வாங்குவாய் திப்பிலி தானிரண்டு பலங்கொண்டு
வளமாக வரைத்ததனை யமுரிதனிற் கலக்கி
ஓங்குவா யொருசாம மதிலூர வைத்தால்
ஓகோகோ வதனுடைய விஷமதுதான் போச்சு
நாங்குவாய் சாதிலிங்க மிரண்டு பலம் வாங்கி
நலமான விரண்டுபலங் கடுக்காயை யரைத்து
ஆங்குவா யமுரிதனில் கரைத்தனை ஐயா
அதிலூறச் சாதிலிங்க மொருசாமந் தாக்கு. 436

தாக்குவாய் சாதிலிங்க மதிற்சுத்தி யாச்சு
தருவான லிங்கமதின் விஷமதுதான் போச்சு
ஆக்குவாய் கெந்தியது யிரண்டுபலம் வாங்கி
யடவாகப் புளியம்பட்டை யிரண்டுபல மரைத்து
மாக்குவா யமுரிதனி லதனையே கரைத்து
மகத்தான கெந்தியூர வொருசாமம் வைத்தால்
சாக்குவர யதீதசுத்த யிதற் கெதிர்தா னுண்டோ
சமர்த்தான சேந்தியதின் விஷமதுதான் போச்சே. 437

போச்சென்ற மிருதாற் சிங்கி பலமிரண்டு
புகழான மாம்பட்டை யிரண்டுபலங் கொண்டு
ஆச்சென்ற வரைத்தனை யமுரிதனிற் கலக்கி
யடைவான மிறுதாறு சிங்கியதிற் றாக்கி
ஓச்சென்ற வொருசாம மூறவைத்தாலையா
ஓகோகோ வதீதசுத்தி யுறுதியது வாகும்
வாச்சென்ற மிறுதாற்சிங்கி விஷமதுதான் போச்சு
வசனித்தோந் தாளகந்தா னிருபலம் வாங்கே. 438

வாங்குவாய் பூவானப் பட்டைபல மிரண்டு
வளமாக வரைத்ததனை யமுரிதனிற் கலக்கி
தாங்குவாய் தாளகத்தை யிதிலூறச் சாமம்
தருவாக வேதையென்றா லதிதசுத்தி யாச்சு
நாங்குவாய் தாளகத்தின் விஷமதுதான் போச்சு
நலமாகச் சுத்திசெய்த சரக்கெல்லா மெடுத்து
காங்குவாய் கல்வமதி லிவ்வகைகயைத் தாக்கிக்
கருணைபெறு மிளகரைப் பலமதுதான் றாக்கே. 439

அரையான திப்பிலிதா னரைப்பலமிட்டு
அடவான சுக்கது தானரைப்பல மிட்டு
வரையான லவங்கப்பூ அரைப்பலந் தானிட்டு
வளமான சாதிக்கா யரைபலந் தானிட்டு
குறையான கோரோசனை யரைப்பலந் தானிட்டு
குருகுருவான காயம் பலமரை பலமிட்டு
முறையான மூக்கரைச்சார் பலமுமெட்டு
முக்கியமா யாட்டிடு வாயிருசாமந்தானே. 440

சாபமெனு முசுக்கையிட சாறுபலமெட்டு
சமர்த்தாக வொருசாமஞ் சாடிடுவாய் நீயும்
நாமெனு மேனிச்சாற் நாலுபலமாகில்
நன்னாரி சாறுபலமிதுரண்டு மெட்டு பலந்தான்
வாமெனும் விட்டொரு சாமமது சாடு
வளமான சித்திரமூலி சாறுபலமாறு
வேமமெனும் விட்டதி லொருசாமம் சாடு
வில்வபத்திரி யிலைசா றெட்டுபலந் தாக்கே. 441

எட்டான வொருசாமம் ஆட்டிடுவா யதனால்
இயலான சிவகரந்தைச் சாறுபலம்நாலு
வெட்டான விஷ்ணுகிராந்தி சாறுபலம்நாலு
விளங்கவே யொருசாமம் விட்டாட்டுவாய்நீ
அட்டான வாடாதோடைச் சாறுபலமெட்டு
அதிலிட்டு வொருசாம மடவாகச் சாடு
நெட்டான நெருஞ்சிச் சாறெட்டு பலமிட்டு
நேராக வொருசாமஞ் சாடிடுவாய் நீயே. 442

சாடிடுவாய் சங்கஞ்சா றெட்டுபலந் தாக்கிச்
சமர்த்தாக வொருசாமஞ் சார்வாக ஆட்டு
ஆடிடுவாய் கருநொச்சி யிலைசாற் பலமெட்டு
அதிலிட்டுத் தாக்கிடுவா யொருசாமந்தானும்
நாடிடுவாய் நாதவிந்து யிருபலந்தா னிட்டு
நலமான பனிநீரு யிரண்டுபலந் தாக்கி
பாடிடுமாய் மாக்கருதான் காற்பலந்தாக்கிப்
பரிவான வெடியுப்புத் திராவக மிருபலமே. 443

இருவான யிந்துப்புச் செயநீர் பலமிரண்டு
யிதுவகைக ளதீதமெல்லா மிருசாம மாட்டி
அருவான மெழுகது போலாகு பதம்பார்த்து
அதைவழித்துக் குன்றியிடை குளியாச் செய்து

பருவான ரவிதனிலே கற்போலதை யுலர்த்திப்
பன்மைபெறுஞ் செப்பதனிற் பதனமதாய்ச்செய்து
நருவான நாற்பத்து முக்கோண பூசைசெய்து
ராமபாணக் குளிகைதனைப் பணிந்திடுவாய் தானே. 444

பணிந்திடுவாய் வைரவத்தின் பூசைதனைச் செய்து
பண்புடைய பண்டிதந்தான் பலிக்கச் சித்திபெறவே
அணிந்த றுபணிந்து நீலோகமணி காக்கு
அவரவர்தான் செய்யுங் கருமமற்றுப் போவதாக
சணித்து சன்னியதீத மதுபதின் மூன்றுபோகச்
சாடுவாய் ராமபாணக் குளிகை குன்றில்கடுகு
நணிந்துமுலைப் பாலதி லுரைத்து வுள்ளுக்கீந்தால்
நாடாது சன்னியெல்லாம் நாம்சொன்னோம் பாரே. 445

பாரப்பா புலத்தியனே ஐந்து நாளாகில்
பரிவான சன்னியது பறந்தோடு மாகில்
ஆரப்பா வறிவார்கள் ராமபாணக் குளிகை
அறுபத்து நான்கு சுர மங்கமதை விட்டு
தேரப்பா ஓடிவிடுத் சுக்குச்சாற் தன்னில்
தெளிவான குளிகையதில் கடுகள வுரைத்து
நாரப்பா நாவுபடா தஞ்சு வேளை யுண்டால்
நாடாது சுரமறுபத்து நான்கும் போமே. 446

போமென்ற புலத்தியனே மகராசயோகி
புண்ணியவா னுனைப்போலார் பூதலத்திலுண்டோ
நாமென்ற ராமபாணக் குளிகைதனைச் சொன்னோம்
நவிலுவோம் பத்தியந்தா னளினமதாய் கேளும்
வாமென்ற வறுத்தவுப்பு இஞ்சிச்சாறாகில்
வளமான பீர்க்கன்காய் வண்டக்காயாகும்
நாமென்ற துவரையது நளினமது வாகும்
நலமான புளிபுகை புளிபோகமது தள்ளே. 447

மதுவான செகமதிலே சிவயோகி அரிது
மாணாக்காள் மனிதசென்மம் பிறப்பதரிது
வதுவான மனிதனாய் பிறந்தாலென்ன
மகராசு யோகவான் முறையுள்ள பேர்கள்
அதுவான வமீசையது இருந்ததனா லென்ன
அண்ணுவிந்து சென்மக்கூ றறியும் பெரியோர்கள்
செதுவான சிவயோகி செகமதிலே பிறந்தாற்
சித்தரென்று பேர்வருங்காண் சேதியிது காணே. 448

காணப்பா புலத்தியனே கல்விமாணானால்
கலைக்கியானம் பூர்வக்கியானந் தத்துவந் தொண்ணூற்றாறு
பாணப்பா பலகலைகள் வேதாந்த சாரம்
படித்திடு வரானால் வேத மாறு சாஸ்திரந்தான்
ஆணப்பா அஞ்சாண்டு வயதுக்குள் ளாகில்
அறுபத்து நாலு கலையறி யும்வராகில்
தேனப்பா சித்தரவரமுத மூட்டுவார் பார்
சித்திக்குஞ் செய்தொழில்கள் செய்பாகமென்றே. 449

சித்திக்க வயணமொன்று செப்பக் கேளையா
திசைதீட்சை செபத்தியான மனுஷ்டான முதலாய்
அத்தித்த அவரறிவால் மவுனகுரு சொல்வா
ரட்டமா சித்துவிளை யாடவவரவர் சொல்வார்
முத்திபெறப் பசுபதியும் பாசமுதல் சொல்வார்
மூதண்ட வாறுவரை யதிசயமுஞ் சொல்வார்
வத்திக்க வாதமொடு வயித்தியமுஞ் சொல்வார்
மவுனக் கியான மறிய வசனிப்பார் தானே. 450

வசனிப்பா ரசக்குளிகை கெவுனமுதற் சொல்வார்
வாசி யொடுங்குத்தலம் வழிதுறைகள் சொல்வார்
அசனிப்பார் கற்பமுதற் கனயோகஞ் சொல்வா
ரறுபத்து நாலுசித்து மறியவகை சொல்வார்
நசனிப்பார் நால்வாசல் பாதைக்குறி சொல்வார்
நளினமெனு மாதாரம் நிராதாரஞ் சொல்வார்
துசனிப்பா மவுனகுரு பீடமதறியத் துதிசெய்வார்
மெய்ஞ்ஞான மதியறியத் தானே. 451

பதியான மூலாதார சுவாதிட்டான மாகில்
பதிந்த பிறை மணிபூரக மநாந்தம் விசுத்தி
அதியான வாக்கினையோ டாதாரமாகி
லறியவிதின் பாதைவழி யருளுவாராகில்
நதியான தேவாலயந் தானாகுஞ் சித்தியாகும்
நாதாந்தப் பரசபைகள் பஞ்சபூத வாழ்க்கை
விதியான விட்டமுறை தொட்டமுறை யாகில்
விதிக்குங்காண் சாகாத கல்வி பெற்றோர்க்கே. 452

பெற்றாத காலமெய்ஞ் ஞானக் கல்வி பெறவேணும்
பேரின்ப சாத்திரத்தின் பயனறிய வேணும்
சுத்தபரி சுத்தமதாற் சுழிகான வேணுஞ்
சுழிமுனையில் கண்ணோட்டஞ் சுருதி பெறவேணும்

கைத்தாக்கா லதுநீயந் துரியாதிதமாகில்
கண்ணாடி யொளிவதனைக் காணுவீராகில்
நித்தஞ் சிவயோக பூபதிபோல் வாழலாம்பார்
நிரஞ்சனமாம் பூரணத்தி னேர்மைதனைப் பார். 453

நேர்தெரியச் சாத்திரத்தின் கருவதனைக் காணு
நிராமயம் போல் வாசிதனில் நிலைக்குருவைக் காணு
பேர்தெரிய வைம்பூதப் பேரொளிவைக் காணு
பேசாத வூமையெனு மெழுத்ததனைக் காணு
கூற்றியத் தத்துவத்தின் கருவதனைக் காணு
கூண்டுவிட்டு கூண்டுபாயும் குறிதனையே காணும்
வாற்றியப் பலதிரட்டைந்நூ றிந்நூல் பீடம்
வசனித்தோ மகத்தியன் வாக்கமுத மாமே. 454

அமிர்தமா மாயிரத் தறுநூறு சொன்னோ
மருளினோஞ் சௌமிய சாகர பீடமாகில்
வமிர்தமா மந்நூலின் கருக்களெல்லா
மறிந்து வசனித்தோம் பலதிரட்டைந் நூறிதுவாகில்
திமிர்தமாந் தில்லைச் சிதம்பர மகிமை யறிந்தால்
திருவுரு வினறிவதனைத் திறங்காணலாம் பார்
மமிர்தமாம் பதினெண்பேர் சித்தரவர் மகிழ
வசனித்தோம் பஞ்சகாவியந் தன்னைப் பாரே. 455

பஞ்சமெனுப் பிருதிவியோ டப்பு தேயுவாகில்
பரிவான வாய்வு ஆகாசத் தோடஞ்சும்
அஞ்சலெனு மணியணியாம் வாசியதை பூட்டி
அய்ப்பாச சீலைகண்டு அறிந்திடுவீ ராகில்
நெஞ்சமெனு மோரறிவு வுறுதிபடு மாகில்
நிலையாத நெஞ்சகத்தை நிலைகாணலாம் பார்
சஞ்சல மெனுஞ்சமுசாரச் சரிதை விடாதையா
சாதித்தாற் கிரிகையது க்ஷணத்திற் சித்தியாமே. 456

சடமான செடமழியா யாண்டு நூறிருந்தாற்
சறிதை சித்தித்துக் கெடஞ் சித்திதவஞ் சித்தியாகும்
கெடமான வுயிரிருந்தால் கிரிகைசித்தி யாகுங்
கெவுனமடா யோகத்தி ஞான சித்தியாகும்
திடமான நல்வினைக்கே பரகெதி தானாவார்
சிவயோக சித்தியது வாய்க்கும் வராகில்
வடமான வாசியது கற்பத்தால் வசியம்
வச்சிரம்போல் தேகமதாய் வாழ்வார்தானே. 457

வாழ்வென்றாற் சித்தர் சொன்ன நூலதனைப்பாரு
வையகத் தாசையெல்லாம் மப்புறத்தே தள்ளு
ஆழ்வென்றால் வஞ்சியர்தன் வலைக்கு ளகப்பட்டால்
அழிந்துவிடு முன்தேகம் நொந்துவிடு மையா
பாழ்வென்றால் பாழிலே விந்தழிந்து போனால்
பலனெல்லாங் குன்றி விடும் படுகாயமாகில்
மாழ்வென்றா லாணவமாய் கைகாயமியத்தைத் தள்ளு
மவுனநிலை மறவாதே மனவுறுதி காணே. 458

மனவுறுதியாக் கெய்து மொருவாக் கெய்து
மாநிலத்திற் கோடியி லொரு வருண்டு
கனவுறுதி யவர்க் கெய்துங் கனயோகசாலி
கனகமடார் வவதேக மவுன மெய்ஞ்ஞானி
மனவுறுதி யிடமாய்கை யேவலொடு பொருள்தான்
வசனித்தோ மூன்றாசை மறப்பார் சிவயோகி
அனவுறுதி யவரல்லோ செடமழியா திருப்பா
ராயுசைத்தான் மிகவளர்த்தி யருளு காண்பாரே. 459

காண்பதற்கு வேதாந்தக் கல்வியறிந் தோர்கள்
காயாதி லேகியந்தா னுண்டு தேறுவார்கள்
ஊணப்பா வுலகத்தோ டுறவாகா ரையா
உத்தமரோ டவர்சேர்ந்து வுறுதி யறிவார்காண்
வீண்பாதனாற் சாத்திரத்தின் கருவறிந்தோ மென்று
வெகுபேர்கள் வேடமிட்டு விசிதமாய் திரிவார்
ஆண்பதற்கு அவருறவு அடுத்துழல வேண்டா
மரகரா சுடுபிணத்தை யகலத் தள்ளுவாயே. 460

தள்ளுவாய் வீண்பரிட தபோபலத்தை யறிந்து
தபசியெனும் பெரியோர்கள் தன்னியமதைக் கண்டு
அள்ளுவா யவரிடமே பனிரண்டாண்டு மட்டு
மவர்க்கடிமை தொண்டனுக்குத் தொண்டனாய் நீயும்
நள்ளுவாய் சர்வாசைப் பொருளதனை விட்டு
நமஸ்கரிப்பா யவருடைய கமலபதந் தன்னில்
விள்ளுவா ருன்னுடைய விசிதமதைக் கண்டு
விளம்புவர் சகலகலைக் கியானமெல்லாந் தானே. 461

விளங்குவார் பெரியோர்க ளுனதுகுறி கண்டு
விட்டிடமுந் தொட்டிடடும் விபரமாய்ச் சொல்வார்
புளங்குவார் புலத்தியனே மகராசயோகி
புண்ணயசாலி விவேகியடா பூபதியே கேளும்
அளங்குவா ரகத்தியனென்று வெகு பெருமை பெற்றோ
மண்ட சராசரங்களிட வதீதமெலாங் கண்டோம்
களங்குவார் நாதாந்த பேரொளியைக் கண்டு
நவகோடி யுகாந்திரங்கள் வாழ்ந்தோமே. 462

ரசமணி

திறமான செபங்க ளெல்லாஞ் சித்தியாவதற்குச்
செப்புவோ ரசமணிதான் செயலாக நாமும்
வறமான கடைரசந்தா னஞ்சுபலம் வாங்கி
வசனித்தோம் கல்வமதில் ரசமதனைத் தாக்கி
அலமான செங்கற்றூள் மூன்று பலமிட்டு
அமுறிவிட் டொருசாம மரைத்தீரே யாகில்
கறமான செமுமையது வானம் போலாகுங்
கருணைபெற வழித்ததனைச் சட்டிதனிற் றாக்கே.463

தனியான ரண்டுபடி சலமதனை விட்டுத்
தருவாகக் கரைத்ததனைத் தெளிய வைத்தீராகில்
அனியான களிம்பெல்லா மதனடியி லிறங்கு
மரகரா ரசமதுதான் வெண்ணெய்போல் மிதக்கும்
நணியான வெண்ணெய்தனை எடுத்துநீ ஐயா
நலமாக கல்வமதில் நளினமதாக்கு
வனியான கற்பூர வள்ளிச்சாறு நாலுபலம் விட்டு
வளமாக வொருசாம மாட்டிடுவாய்ப் பாரே. 464

பாரப்பா புலத்தியனே மேனிச்சாற் பலமூன்றிட்டுப்
பரிவாக ஒருசாம மாட்டியதை வழித்து
ஆரப்பா சட்டிதனி லமுரிபடி ரண்டு
அதில்தாக்கிக் கரைத்ததனைத் தெளியவைத்தீ ராகில்
வாரப்பா ரசமதுவின் களிம்பெல்லாம் போகு
மதை எடுத்துக் கல்வமதில் தாக்கி ஒருசாமம்
நாரப்பா நாதமது மூன்று பலமிட்டு
நலமாக ஆட்டியதை யமுரிதனிற் கரையே. 465

கரைத்ததனைத் தெளியவைத்து வெண்ணெய்தனை எடுத்து
கருட்சிமான வதை கல்வமதி லிட்டு
வெரைத்ததனை வெண்கருவு விட்டத்திற்றாக்கி
விளங்கவே மெழுகுப்போல யரைத்ததனை வழித்து
முரைத்ததனை மூசையது செய்துநீ ரைய
முக்யமாய் ரவிகாய வைத்திதனை எடுத்து
அரைத்ததனை ரசமதனை யதற்குள்ளே தாக்கி
அவுரிச்சாற் மூன்றுபல மதற்குள்ளேவாரே. 466

வாரப்பா மாக்கருதான் குன்றியதில் தாக்கி
மகத்தான வுலைக்களத்தில் வைத்தாகி னாக்கால்
ஊரப்பா வுருகுமது வாலை மணியையா
ஒ கோவிறக்கி மணிபதினாற செய்து

வேரப்பா வெண்கருவி லூறவைப்பாய் சாமம்
விளங்கவே வைத்தீரென்றால் கற்போலக் கட்டும் பாரு
ஆரப்பா வறிவார்கள் வெகுசூட்ச மிதுதான்
அறிவுள்ள பால்கைபாக மென்றேன். 467

என்றான விதுசூட்ச மிந்நூலிற் சொன்னோ
மியம்பினோன் பலதிரட் டற்நூரி துவாங்கி
அன்றான கருவறிந்தா லெல்லா மெய்தும்பாரு
அட்டமா சித்தமுத லாடுமணியாலே
சென்றான செபங்க ளெல்லாஞ் சித்திக்கும்பாரு
செகமசிய மாகுமடா லோகவசியந்தான்
தென்றான தெய்வங்கள் வசியமது வாகுஞ்
செகசால வித்தையெல்லாம் செணத்தி லாடுவாயே. 468

ஆடுதற்கு வாதிஎன்றால் ரசமணிதான் செய்து
அடைவான சூதமதை அடக்கி நீராகில்
தேடுதற்கு ரசமதுதான் கட்டுண்டு போனால்
தேவநீ மனிதனல்ல சித்தனடா நீயும்
நாடுதற்கு ரசமணியால் மந்திர சித்தியாகும்
ஞானசித்தி மவுனசித்தி யோகசித்தியாகும்
வாடவே வேண்டாங் காண்வாசி சித்தியாகும்
வாதமொடு வயித்தியம் காயசித்தி யாமே. 469

சித்தியது ஆவதற்குப் பிண்டசித்தி வேணுஞ்
செயலாக வதன்பிறகு தேகசித்தி வேணும்
முத்தியது அறிவதற்கு முன்னோற் சித்திவேணும்
மூதண்ட சற்பசித்தி யோகசித்தி வேணும்
சத்திப் பிரசன்னமதாய்ச் சித்தியது வேணும்
சாத்திரத்தின் குருவறியக் கருசித்தி வேணும்
நித்திய சிவபூசை மணிமந்திரம் வேணும்
நேரான மனவுறுதி நிலைக்கவேணும் பாரே. 470

பாரப்பா கருவறிவோ ராருமில்லை பாரும்
பாரினி லொருவனுண்டு சிவயோகி யறிவான்
மாறப்பா மற்றொருவ ரறியார் மக்காள் பாரு
மகத்தான பெரியோர்கள் வசனித்த மொழிதான்
ஆரப்பா இந்நூலைப் பதனமதாய் வைத்து
ஆருக்கும் வெளிவிடா தரிதான நூலை
தேரப்பா தெளிந்தபண் போர்கருவறியச் சொன்னார்
தேராத பேர்களெல்லாந் தேரலாம் மிந்நூலே. 471

ஈடறியவும்

பேரான வின்னமொரு கருவதனைக் கேளும்
பேசுகிறோ மீடொன்று பேணிப்பா ருண்மை
வாரான காந்தமது ஒருபலந்தான் வாங்கி
வளமாகச் சுத்தி செய்து காந்தமதை எடுத்து
நேரான நின்றுசிணுங்கி பலமொன்று வாங்கி
நீரிலொட்டி ஓர் பலந்தான் கூடவதில் சேர்த்து
ஆறான ஆடையதி னொட்டிபல மொன்று
அடைவான சுழல்வண்டதுவும் பலமாமே. 472

மாமென்ற அட்டைஒரு பலந்தான் வாங்கி
மகத்தான விந்திரகோபம் பலமொன்று வாங்கி
தூமென்ற தூக்கணங் குருவிப்பிச்சுஞ் சேர்த்துத்
துதிபெறவே கையெல்லாம் கல்வமதிற்றாக்கி
ஆமென்ற கோயிற்புறா அண்டவித்திட
ஆட்டிடாய் ஒருசாம மதன்பிறகு கேளு
நாமென்ற நாதபலம் விட்டொருசாமம்
நாட்டுவாய் மவுனவிந்து ஒருபலந்தான் றாக்கே. 473

தாக்கியே மெழுகதுபோ லாட்டிவழித்தெடுத்துந்
தருவான குன்றிவிடை குளிகைமிகச் செய்து
ஆக்கியே நிழலுலர்த்திச் செப்புதனி லிட்டு
அம்பாள் சவுந்தரியினி பூசை செய்து
வாக்கிலே நின்றாடு மானதாம் மென்றும்
வாலையிட மூலத்தில் நூற்றெட் டோதி
போக்கிலே யிவ்வீடு பிறசன்னித்தி
புகலவரம் தருமம் பாளென்று பணிந்திடீரே. 474

பணிந்திட்டு இடுமருந்தில் குன்றிடை வாங்கி
பார்தனிலே புருடருக்கும் ஸ்திரீகளுக்கு மாகில்
பெணிந்திட்டுப் பெண்களுக்கு விந்திலுரைத்திடுவாய்
போராக வசியமெனக் கூறிவகையில் தாக்கு
நணிந்திட்டு நாயகி மாருன்பிறகே தொடர்வார்
நாள்தோறு முன்னைவிட்டுப் பிரியா ரவர்பாரும்
புணிந்திட்டுப் புருடருக்கு வசியவகை கேளு
புகழான பெண்கள் செய்யும் பெருமைதனைக்கேளே. 475

பெருமையெனு யிடுமருந்தில் குன்றியிடை வாங்கிப்
பேரான பசுநெய்யி லுரைத்ததனை யையா
அருமையெனு நாதமதில் காற்கழஞ்சு தாக்கு
அருள் பெறவே சுண்ணமதில் புருடருக் கீய்ந்தால்

முருமையெனு முன்னைவிட்டுப் பிரியாரவ ராகில்
முக்கியமாய் வெகுகாலம் வசியமவராகில்
வருமை ஒரு காலமுந்தான் வராதிது பாரீர்
வளமான ராசருக்குஞ் செய்யும் வகை தானே. 476

வகையான வுனைவணங்கா ஸ்திரீகளுக்கெல்லாம்
வசனிப்போம் விந்ததுவுங் குன்றியிடை எடுத்து
அகையான இடுமருந்தி லரைக்குன்றி யுரைத்து
அருளான கறுப்பு வெற்றிலை மீதிற்றடவி
பகையான பாக்குடனே லவங்கங்கத் திரித்து
பட்டியதாய்த் தான்கட்டிப் பதைத்த ஸ்திரீகளுக்கு
நகையான சந்தியான வேளையதுவாகில்
நாயகிக்குக் கொடுத்திடவே நல்வசியமாமே. 477

வசியமாம் ஸ்திரீகளுக்கு அதீதவீடிதுதான்
வருஷிப்பார் கேட்டதெல்லாம் வசனிப்பாரையா
அசியமா முனைவிடார் வெகுகாலமாகில்
அதீத புருடரத்தின மென்றருளுவா ரையா
விசியமா முனது மேலதிமோக மாவார்
விரகதா பத்துடனே கொஞ்சுவாரையா
நசியமாம் நாள்தோறும் புருடலீலையாகில்
நமஸ்கரித்துச் சரணமெனப் பணிவார்தானே. 478

மதனகாமேசுரம்

பணியவேயின்னமொரு கருசொல்லக் கேளையா
பாடுகிறோ மதனகாமசுரந்தான் கேளு
அணிய வெகுநூல்களது அதிதமதாய்ச் சொன்னோம்
ஐந்நூற் பலதிரட்டது போலருளவில்லை நாமும்
வணியதொரு கெஞ்சாபூ வில்மூன்று பலம்வாங்கி
வனமாக விரைக்காம்பு இலைமூன்றுந்தள்ளு
நணியவாவின் பசும்பால் நாழியது கொண்டு
நலமான கெஞ்சாகை பாலிற்றாக்கே. 479

தாக்கியே யிருசாம மூறவைத் தெடுத்துச்
சாதிக்கா யிருபலந்தான் தான்றிக்காய் பலந்தான்
ஆக்கியே சாதிபத்திரி பலமது தானாகு
மருளான திப்பிலியு மிருபலந்தா னாகும்
நோக்கியே கோஷ்டமது ஒருபலந்தானாகும்
கூராகைக் கதுவு மிருபலந்தானாகும்
வாக்கியே லவங்கப்பூ விருபலந் தானாகும்
வளமான மிளகதுவு மிருபலந் தானாமே. 480

ஆமென்ற லவங்கப்பட்டை யிருபலந் தானாகு
மருளான ஏலரிசி ஒருபலந்தா னாகும்
பாமென்ற பறங்கிப்பட்டை யிருபலந் தானாகும்
பரிவான கருசீர மொருபலந்தா னாகும்
வாமென்ற வால்மிளகு ஒருபலந்தா னாகும்
வளமான பூனைக்காலி வொருபலந்தா னாகும்
ஏமென்ற எட்டிக்கொட்டை யிருபலந்தா னாகு
மியலபான நற்சீரகம் பலந்தான் ரண்டே. 481

ரெண்டான மராட்டிமொக்கு இருபலந் தானாகும்
நேரான கோரோசினை ஒருபலந் தானாகும்
மன்றான தனியா ஒருபலந் தானாகு
மருளான வாரைப்பட்டை பலம்ரண்டு
நன்றான நாயுருவி வேருபல மொன்று
நலமான வாடிவேர ரைப்பலந் தானாகில்
பொன்றான பூனைக்காலி விரைபலந் தான்ரண்டு
புகழான நிலப்பனைவேர் ரண்டுபல மாமே. 482

வேரான கவிழ்தும்பை வேறுபலம்ரண்டு
வில்வவேர் பலமிரண்டு இதுவகைகள் வேர்தான்
ஓரான வுரலதனி லிதுவெல்லா மிட்டு
ஒருசாமம்மா வதுபோ லோகோகோ சாடி
ஆரான அம்மாவைத் தோண்டி வடித்தெடுத்
தரகரா வடிகட்டி மாப்பதனஞ் செய்து
தோரான கோர்க்க மூலிச்சாற் படிதான்
தெளிவான தென்னங்கள் படியது தானாகும். 483

ஆமென்ற பனங்கள்ளு படியதுதா னாகும்
யானைக்கள் படியது தானத்திப்பால் படிதான்
வாமென்ற பனங்கற்கட்டு இருசேரு கூட்டி
வளமான பசுநெய்தான ரைப்படியாகில்
போமென்ற பூமுலையாள் முலைப்பால் தானாழி
புகழான இவ்வகைகள் சட்டிதனிற் றாக்கி
நாமென்ற விவையெல்லாம் வற்றவரைச்சாமம்
நாட்டுவா யடுப்பின்மே லேற்றி வன்னிமூட்டே. 484

மூட்டியே ஒன்றுக்கு முக்கா லஃதானால்
முன்பிடித்த மாவெல்லாஞ் சட்டிதனிற் றாக்கி
நாட்டியே யதைக்கிளரு லேகியம் போலாகும்
நலமான லேகியத்தை யிறக்கி யாறவைத்து

பாட்டியே வைரவர்க்கு ஈசான்ய பூசை செய்து
பண்புடைய வாலைபூசை பரிவாகச் செய்து
ஆட்டியே மதனகாமேசுரந் தான்போல
அரிதரிது விந்து கல்லாக்கிடு மிதுதாமே. 485

அரிதான லேகியத்தி லிருகுன்றி யெடுத்து
அருள்பெறவே நாளொன்றுக் கிரண்டுவேளை யாகில்
மருதான மண்டலந்தான் கொண்டீராகில்
மகத்தான மேகமெல்லா முடலைவிட்டுப் போச்சு
நருதான விந்ததுவுங் கல்லாகிவிடும் பார்
நலமான செடலமதா யாச்சுதே யாகில்
வருதான மூன்றுகுன்றி லேகியத்தி லெடுத்து
வடமாக வுண்டுவிட லாகரிதா னாமே. 486

நாகுமே ஸ்திரீகளுட னனுபவிக்கும்போது
நல்லசலம் நாழியது வுண்டு விட்டுநீயும்
ஆகுமே யவளுடனே யனுப்பு வீராகி
லரகார சாமமது மூண்று விசையாகில்
வேகுமே விந்துனக்கு விடாதையா பாரு
விபரமுட னுனைவிடார் மெல்லியர்கள் மைந்தா
மாகுமே வெகுகால மாதுவிடா லையா
மாண்டாலு மும்முடனே மாளுவாள் தானே. 487

தானான மதன காமேசுரந்தான்
தனதாகச் சொல்லிவிட்டோம் தருவாய் நாளும்
வேனான வேதாந்திகட்டு பலித சித்தி
வெறும் பேச்சால் திரியுமந்த வீணர்க்காக
ஆறான வமிசையுள்ளோர்க் கதிகமாகும்
அமிசையில்லா மாடுகட்கு அருளாதையா
கானான கருக்குருவை யறிந்தாரானால்
கருவான பலதிரட்டின் கருகாண் பாரே. 488

கருவான கருக்கெல்லாம் நன்றாய்ச் சொன்னோம்
கருணை பெரு மைஞ்ஞூறு பலதிரட்டில்
அறிவான வெண்ணூறு முந்நூறும்பார்
அதிதமெனு நூறுடனே ஐம்பதுதான் பாரு
வருவான முப்பதுட னிவ்வளவும் பாரு
மகத்தான பஞ்சகாவியந் தான்பாரு
மருவான சூத்திரங்க ளாய்ந்து பார்த்தால்
மதிதமெனும் வாதியென்றும் வகுக்கலாமே. 489

வகுக்கவே யின்னமொரு கருவைக் கேளும்
வசனிப்போம் புலத்தியனே வளமாய் தானும்
நகுக்குவே முன்சொன்ன செகசாலத் தயிலம்
நளினமதாய் விராகனெடை நன்றாகக்கொண்டு
அகுக்கவே கற்பூரம் விராகனெடை யாகில்
வருளான பச்சைக்கற்பூரம் விராகனெடையாகும்
ககுக்கவே கள்ளிப்பால் விராகனெடை யிட்டுக்
கடம்பையின் பிச்சு விட்டுத் தில்லைப்பால் பணவிடையே. 490

இடையான இவ்வகைகள் மதித்துக் கூட்டி
இயலான வொருவேரு செம்பைக் கொண்டு
அடையான மூசைதனில் செம்பைத் தாக்கி
அத்திப்பால் நிம்பப்பழஞ்சாறு கூட்டி
வடையான மூசைதனில் சாறுவிட்டு
வளமாக வுலைக்கடத்தி லூதும் போது
தடையில்லா மதித்துத் தயிலந்தன் னைத்
தாக்கிடவே செம்பதனில் பத்தரை மாற்றாமே. 491

மகத்தான தாம்பிரந்தான் மணிபோலாடு
மயங்காதே யென்மகனே யிந்திரசால வித்தை
எகத்தான மாற்றுரைத்தால் சோதியொளி போலாம்
எட்டுச்சாம முதற்கொண்டு அதினிற மெத்தாகும்
மகத்தான மகாராச பட்டணமே யோகி
பரிவான மிதைமாற்றிக் கொண்டு
செகத்தான செலவுசெய்து அப்பட்டணமே விட்டுச்
செயலாக விருகாதஞ் சென்றுபோ வென்றே. 492

சென்றுநீ வுலகமதி லிப்படி செண்டாடு
தேசமில்லை யுந்தனுக்குச் செகசால மிதுதான்
தென்றுநீ யிம்முறையைச் செய்துநீயப்பா
தெளிவான முப்பூவைத் தெம்பாக வறிவாய்
கொண்டுவிடு வதன்பிறகு கற்பமதைஐயா
குருவருள் தானுசைசெய்து குணங்குறியால் வாழ்வாய்
அண்டர்பிரான னுக்கிரக முந்தனுக் கெய்தும்
ஆட்டுக்கொள்வார் மெஞ்ஞானி யென்று அரனவர் தான் பாரே. 493

பாரப்பா புலத்தியனே ராசயோகி
பரிவாகச் சொல்லி விட்டோம் செகசால செம்பொன்
ஆரப்பா வறிவார்க ளிதனுடைய மகிமை
அறிந்தவரே சித்தனடா ஐந்நூற் திரட்டு
ஏரப்பா கருக்களெல்லா மிந்நூலிற் சொன்னோம்
எண்ணூறும் பார்த்திடுவா யென்மகனே நீயும்
வேரப்பா நிகண்ட தாதிதன்னைப் பாரு
விளம்பினோம் வைத்திய காவியந் தன்னைப்பாரே. 494

தனையான வென்குருதான் வாலைசுப்பிரமணியார்
தனையருளும் வேதாந்த சாரமது கேளும்
அனையான பூர்வத்தில் கியானத்தா லருளும்
ஆயிரத் தைநூற் சகலகலைக் கியானம்
வணையான விந்தர சால மாயிரத்தைந்நூறு
வசனித்த வைத்தியந்தா னாயிரத்தைந்நூறு
பணையான ஞானமது முந்நூறுஞ் சொன்னோர்
பாடினா ரொருநூறு மெஞ்ஞான மாமே 495

ஞானமாங் கற்பது இருநூறுஞ் சொன்னார்
நலமான தீட்சையது முந்நூறுஞ் சொன்னார்
ஆனமாம் பூசை செய்து முந்நூறுஞ் சொன்னார்
அருளினார் பதியிரந்தா னுமையா
வானமா வதைக்குறுக்கி வெகு சூத்திரஞ் சொன்னார்
வசனித்தார் முப்பத்தோரு லட்சம் முன்னூலு
கியானமா மவருடைய நூலரிது மாகில்
கிடைக்கிறதும் வையகத்தி லதிதமது வாமே. 496

ஆமப்பா புலத்தியனே மவர்நூலைக் கண்டு
அதித கருவறிந்து நாமள வைத்தகாலம்
நாமப்பா கற்பமதால் யோகஞ் சாதித்தோம்
நலமான வாறுவரை யதிசயத்தைக் கண்டோம்
வாமப்பால் மணவறிவா லுண்டு களைதீர்ந்தோ
மனமற்ற சதாகால மவுனப் பாலுண்டோம்
கோமப்பால் குருவினடி யதிசயத்தைக் கண்டோம்
குறுமுனி தானென்ற வர்பேர் குறித்தாரே. 497

குறியான குருவினிட கடாட்சத்தி னாலே
கோடாகோடி சமாதியோகம் செய்தோநாமையா
அரியான அர்த்தமதை யறிந்தோ னவனாசான்
ஆறுமுக சரவணன் றானவனதீத மெத்த
பறியான தேவதைதான் புவனங்களின் மீது
பண்புடைய சுப்பிரமணிய னென்குரு தானாகும்
சறியான சச்சி தானந்த வாகடத்தில்
சதாகால மவர்க்கடிமை யகத்தியனு நாமே. 498

நாமான பெருநூலு சௌமிய சாகரந்தா
னாடதிலே காமுகர்க்கு வெளிவிட்டாயானால்
நூமான நூல்கொடுத்த நூல்மாற்றின தேயாகில்
நுகரான காமிகட்குங் கள்ளருக்குங் கொடுத்தால்
ஆமான வுலக சண்டாளர் மோசக்காரர்
அவர்களுக்கு நூல்கொடுத்தா லண்டவிடி யிடிக்கும்
சாமான கர்மநோய் கொண்டு மாண்டிடுவாய்
சார்வாகச் சொல்லிவிட்டோஞ் சிவயோகிகேளே. 499

கேளப்பா சிவஞானி நல்வினைக்கே யருள்வான்
 கெடியான தீவினையை யகற்றுவா ரையா
நாளப்பா செல்லாது விட்டகுறை யிருந்தால்
 நளின மெனுமத்தொரு வாசானும் வருவார்
கோளப்பா சொல்லவில்லை புலத்தியனே கேளும்
 குருவாசான் வரையுந்தான் மறந்திடாதே
வேளப்பா எரித்த சிவ னெனக்குச் சொன்னார்
 விதிமுறையை நாமறிந்து விளம்பினோ மைந்நூறே. 500

நூரான மெய்ஞ்ஞான வேதாந்த சாரம்
 நுண்மையாய் பலதிரட்டிந்நூல் கருவறிவோர்
வாறான மவுனகுரு மெய்ஞ்ஞான தவசி
 வாழ்வார்கள் வெகுகோடி யதீத கற்பங் கொண்டு
ஆறாத சிவயோகஞ் சத்தியிட போக
 மருளு மகாராச யோகங் கெவுன யோகந்தான்
தேறான வாசியோகங் குளிகை யோகந்தான்
 தேகப்பிராண யோகம் அயப்பா சயோக மென்றே. 501

யோகமாஞ் சமாதி யோகங் கற்பயோகங்
 ஓகோ தொண்ணூற்றாற் கருவியோகம்
யோகமாம் வாலையோகங் கனயோகந்தா
 னுருட்சியா மெய்ஞ்ஞான மவுனயோகம்
யோகமா மிதுவெல்லா முற்புசித்தா யானா
 ஒன்றான பூரணமாய் வாசிசித்தியாகும்
யோகமா மதன்பிறகு கற்பசித்தி யாகு
 மொருமை பரிபூரணத்தால் பிராண சித்தி யென்றே. 502

சித்தியா மப்பூவைக் கொண்டு செகவசியமாடு
 செணத்திலே யஷ்டமா சித்துவிளையாடு
அத்தியா மறுபத்து நாலு சித்துமாடு
 அறுபத்து நான்கு கலைக்கியான முதலாடு
விரத்தியாம் வேதாந்த பூரணத்தைக் காணு
 விளங்குஞ் சுழுமுனை காணு சாறுபலங்காணு
பத்தியாம் பசுபதியின் பாசங்காணு
 பலகலைக ளறிவதற்கு யெண்ணூறைக் காணே. 503

காணப்பா புலத்தியனே ஞானயோகி
 கனயோகி புத்ரனென்றால் கோர்வைநூல்காணு
ஆணப்பா வாதகாவியத்தைக் காணு
 அதன்கோவை சூத்திரங்க ளாய்ந்துபாரு

மாணப்பா வயித்திய காவியத்தைப் பாரு
மகத்தான மாந்திரீக காவியத்தைப் பாரு
ஆணப்பா ஞான காவியத்தைப் பாரு
அருளான லட்சண காவியத்தைப் பாரே. 504

பாரப்பா பஞ்சகாவியத்தின் சூத்திரம்
பன்மைபெறப் பாராட்டால் கழுதை யென்றுஞ் சொல்வேன்
சாரப்பா சௌமிய சாகரத்தைப் பாரு
சகலநூல் கருவறிய வகராதி யென்நூற்பாரு
தேரப்பா வதீதமெல்லாங் கண்டு களிகூர்ந்தாள்
தெளிவான மௌனகுரு வுபதேசஞ் சொல்வார்
ஆரப்பா அறிவார்க ளித்தனையும் பார்த்தால்
அறியலாங் குருவிருக்குந் தலமறிய லாமே. 505

அறியலாம் யோகசித்தி மவுனசித்தியாகும்
அடைவான மாந்திரீகஞ் சித்தியதுவாகும்
நரியலாஞ் ஞானசித்தி மூலசித்தி யாகும்
நாதாந்த பூரணமா யாறுவரை சித்தி
மரியலாம் பஞ்சபூதம் பிராணாயஞ் சித்தி
மகத்தான சிதம்பரமாம் வாலை சித்தியாகும்
நரியலாங் கணபதியுங் கந்தன் சித்தியாகும்
நளினமெனும் வீரபத்திரன் வைரவன் சித்தியாமே. 506

ஆமென்ற யின்னூலி லதிதமெல்லா
மருளான வாதமொடு வயித்தியஞ் சொன்னோம்
நாமென்ற மாந்த்ரீகம் ஞானமது சொன்னோம்
நலமான கருக்குருவும் நண்பாகச் சொன்னோம்
வாமென்ற சகலதொழில் நாதவிந்துஞ் சொன்னோம்
வசனித்தோம் சித்தரிட ஆட்டமெல்லாம் சொன்னோம்
பாமென்ற பலதிரட்டைந் நூறிது வாகில்
பாடினோம் சொச்சமில்லாப் பசுபதிவாழ் முற்றே. 507

அகஸ்தியர் சௌமிய சாகரத்தில்
ஞால சூத்திரத்திரட்டு- 500
முற்றிற்று

தாமரை
நூலகம்